வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

முக்கிய அறிவித்தல்

மில்க் வைற் நில சோப்

தற்பொழுது புதிய ரசாயன பொருட்கள் சேர்க்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

20 சதத்திற்கு எங்கும் கிடைக்கும்

கூடிய உடுப்புகளை சலவை செய்யலாம். இன்றே வாங்கி பரீட்சித்து பாருங்கள்.

புத்தகம்19 | திருவள்ளுவர் ஆண்டு 1996 புரட்டாதி திங்கள் 3-ம் நாள் (19—9—1965) ஞாயிற்றுக்கிழமை ஐ.அவ் 22 | இதழ் 17

சாதிக் கொடுமையை ஒழிக்க சங்கற்பம் பூணுவோம்

சமூகச் சீர்திருத்த வாரத்தில் தந்தை விடுக்கும் செய்தி

"நமது சொந்தச் சகோதரர்களில் ஒருசாராரைச் சமூக ரீதியில் ஒதுக்கி வைத்திருப்பதனாலேயே நமது அரசியல் சூழ் நிலையில் விடிவு ஏற்பட வழி கிடைக்கவில்லை. எமது சமூகத்தை வாட்டும் இச் சாதிக் கொடுமையை நீக்க நாம் அனைவரும் இவ் வாரத்தில் திட சங்கற்பம பூணுவோமாக" 19ம்திகதி முதல் சமூகச் சீர்திருத்த வாரத்தைக் கொண்டாடுவதென முடிவு செய்திருப்பதையொட்டி தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் விடுத்துள்ள ஒரு செய்தியில் இவ்வாறு கூறியுள்ளார்.

திரு.செல்வநாயகம் விடுத்துள்ள செய்தி முழுவிபரமும் வருமாறு:-

இலங்கையில், வேறு எந்தப் பாகத்தையும் விட யாழ்ப்பாணத்தில் தான் சாதிக் கொடுமை கோரத் தாண்டவம்புரிகிறது.ஆகவே இக்கொடுமையினை ஒழித்துக் கட்ட யாழ்ப்பாணத்தைச் சார்ந்த ஒவ்வொரு ஆணும் பெண்ணும் முன்வரவேண்டும்.

எம்மத்தியிலே உள்ள பின் தங்கிய வகுப்பாரை நாம் ஒதுக்குவதனால்தான் தமிழ் பேசும் மக்கள் இன்று அரசியலில் ஒதுக்கப்பட நேரிடுகிறது என்று நான் அடிக்கடி கருதுவதுண்டு.

சென்னையில் பிரதம நீதியரசராக விருந்த ஒருவர், 'நாம் நம் சகோதரர்கள் சிலரை 'பறையர்'களாக்கினோம். வெள்ளையனோ எம் அனைவரையும் பறையராக்கினான்' என்று ஒரு தடவை கூறினாராம். இவ்வாக்கு மீகவும் உண்மையானதே.

லிங்கனின் கருத்து

இதே கருத்துடன்தான் ஆபிரகாம் லிங்கனும் கீழ் கண்டவாறு கூறியிருக்கிறார்: 'சவுக்கடியால் சிந்தப்படும் ஒவ்வொரு துளி இரத்தத்துக்கும் வாள் வீச்சுத்தான் பதிலளிக்கவேண்டும்.' நீக்கிரோக்களை வெள்ளைக்கார எஜமானர்கள் கொடுமைப் படுத்தியதையும், வெள்ளைக்காரர்கள் தங்களுக்குள்ளேயே போரிட்டு இரத்தம் சிந்தியதையும் சுட்டிக்காட்டியே மேற்படி கருத்தினை அவர் தெரிவித்திருக்கிறார்.

எமது சொந்தச் சகோதரர்களை தீண்டாமை என்னும்கொடுமையினால்வாட்டி வதைப்பதை நாம் தொடரும்வரை, எமது அரசியலில் பரிபூரண மாற்றத்தை நாம் காணமுடியாது என்பதற்கு மேற்படி கூற்று ஒரு பாடமாக இருக்கும்.

கடந்த யுத்த காலத்துக்கு முன்னர் ஒருமுறை சென்னையிலுள்ள விடுதியின் உணவுச் சாலைக்கு எனது தேசிய உடையில் சென்றிருந்தேன். தேசிய உடையில்இருந்தேன் என்பதற்காக என்னை உணவு பரிமாறுவோன் திருப்பி அனுப்பிவிட்டான். இச்சம்பவம்,என்னை மிகவும் புண்படுத்திவிட்டது. தேனீர்ச் சாலைகள், உணவு விடுதிகள், சவரத் தொழிலகம் முதலிய இடங்களுக்குச்செல்லவொட்டாமல் எமதுசகோதரர்களை நாம் துரத்தியடிக்கும்போது அவர்களுடைய மனமும் இப்படித்தானே எப்போதும் புண்பட்டுக்கொண்டிருக்கும். ஆலயங்களுள் அனுமதிமறுப்பதை நாம் சுட்டிக்காட்ட வேண்டியஅவசியமில்லை.தற்கால சமுதாயத்தில் இத்தகைய பொதுவிடங்களுக்கு இவர்களைச் செல்லவொட்டாமல் தடுப்பதற்கு எமக்கு எதுவித உரிமையும் கிடையாது.

தமிழரசார்

கிராமப் புறத்துவீடுகளுள் இவர்களைஅனுமதிப்பதில்லை. எமது கிணறுகளில் நீர் மொள்ள விடுவதுமில்லை. தமிழரசுக்கட்சியைச்சார்ந்தவர்கள் சாதித்துவேசத்தை ஓரளவு நீக்கிவிட முனைவது உண்மையே. எனினும்போதுமான அளவு இத்துறையில் வேலைகள் நடைபெறவில்லை. முன்னேற்றம் மிகமிகச் சொற்பம்.

அரசாங்க-பொதுத் துறைகளில் வேலைக்கு ஆட்கள் பொறுக்கும் போதும் சில குறிப்பிட்ட வகுப்பார்கள் வேண்டுமென்றே ஒதுக்கப்படுவதாகவும் சிலர் கூறியுள்ளனர். இக்குற்றம் புரிபவர்கள் நமது சமூகத்தையே கெடுக்கின்றனர்.

சமூகக் குறைபாடுகளை நீக்கிவிட ஒதுக்கப்பட்டுள்ள இவ்வாரத்தில், துயருறும் எமது சகோதரர்களின் துன்பத்தைத் துடைக்க நாம் அனைவரும் திடசங்கற்பம் கொள்ளுவோமாக.

வெளியீட்டுப் பகுதியில் தமிழ் இருட்டடிப்பு

அரசாங்க வெளியீட்டுப் பகுதியினர் சில தமிழ் வெளியீடுகளை இருட்டடிப்புச் செய்வதாக நம் பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. இந்த இருட்டடிப்பு கடந்த சில ஆண்டுளாகவே நடைபெற்று வருவதாகவும் அறியப்படுகிறது.

அரசாங்க வெளியீட்டுப் பகுதியினரின் இருட்டடிப்புச் செய்கையினால் நிதி அமைச்சரின் வரவு-செலவு உரையின் தமிழாக்கம் இற்றை வரை பொது மக்களுக்கு கிடைக்கவில்லை. ஆனால் இவ் வுரையின் ஏனைய மொழி வெளியீடுகள் ஏற்கனவே விற்பனைக்கு வந்துள்ளன.

கடந்த ஆண்டிலும் இந்த தமிழ் இருட்டடிப்பு முறை சில அதிகாரிகளால் கடைப்பிடிக்கப்பட்டதும், அதையிட்டு தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் புகார் செய்து கொண்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நிதி அமைச்சரின் வரவு-செலவு உரை மட்டுமல்லாது இந்த ஆண்டுக்கான வரவு செலவு மதிப்பீட்டின்தமிழ்ப் பிரதியும் வெளியீட்டுப் பகுதியினரின் விற்பனை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை. ஆனால் மதிப்பீட்டின் தமிழ்ப் பிரதி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டதுகுறிப்பிடத் தக்கதாகும்.

'சிறீலங்கா' பத்திரிகையின் மாத இதழும் சில காலமாக வெளியாகாது நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் 'சிறீலங்கா'வின் சிங்கள மாத இதழ் ஒழுங்காக வெளிவந்து கொண்டேயிருக்கிறது.

இந்த இருட்டடிப்பு வேலைகள் கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்றுவருவதற்கு ஒரு சிலரின் வகுப்புவாதப் போக்கே காரணமாக இருப்பதாக நம்பப்படுகிறது.

கெடுபிடி நீங்கவில்லை

இலங்கை மத்திய வங்கியில் நிலவும் சிங்களக் கெடுபிடி முற்றாக நீங்கிவிடவில்லை என்பதை அண்மையில் நடைபெற்ற சில சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

மத்திய வங்கியில் அண்மையில் உருவான மொழி வழித் தொழிற் சங்கத்தின் பொதுச் செயலாளரான திரு. யோசப் அவர்களைச் சிங்களத்தில் கடமையாற்றும் வண்ணம் மேல் அதிகாரிகள் சிலர் நிர்ப்பந்தித்துள்ளார்களாம்.

மத்திய வங்கியின் தாணயப் பகுதியில் கடமை யாற்றிய திரு. யோசவ் அவர்களிடம் மேலதிகாரிகள் சிலர் அவர் வழமையாக செய்அவந்த வேலைகளுக்கு முற்றிலும் முரண்பட்ட முறையில் தனிச் சிங்களத்திலான கருமங்களைச் செய்யும் வண்ணம் பணித்தார்களாம். புரியாத மொழியில் தன்னால் கடமையாற்ற முடியாதென்றும், அத்தகைய வேலைகளைச் செய்ய தான் கடமைப்பட்டவர் அல்ல என்றும் திரு. யோசப் பதிலளித்துள்ளாராம்.

இச் சம்பவத்தையிட்டு உயர்தர அதிகாரிகளுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும், உயர் அதிகாரிகள் இது பற்றி ஆராய்ந்து வருவதாகவும் அறியப்படுகிறது.

சமூகச் சீர்திருத்த வார ஒழுங்குகள் யாவும் பூர்த்தி

சாதிக் கொடுமையை ஒழித்துக் கட்டுவதற்கேற்ற வகையில் யாழ். மாவட்டமெங்கணும் 19-ம் திகதி முதல் 25-ம் திகதி வரை சமூகச் சீர்திருத்த வாரம் கொண்டாடப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகள் யாவும் பூரணமாக முடிந்து விட்டதாக அறியப்படுகிறது.

சமூகச் சீர்திருத்த வாரத்தை இம்மாதம் 19-ம் திகதி முதல் 25 வரை யாழ்ப்பாணக் குடா நாடெங்கணும் கொண்டாட சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகி விட்டதாக அறியப்படுகிறது. சாவகச்சேரி பிரதிநிதி வி. என். நவரத்தினம் அவர்களும் கோப்பாய் பிரதிநிதி சி. சுதிரவேற்பிள்ளை அவர்களும் உள் நாட்டு அமைச்சர் திரு. தகநாயக்காவுடன் தொடர்பு கொண்டதை அடுத்து யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. என். டி. ஜெயவீரா தொடர்ந்து பல மாநாடுகளைக் கூட்டி சகல ஒழுங்குகளையும் செய்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல அரசாங்க அதிகாரிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் சமூகச் சீர்திருத்த வாரத்தையொட்டி பல சேவைகளைப் புரிய முன் வந்துள்ளனர். பாடசாலைகளுக்கான கட்டுரைப் போட்டிகள் முதலியனவும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கிராமங்கள்தோறும் இவ் வாரத்தில் பொதுக் கூட்டங்கள் நிகழும். பல பெரியார்கள், சமூகத்தில் சாதிக் கொடுமையால் ஏற்பட்டுள்ள தீமைகளையிட்டு, இக் கூட்டங்களில் பேசுவார்கள்.

அமரர் வன்னியசிங்கம் அவர்களின் நினைவு விழாவும் இக் காலத்திலேயே கொண்டாடுவதற்கு தமிழரசுக் கட்சிக் கிளைகள் பல ஏற்பாடுகளைச் செய்திருப்பதாகவும் தெரியவருகிறது. அமரர் வன்னியசிங்கம் அவர்கள் சாதிக் கொடுமையினை ஒழித்துக்கட்ட அயராது பாடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

"ஆனைக்கொம் பொத்த அழகான மார்பகத்தை ஏனோ மறைத்தாய் இளம் மயிலே?—நானுயதைப் பார்த்த முதற்கொண்டு பாவையே உன் நினைவால் வேர்த்து வடிகின்றேன் விண்!"

—அன்பு முகையத்தீன்.

35. கசப்பான உண்மை!

துரையின் பங்களாவின் மின்னொளியில் ஒளிர்ந்த தாமரகுமாரி, துரையை வாய்க்கு வந்தபடி திட்டிவிட்டு மின்னல் போல் மறைந்ததும், அந்த அதிர்ச்சி மீழ்வதற்கு மதுவின் துணையை நாடி மீண்டும் புதிய பலமும், தெம்பும் பெற்ற பின்னர் துரை கூறி முடித்த அந்த மர்ம வரலாற்றைச் சித்திரப் பாவைகள் போலிருந்து செவி மடுத்த என் அருமைக் கணவரும், குமரனும் உலகின் எட்டாவது அதிசயத்தைக் கண்ணுற்ற அதிசயம் கொண்டனர்!

மலையகத்தில் புதிய வாழ்க்கையை அமைத்த எங்கள் தாம்பத்திய உறவு, அந்த மலைப் பிரதேசத்தை வளம் படுத்திக் குதி போட்டு ஓடும் வற்றாத ஆற்றைப் போன்றும், அந்த மலைப்பிரதேசத்தில் சிலிர்த்துநின்ற பசுமை போன்றும், அங்கு பூத்துக் குலுங்கிய நூறு நூறு வண்ண மலர்கள் போலும், அந்த மலைப் பிராந்தியத்தைச் சீதளப் போர்வையுடன் போர்த்திருந்த தேன் பனி போன்றும் இதமான அழகோடும், சுவையோடும் வளரலாயிற்று. புது வேகமுடன் அவர் எனனுடன் இரண்டறக் கலந்த ஆவேசத்தில் நான் அடைந்த சுகம், அம்மம்மா சொல்லுந் தரமற்றது. நாளிலும், பொழுதிலும் என்னைப் பிசைந்து; பிழிந்து பிழிந்து சுகமும் சுவையும் தந்தார் என் கணவர். அங்கு பாயும் வற்றாத ஜீவ நதி போன்று எங்கள் இருவரிடத்திலும் இன்ப ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடியது! என்னை அவரும், அவரை நானும் உறிஞ்சிய வேகத்தில் ஜனித்த இன்பத்தை இன்று நினைத்துக் கொண்டாலும், வாழவேண்டும் என்ற ஆவேசம் என்னுள் கிளர்ந்து எழுகின்றது!

ஒரு நாள் இரவு எங்கள் இல்லத்தில் ஒரு விருந்துக்கு ஏற்பாடாகியிருந்தது. விருந்துக்குரிய சுதாநாயகி எங்கள் பாடசாலையில் பணி புரிந்த இலட்சுமி டீச்சர்! இலட்சுமி டீச்சர் திடீரென்று தமது சொந்த ஊருக்கு மாற்றலாகிச் செல்லுதை முன்னிட்டு பிரத்தியேகமாக அவளை எங்கள் இல்லத்துக்கு அழைத்து ஒரு பெரிய விருந்து வைத்தோம். விருந்து முடிந்ததும் என் கணவரே அவளை அவளுடைய வீட்டுக்குக் கூட்டிச் சென்றார். திரும்பி வருவதற்குச் சற்று அதிகமாகவே நேரம் எடுத்தது. அப்படியொன்றும் எனக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை! எங்கள் திருமணத் தினத்தன்றே என் கணவருடைய மனப் பெட்டகத்தைத் தரிசித்தவள் அல்லவா நான்!

இலட்சுமி டீச்சர் மாற்றலாகிச் சென்ற ஆரம்ப நாட்களில் கடிதப் பரிமாற்றம் சற்று வேகமாக நடைபெற்றதும் உண்மை; அப்பால் காலதேவனின் இரக்கமற்ற ஆட்சியினால் அது அருகி அவளுடைய திருமண அழைப்பிதழோடும், எங்கள் வாழ்த்துத் தந்தியோடும் முற்றுகத் தடைப் பட்டதும் உண்மை! எனக்கு என் கணேசர் வாய்த்ததுபோல் அவளுக்கும் ஒரு 'கணேசன்' வாய்த்ததில் வியப்புற என்ன இருக்கின்றது; ஆனால் எங்களுக்குள் நிகழ்ந்த 'சுயதரிசனம்' அவர்களுக்குள்ளும் நிகழ்ந்திருக்கலாம் என்பதற்கு எந்தவிதத் தரவுகளும் இல்லை!

நாட்கள் செல்லச் செல்ல எங்கள் அருகிலேயே இருந்த தாமரகுமாரி என்ற மகா சக்தியினால் என் கணவர் ஈர்க்கப்பட்டு மரண வேதனையில் துடித்து மாய்ந்ததை என்னால் பூரணமாக உணர முடிந்தது.

என் கணவர் என்னையும், இந்த உலகையும், இந்த உலகில் அவரைச் சூழ்ந்திருந்த இனிய இன்பங்களையும் துறந்துவிட்டு அமரத்வம் பெறுவதற்குச் சில தினங்களுக்கு முன் என்னை அருகில் இருத்திக் கூறி முடித்த அவருடைய மீதிக் கதையில் மிகச் சுவை மிகுந்த பயங்கர முடிச்சுகள் அவிழ்ந்தன. தாமரகுமாரியின் ஒப்பற்ற அழகு எந்த எந்தக் கோணங்களில் அவரைச் சுட்டு எரித்தன என்ற இரகசியம் துலாம்பரமாகியது!

மலையகத்தில் என்னுடன் அவர் வாழ்த்த காலத்தில் அவர் பல, பல தடவைகள் வறுபட்டார். ஒரு கூடை ரோஜா மலர்களையும், ஒரு கோடி நட்சத்திரங்களையும் வாரி இறைத்தது போன்ற அவளுடைய சிரிப்பு எனும் 'சானல் நீரை' அநுபவிப்பதில் பல தடவை முயன்று தோல்வியுற்றார். அந்தத் தோல்வியினால் அவருடைய உளத்தில் ரோகம் புரையோடியது உளத்தைப் பற்றி ஆட்சி புரிந்த ரோகம், அவர் உடலையும் தாவி அவருடைய ஆண்மைக் கோட்டையைத் தகர்த்தெறியவும் முயன்றது.

கடைசியில் நிலை குன்றாது தாமரகுமாரியை நினைந்து அவர் புரிந்த ஊசி முனைத் தவம்—உபாசனை—அவருக்கு வெற்றியைத் தரக்கூடும் என்ற நம்பிக்கையில் இறுதி முயற்சியில் அவர் இறங்கிய தருணத்தில் அந்தப் பயங்கர முடிச்சு அவிழ்ந்தது!

ஒரு நாள்.....

முற்றிய நிலவொளியின் மிடுக்கான ஆட்சிப்போதினில், முற்றிக்களித்த தாமரகுமாரியைப் பிழிந்து பருகி, அவளுடைய அழகு முழுவதையும் தனக்குள் ஜீரணமாக்கி, அவள் பூமேனி பிரசவிக்கும் தூயமணத்தினைத் தன் உடலிலும் தன்னுடைய உடல் சிந்தும் மணத்தினை அவளுடலிலும் 'பண்டமாற்று'ச் செய்யும் குதூகல உணர்வோடு என்கணவர் தாமரகுமாரியின் இல்லத்துக்குச் சென்றார். பனி அரக்கனின் ஆட்சி வெளி உலகில் கொடிகட்டிப் பறக்கும் அந்தக் கடுங்குளிரில் என் கணவரின் உடல் கிடு கிடென்று நடுங்கியதா; அல்லது தாமரகுமாரியை அணைக்கப் போகின்றோம் என்ற ஆவேசத்தில் அவருடைய உடல் நடுக்கமுற்றதா என்பதைத் திட்டமாகக் கூறமுடியாது. பனிப்படலத்தில் மிதந்த தாமரகுமாரியின் குடிசையை நெருங்க நெருங்க என்கணவருடைய உள்ளத்தில் ஆசைப்பனி கௌவி உள்ளத்தை விறைக்கப் பண்ணியது. அந்த விறைப்பில் நுகைவும், தளர்வும் ஏற்படவேண்டுமானால், தாமரகுமாரி என்ற அந்த இதமான 'கணப்பை' நெருங்குவதை விடவேறு வழியில்லை. ஆவியுலகில் சஞ்சரிக்கும் பிசாசு போல என்கணவர் அந்தப் பனிப்படலத்தைக் கிழித்துக் கொண்டு தாமரகுமாரியின் குடிசையை அண்மினார்.

நெற்றிப் பொட்டு வெடித்துச் சிதறியது போன்ற ஓர் அதிர்ச்சி! இரத்தாசயம் பிய்ந்து தொங்குவது போன்ற ஒரு கோரம்!

தாமரகுமாரி, பறித்துத் தூவிய மலர்கள் போன்று படுத்து உறங்கிய அறையின் கதவைத் திறந்து கொண்டு மிகுந்த அவசரமாக வெளியேறிக் கொண்டிருந்தான் செம்பட்டை மனிதன் அமரசூரியா! பனிப்புகாரில் அவன் சென்று மறைந்த சிறிது நேரத்தில் தாமரகுமாரியும் வெளியேறி வேறொருதிக்கில் நடக்கலானாள்!

பல்லைக்கிட்டும் இந்தப் பனிக்குளிரில் தன் பட்டுடல் விறைக்க வெளிச்செல்வதற்கு அப்படி என்ன அவசரம் நேர்ந்தது தாமரகுமாரிக்கு? கங்கை நதி தீரமென்றும், புத்த விகாரம் என்றும் எங்கெங்கெல்லாமோ தாமரகுமாரியைச்சந்தித்து உரையாடிய செம்பட்டை மனிதனுக்கு; இன்று தாமரகுமாரியின் வீட்டுக்கே வருவதற்கு அப்படி என்ன தேவையேற்பட்டது? அவனும், அவளும் இந்த அகால வேளையில் ஆளுக்கொரு திக்கில் விரைந்து செல்வதற்குக் காரணம் என்ன? ஒருவேளை... ஒருவேளை..... அன்று துரையின் பங்களாவில் விடுபட்டுத் தடைபட்ட பணியைத் திரும்பவும் மேற்கொள்ளும்படி தாமரகுமாரியை நிர்ப்பந்தித்திருக்கின்றானா அந்தப் பரிதாபத்துக்குரிய துரதிர்ஷ்டசாலி?

என் கணவரின் மூளையின் இயக்கம் தடைபட்டு நின்றது. சிந்தனை தடைபட்டு நின்ற அந்த வறுமை நிலையில் திடீரென ஓர் உந்தல்! அந்த உந்தலே அவருக்கு அதிர்ச்சி வைத்தியமாக அமைந்து அவருடைய கடமையை உணர்த்தியது. குளிர்ந்த நிலவொளியில் விரைந்து சென்று கொண்டிருந்த தாமரகுமாரியை நெருங்கி அவள் கரத்தைப் பற்றித் தடுத்து நிறுத்தினார் அவர். எதிர்பாராத இந்த நிகழ்ச்சியால் துணுக்குற்ற தாமரகுமாரி, அடிபட்ட புறு போல் நடுங்கியபடி என் கணவருடைய முகத்தை ஏறெடுத்து நோக்கினாள். அந்த எதிர்பாராத சூழலில் என் கணவருடைய பிரவேசத்தினால் அவள் அடைந்த அதிர்ச்சியைவிட நூறுமடங்கு வேகமான அதிர்ச்சிக்குள்ளானார் என் கணவர்! காரணம், அப்பொழுது

[14-ம் பக்கம் பார்க்க]

தலைவனே! உன் நாமம் வாழ்க

—கோவை மகேசன்—

ஆறு ஆண்டுகள்...அம்மம்மா...சென்றன
அன்புத் தலைவனே! எமைவிட்டு ஏகினை;
ஊறுகின்றவிழி நீரைத் துடைத்திட
உன்னைப் போலொரு தலைவனிங்கில்லையே!
தேறுதல் இனிக்கிடைத்திட வேண்டுமேல்
தீரனே! மீண்டும் தமிழர்குடியினில்
பாலனாகப் பிறந்திடுவாய் ஐயா!
பைந்தமிழ் நலம் காத்திடுவாய் ஐயா!

வேறு

நெஞ்சினில் வீரம் தோன்றும்,
நினைவினில் உறுதி தோன்றும்,
வஞ்சக எண்ணம் கொண்டோர்
மனத்தினில் கலக்கம் தோன்றும்,
தஞ்சமென்றடைந்த பேர்க்கு
தாயாகும் கருணை தோன்றும்
கொஞ்சமும் கொள்கை மாறுக்
கோமகன் உருவம் தோன்றும்.

முத்துப்போல் சிரிப்புத் தோன்றும்
முத்தமிழ் கலந்து தோன்றும்
சத்தான கருத்துத் தோன்றும்,
சாந்தமும் சேர்ந்து தோன்றும்
எத்தரைக் கண்ட போது
எரிமலை யென்னத் தோன்றும்
சத்திய வடிவம் தோன்றும்
தமிழ் நெஞ்சம் அங்குத் தோன்றும்.

நேர்மைக்கு ஒருவன்; நல்ல
நீதிக்கு ஒருவன்; சொன்ன
வாய்மைக்கு ஒருவன்; கொள்கை
வழுவிடான் எங்கள் கோமான்
தோல்வியைக் கண்டபோது
துவண்டிடான்; நாடு காப்பான்
மேலவர் போற்றும் எங்கள்
மேலவன் சிங்கம் என்பேன்.

சாதியைச் சாடி நின்றான்
சமயங்கள் ஆக்கி வைத்த
பேதத்தை நீக்கி வைத்தான்
பிழையினைக் கண்டபோது
நாகம்போற் சீறி நிற்பான்
நற்றமிழ்ப்பண்பு காத்தான்
வாழ்விடம் காத்த எங்கள்
வன்னியன்; அண்ணல்; வாழ்க.

தமிழரசொன்றின் கீழ்தான்
தமிழர்தம் உரிமை கிட்டும்
தமிழரசொன்றின் கீழ்தான்
தமிழ் மொழி சிறந்துவாழும்
தமிழரசமைத்தல் ஒன்றே
தமிழர்தம் கொள்கை என்றும்!!
தமிழர சமைத்தே தீர்வோம்
தலைவனே உன்பேர் சொல்லி!!

மு. கருணாநிதி,
எழாலை, மேற்கு

கே: மந்திரிப் பதவிக்கு கொட்டாவி விட்ட, ஜி. ஜிக்கு சடைசிநேரத்தில் ஐ. நா. வுக்குப் போகும் போது மந்திரிப் பதவி கொடுக்காததன் மர்மம் என்ன?

ப: சந்தர்ப்பம் சரியாக இல்லாததுதான் காரணம். திரும்பி வந்து முயற்சி செய்வதாகக் கூறிச் சென்றுள்ளாராம்.

கே: ஒய் குயுக்திமாமாவே மூன்றும் உலக மகா யுத்தம் நடக்குமா?

ப: நடக்கலாம்-சீனா இந்தியா மீது கை வைத்தால்.

கே: 1956-ம் ஆண்டுக்கு முன் சேர்ந்த அரசாங்க ஊழியர்களுக்குச் சிங்கள அறிவில்லாமல் பதவியும் சம்பளமும் உயர்த்தப்படுமென்று வாயளவில் கூறியிருந்தும் செயலில் காட்டாமல் இருக்கிறதே?

ப: வாயளவில் அல்ல. அது மந்திரி சபையின் முடிவு. சிவப்பு நாடா தர்பாரால் முடிவு அமுலுக்கு வர காலதாமதமாகலாம்.

கே: திரு. சூ-என்லாய் தற்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ப: சூவுக்கு தலையிடி ஏற்பட்டிருக்கிறதாம். அதற்கான பிரச்சினைகள் சில:- (1) பாகிஸ்தானைக் கொண்டு இந்தியாவைப் பலவீனப்படுத்தி அதன் பின் இந்தியா மீது பாய்வதா? அல்லது இப்பொழுதே படையெடுப்பதா? (2) பாகிஸ்தானுக்கு உதவி செய்வதாகக் கூறிக் கொண்டே, உண்மையில் உதவி செய்யாமல், பாகிஸ்தான், இந்தியா இரண்டையும் இந்த யுத்தத்தில் பலவீனப்படுத்திவிடுவதா? (3) பாகிஸ்தானுக்கு ஆயுதங்களைக் கொண்டு அதனை பலப்படுத்திவிட்டால். பிறகு அதை விழுங்குவது கஷ்டமாயிருக்குமே. (4) பாகிஸ்தானை ஐ. நாவிலிருந்து விலகச் செய்து, சீனா, இந்தோனேசியா, பாகிஸ்தான், ஆல்பேனியா ஆகிய நாடுகளைக் கொண்ட போட்டி ஐ. நா. வைச் சிருஷ்டிக்கலாமா? (5) யுத்தத்தில் ஐ. நா. வின் சமரச முயற்சிகளை முறியடிக்க என்னென்ன செய்யலாம் இத்தியாதி.....

ஃ

இ. ஸ்ரீஸ்கந்தராஜா,
கொட்டாஞ்சேனை

கே: இந்திய-பாகிஸ்தான் போரில் பாகிஸ்தானுக்கு உதவியளிக்கப் போவதாக இந்தோனிஷிய ஜனாதிபதி கூறியுள்ளாரே இதைப் பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: இந்தோனேஷியா சீனாவின் கைப் பாவை. எனவே பாகிஸ்தானுக்கு உதவி அளிப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால், டச் ஏகாதிபத்தியத்திடமிருந்து இந்தோனேஷியா விடுதலை பெறுவதற்காக நேருஜி ஆற்றிய பணியையும் செய்த முயற்சிகளையும் இந்த சுகர்னோ மறந்து விட்டாரே, அதுதான் ஆச்சரியம்!

ஃ

ஆர். சரஸ்வதி, கொழும்பு-7

கே: கணவன் இறந்தால் மனைவி ஏன் அழுது புலம்புகிறாள்?

ப: அழ வேண்டுமென்ற சம்பிரதாயத்துக்காகவே பெரும்பாலும் அழுகிறார்கள். இச் சம்பிரதாயம் இல்லாவிட்டால் வாய் விட்டுக் சிரிக்கவும் சில பெண்கள் தயாராயிருக்கின்றனர்.

ஃ

ப. இராஜா, யாழ்ப்பாணம்

கே: நான் ஒரு விவாகரத்து செய்த பெண்ணைக் காதலிக்கிறேன். அவள் என்னைவிட ஒரு வயது மூத்தவள். அவளுக்கு ஒரு குழந்தையும் இருக்கிறது. நான் அவளைக் கலியாணம் செய்தால் எங்களுடைய வாழ்க்கை இன்பம் நிறைந்ததாக இருக்குமா?

ப: வாழ்க்கை இன்பம் நிறைந்ததாயிருக்குமா என்பது உங்களின் மனோநிலையை பொறுத்த விஷயம். விதவா விவாகத்தை ஆதரிப்பவன் நான்.

ஃ

எல். ஆர். நடராசா,
பாணந்துறை

கே: நான் வேலை செய்யும் கடையின் முதலாளி 'பொறுப்பில்லாதவன்', 'பொறுப்பில்லாதவன்' என்று அடிக்கொருதடவை என் மீது வசை பாடுகிறாரே. அவர் வாயை எப்படி மூடச் செய்யலாம்?

ப: உடனே கலியாணம் செய்துகொள்ளுங்கள். அதன் பின் உங்களைப் பொறுப்பில்லாதவன் என்று கூற அவரால் முடியாது.

ஃ

வி. டி. லெட்சுமி, அட்டன்

கே: கணவன்—மனைவி சண்டையில் இறுதி வெற்றி யாருக்கு?

ப: மனைவிக்குத்தான்—பலவீனமானவனுடன் சண்டை செய்தால், பலவானுக்குத்தானே வெற்றி?

ஃ

தவம், யாழ்ப்பாணம்

கே: நான் பாடசாலைக்குச் செல்லும் பொழுதும் வீடு திரும்பும் பொழுதும் எனக்குப் பிறகால் ஒரு மாணவன் வருகிறான் அவனை வராது தடுக்க வழியென்ன?

ப: அவனை ஏன் தடுக்க வேண்டும்? உங்களைப் பாதுகாப்பதற்காகவே அவன் பின் தொடர்ந்து வருகிறான். அவன் பின் தொடரும் வரை வேறு எவராலும் உங்களுக்கு ஆபத்து ஏற்பட முடியாது.

ஃ

கந்த. ஞானமுத்தன்,
கைதடி, தெற்கு

கே: இலங்கையிலுள்ள மக்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

ப: தொழிற்துறையில் வேலை வாய்ப்புகள் பெருமளவு கிடையாததால் விவசாயத்துறையில் வேலையில்லாதோரை ஈடுபடுத்த பெருமுயற்சிகள் நடைபெறுகின்றன. எல்லாத் துறைகளிலும் நாடு முன்னேறினாலன்றி வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. இதற்கு நீண்ட காலம் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

ஃ

பொ. இ. இரத்தினம்,
கொழும்பு-12

கே: திரு. பொன்னம்பலத்தின் சர்வகட்சி மாநாடு என்னவாயிற்று? அது எப்போது நடைபெறும்?

ப: சர்வகட்சி மாநாடு தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததுடன் சமாதியாகிவிட்டது. எனவே அவர் வேறு வழியின்றி இப்பொழுது சர்வ-தேச மாநாட்டுக்குச் சென்றுள்ளார். கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டாமல் இருக்கவேண்டுமே! அதற்காகத்தான் இந்த அமெரிக்கப் பயணம்.

எம். எம். ஏ. அப்துல் மஜீது,
நொச்சாயகமம்

கே: இலங்கைப் பாராளுமன்றத்தை முதன் முதல் திறந்து வைத்தவர் யார்?

ப: அந்தக் கட்டடத்தின் காவற்காரன்.

கே: இருமனம் கலந்து விட்டால் திருமணம் எதற்கு?

ப: கலந்துவிட்டதற்குப் பகிரங்க 'லைசன்ஸ்' வேண்டாமா? அதற்காகத்தான் திருமணம்.

ஃ

சு. பாலகிருஸ்ணன்,
வெள்ளவத்தை

கே: இந்திய-பாகிஸ்தான் பிரச்சினையில் சமாதானத் தீர்வை சீனா மறைமுகமாக நாசம் செய்து கொண்டிருந்தால் ஐ. நா. சபை என்ன செய்யும்?

ப: ஏற்கனவே சீனா நாசம் செய்யத் தொடங்கிவிட்டது. ஐ. நா. காரியதரிசியிடம் பாகிஸ்தான் சமர்ப்பித்த 3 அம்சத் திட்டமே சீனாவுடையது தான். அத்திட்டம் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த மட்டுமே பயன்படும். இந்த நாசவேலையில் சீனாவுக்கு இருவித பிரயோசனம் உண்டு. ஒன்று சமாதான முயற்சியை முறியடிப்பது. மற்றொன்று, அதன் மூலம் ஐ. நா. வைச் செல்லாக் காசாக்குவது.

ஃ

திருமதி செல்லையா,

கே: பெண்கள் எதற்காகத் தங்களை அலங்கரித்துக் கொள்கிறார்கள்?

ப: தாங்கள் 'அழகில்லாதவர்கள்'' என்ற தாழ்வு மனப்பான்மைதான் தங்களை அலங்கரித்துக் கொள்ளக் காரணம்.

கே: ஒரு ஆண் இரு பெண்களை விவாகம் செய்கிறார் அது போல் ஒரு பெண்ணும் இரு ஆண்களை விவாகம் செய்வதில் என்ன தவறு?

ப: தவறு இருப்பதாக கூறியவர் யார்? ஆனால் இரண்டும் சட்டப்படி குற்றமே!

சி. பொ. ஈழத்துமணி,
யாழ்ப்பாணம்

கே: சிறிமா, என். எம், சென்மன் குழுவினர் தமிழ் பேசும் மக்கள் மீது இவ்வளவு பொறுமையாக வகுப்புவாதம் பேசுவதின் நோக்கம் என்ன?

ப: சிங்கள மக்களை அரசாங்கத்துக் கெதிராகத் திருப்புவதே நோக்கம்.

ஃ

க. பார்த்தசாரதி ராஜா,
தாவடி

கே: தமிழ் மொழி மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் தனிச் சிங்கள சட்டத்தின் கதி என்னவாகும்?

ப: சிங்களச் சட்டம் அமுலில் இருக்கும். ஆனால் அதனால் தமிழ் பேசும் மக்கள் பாதிக்கப் படாதிருக்க தமிழ் மொழி மசோதா பாதுகாப்பு அளிக்கும்.

ஃ

மணிமலர், கண்டி

கே: என் காதலர் சதா என்னைச் சுற்றி சுற்றி வருகிறார். ஒரு விநாடி கூட என்னை மறந்திருக்க முடியவில்லையாம். காதல் விஷயங்களில் கரை கண்ட குயுக்தியாரே, இதற்கு என்ன செய்யலாம்?

ப: இதோ அதற்கு சுலபமான வழி. இருவரும் உடனே திருமணம் செய்து கொள்ளுங்கள். அதன் பின் ஒரு விநாடி என்ன-பல மணி நேரம் கூட ஒருவரை ஒருவர் மறந்திருக்கலாம்.

ஃ

ஆர். எஸ். எஸ். சிவம்,
கொழும்பு-10

கே: 18 ஆண்டுகளாக காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க முடியாமலிருக்கிறதே! அதுஎன்ன அவ்வளவு பெரிய பிரச்சினையா?

ப: தீரும்வரை பெரிய பிரச்சினையாக இருக்கும். தீர்ந்த பிறகு சாதாரண விஷயமாகிவிடும். தீர்ந்து போன எந்தப் பிரச்சினையும் சாதாரண விஷயமே!

ஃ

பி. எஸ். எம். பர்னாந்து,
நீர்கொழும்பு

கே: மனிதன் சிரிக்கிறான், பிறகு அழுகிறான். ஒன்றுக் கொன்று முரணான இவ்விரு செயல்களையும் ஒரே மனிதன் ஏன் செய்கிறான்?

ப: இன்பமயமான வாழ்க்கை நடத்த வேண்டுமென்று உறுதி பூண்டு, துன்பமயமான வாழ்க்கை நடத்துகிறவனல்லவா மனிதன். ஆகையால்தான் அந்த முரண்பாடு.

போர்க் கோலம்

இந்தியா-பாகிஸ்தான் யுத்தத்தினால் கொப்பரா-தே. எண்ணெய் விலை அதிகரித்துள்ளது.

—செய்தி.

இரு பொருட்களும் யுத்தத்துக்குக் கிளம்பிவிட்டன போலும்.

பரிசிலனை நிலையம்

உலக வங்கியிலிருந்து மேலும் பல நிபுணர்களின் குழு இலங்கை வரவிருக்கிறது.

—செய்தி.

அவர்களுடைய நிபுணத்துவத்தைப் பரிசிலிக்க இலங்கைதான் கிடைத்திருக்கிறதா என்று நமது விடாக் கண்டர் விசனத்துடன் வினவுகிறார்.

திரிப்பு நிபுணர்

யுத்தச் செய்திகளைச் சேகரிக்க நூற்றுக்கணக்கான வெளி நாட்டு நிபுணர்கள் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் வந்துள்ளனர்.

—செய்தி.

தங்கள் கயிறு திரிப்பு வேலைகளின் கைவரிசையை இனிமேல் நன்கு காட்டுவார்கள் என்பதை எதிர்பார்க்கலாம்.

தவறு தீர்மானம்

'போரயாத் தினங்களில் தவறணைகளையும் மது விற்பனை நிலையங்களையும் மூடிவிடுக'

—கொழும்பு முனிசிப்பல் சபை.

இத் தீர்மானத்தை செய்த கொழும்பு முனிசிப்பல் சபை உறுப்பினர்களை எதிர்வரும் தேர்தலில் ஒரு கை பார்த்து விடுவதென கொட்டாஞ்சேனையிலுள்ள குடியர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

வெடி குண்டு

இந்தோனேஷியா தன்னுடையதென உரிமை கொண்டாடும் அணுக் குண்டை, சீனா தானே செய்து வெடிக்கவைக்கப்போகிறது.

—செய்தி.

இந்தோ-பாகிஸ்தான் யுத்தம் தொடங்கிய காலம் தொடக்கம் இந்தோனேஷியாவும் பாகிஸ்தானும் வெடித்து வரும் சொற்குண்டுகளைவிட இவ்வணுக்குண்டு சக்தி வாய்ந்ததாக விருக்குமா, என்று ஒரு சந்தேகப் பிராணி கேட்கிறார்.

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL
ஆனந்தா
THEEKA STREET COLOMBO 11

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசதுடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்புக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா கைலத்தை''த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.

தோட்டத் தொழிலாளரை 24 மணிநேரத்தில் வேலை நீக்கம் செய்யும் அநியாயச் சட்டம்

தமிழரசு எம். பி. கண்டனம்

நோர்வூட் கூட்டத்தில் பேச்சு

தோட்ட முதலாளிகள் விரும்பியபடி 24 மணி நேரத்தில் ஒரு தோட்டத் தொழிலாளியைக் காரணம்எதுவும் காட்டாது வேலை நீக்கம் செய்யத்தக்க கொடிய சட்டம் இன்றுள்ளது. இதனை நீக்குவதற்காக நான் பாடுபடுவேன். அத்துடன் மலைநாட்டுத் தமிழ் மக்களின் கல்வித் தரத்தை உயர்த்தவும் பள்ளிக்கூடங்கள் அமைக்கவும் கல்வி மந்திரியையும், தொழில் மந்திரியையும் கண்டு பேசி உரிய நடவடிக்கை எடுப்பேன் என்று தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் நோர்வூட் கடை வீதியில் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற ஒரு மாபெரும் தோட்டத் தொழிலாளர் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

கூட்டம் ஆரம்பமாகு முன்பு ஒரு பிரமாண்டமான ஊர்வலமும் நடைபெற்றது.

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் மாபெரும் ஊர்வலம் வெஞ்சர் என்ற இடத்தில் இருந்து 5-9-65 மாலை 2மணிக்குத் தொடங்கியது. திரு. கா. பொ. இரத்தினம் அவர்களுக்கும் மத்திய வங்கி தமிழ் ஊழியர் சார்பாக கலந்து கொண்ட ஈழவேந்தன் அவர்களுக்கும் மாலைகள் அணிவித்து ஊர்வலத்தில் அழைத்துச் செல்லப்பட்டார்கள். வழி நெடுக தமிழ் அரசுக் கட்சியின் மூவர்ணக் கொடி தாங்கிய மக்கள் அணிவகுத்து நின்றனர்.

'தந்தை செல்வநாயகம் வாழ்க! நாகநாதன் வாழ்க! தமிழ்ப் புலவர் கா. பொ. இரத்தினம் வாழ்க! ஈழம் எங்கள் நாடு! இந்தியா போக மாட்டோம், சிறீமாவோ-சாத்திரி ஒப்பந்தத்தைக் கிழித்தெறி! குடியுரிமை,வாக்குரிமை,மொழியுரிமை, நிலவுரிமை வேண்டும்! இடதுசாரிகள் ஒழிக! என்ற கோசங்கள் வானைப் பிளக்க தமிழ்த் தாயக்குலமும், தந்தையர் கூட்டமும், இளைஞர் குழாமும் அணிவகுத்து ஊர்வலத்தில் சென்ற காட்சி கண்கொள்ளாத காட்சியாக இருந்தது.

ஊர்வலம் கூட்டம் நடைபெற்ற நோர்வுட் கடை வீதி (ராசா பேக்கரி மைதானத்திற்கு) வந்தடைந்ததும் திரு. பி. கே. வேலு (மாவட்டச் செயலாளர்) தலைமையில் கூட்டம் ஆரம்பமாயிற்று.

திரு. கா. பொ. இரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:—

'நான் த. அ. கட்சியின் சார்பில்மலையகதமிழ்மக்கள் முன்பு பேசுவதில் பெருமையடைகிறேன். இன்று மலையகத் தமிழர் பற்றி உண்மையான அக்கறையுள்ள கட்சி ஒன்று இலங்கையில் உண்டென்றால் அது தமிழ் அரசுக் கட்சிதான்.உங்களுக்குவரும் பேரிடர்களைத்திர்ப்பதற்குத் த. அ. கட்சிப் 14 பாராளுமன்ற உறுப்பினரும்இரண்டு மூதாவை உறுப்பினர்களும் ஓடோடி வருவார்கள்.

தொண்டமானை நம்ப வேண்டாம்

தொண்டமானையோ அசிஸ்சையோ நம்பி அவர்கள் ஊடாக உங்கள் பிரச்சினைகளை தீர்க்கலாம் என்று முதலில் எண்ணினோம். அது பயன்அளிக்காத வீண்வேலை என்பதை உணர்ந்தே உங்களோடு நேரடியாகத் தொடர்புகொள்ள இலங்கைத் தொழிலாளர் கங்கத்தை தோற்றுவித்துள்ளோம்.

ஈழவேந்தன் உரை

ஈழவேந்தன் அவர்கள் பேசுகையில்: ஆயிரத்திற்கு மேற்பட்ட சிங்கள ஊழியர்கள் உள்ள இலங்கை மத்திய வங்கியில் ஏறக்குறைய 150 தமிழ் ஊழியர்கள் மட்டும் பணியாற்றும் இந்நிறுவனத்தில் தமக்கென ஒரு 'மத்திய வங்கி தமிழ் ஊழியர் சங்கத்தை' உருவாக்கி மத்திய வங்கி ஆட்சி பீடத்தையே கதிகலங்கச் செய்ய முடியுமென்றால் பல்லாயிரக் கணக்கில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தொழிலாளர் கழக உறுப்பினர்களாகிய நீங்கள் விரும்பின உங்கள் உரிமையை நிலைநாட்டுவது கடினம் அல்ல என்றும் தொண்டமான், அசஸ் ஆகியவர்களின் தொழிற் சங்கங்களோடு ஒப்பிடுகையில் உங்கள் தொழிற் சங்கத்தின் எண்ணிக்கை கொஞ்சம் குறைந்து இருப்பினும் உங்கள் எண்ணத்தில் ஏற்றம் ஏற்படின்-ஒற்றுமை உணர்ச்சி நிலையின் வெற்றி உங்களை நாடிவருவது உறுதி என்றும் கூறினார்.

கட்சி என்றும் கைவிடாது

மேலும் அவர் கூறுகையில் இ. த. அ. கட்சியின் தோற்றத்திற்கே மலைநாட்டுத் தமிழ் மக்களின் பிரச்சினை முக்கிய காரணமாய் அமைந்திருப்பதால் தமிழ அரசுக்

(5-ம் பக்கம் பார்க்க)

பாரதி விழா

கடந்த 11-9-65ல் ஐம்பதேக்கர் தோட்டம் 'வள்ளுவன் மன்றத்' தினர் பாரதியார் விழாவை மிகவும் சிறந்தமுறையில்கொண்டாடினர். விழாவுக்கு மன்றச் செயலாளர் திரு. இராமா. வடிவேலு தலைமை தாங்கினர். விழாவில் பிரதானப் பேச்சாளர்களாக கைவேண்ட்சு கல்லூரி ஆசிரியர்களான திருவாளர்கள் கந்தையா, கிரஷ்ணப்பிள்ளை ஆகியோரும் கொட்டக்கலைத் தோட்டப்பாடசாலை ஆசிரியர் திரு. சிற்றம்பலம் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

'இன்று முதன் முறையாக ஐம்பதேக்கர் தோட்டத்தில் இவ்வளவு சிறந்த முறையில் பாரதியார் விழாவைக் கொண்டாடுகிற பொழுது தமிழர்களாய்ப்பிறந்த நாம் எம்மொழிக்கு எவ்வளவு சிறப்பைக் கொடுக்கவேண்டும் என்பதை, யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம் என பாரதியார் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். அவர் இயற்றிய பாடல்கள் ஒவ்வொன்றும் சின்னஞ்சிறு குழந்தைமுதல் வயோதிகர் வரை யாவரும் எளிதில் விளங்கக் கூடியவையாய் அமைந்துள்ளது. ஆயுதம் ஒரு நாட்டுக்கு மிகப் பிரதானமானது. ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம், ஆலைகள்வைப்போம் கல்விச் சாலைகள்

(9-ம் பக்கம் பார்க்க)

மத்திய வங்கியில் தமிழ் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லையா?

பாராளுமன்றத்தில் நவரத்தினம்

இலங்கை மத்திய வங்கியின் மாதாந்த அறிக்கைகளைத் தமிழில் வெளியிடும் படியும், கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சையில் தமிழில் தேறியவர்களுக்கு மத்திய வங்கியில் வேலை வாய்ப்புகள் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்றும் நிதி அமைச்சின் மானியம்மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் ஊற்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வ. நவரத்தினம் குறிப்பிட்டார்.

இவ்விவாதத்தில் கலந்து கொண்டு கிளிநொச்சித் தொகுதிப் பிரதிநிதி திரு. கா. பொ. இரத்தினம் பேசுகையில் 'மத்திய வங்கி' என்று நல்ல தமிழ்ச்சொல் இருக்க 'ஸ்ரீ லங்கா மகாவங்கி' என்று, மத்திய வங்கியின் பெயர்ப்பலகையில் தமிழ் மரபுக்கு முரணான முறையில் பெயரைப் பொறிக்க எடுக்கும் முயற்சியைக் கண்டித்தார்.

திரு. நவரத்தினம் தனது உரையில் கூறியதாவது:-

'இலங்கை மத்திய வங்கி சம்பந்தமாகச் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இலங்கை மத்திய வங்கியிலே கடந்த காலங்களில் மொழிப்பிரச்சினை சம்பந்தமான சில அசம்பாவித சம்பவங்கள் நடத்திருக்கின்றன. அவை சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று நினைக்கிறேன். அதைத் தொடர்ந்து வளரவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

'இலங்கை மத்திய வங்கி இலங்கையின் பொது மக்கள் அனைவரும் அறியக் கூடிய விதத்தில் அறிக்கைகளையும் வெளியீடுகளையும் வெளியிட வேண்டும் என்பது சட்டத்தில் விதிக்கப்பட்ட விதி. ஆனால் அதை அவர்கள் கடைப்பிடிக்கிறார்களா என்பது சந்தேகம். இப்பொழுது ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் அவர்களுடைய மாதாந்த 'புலட்டீன்களும்' மற்றைய வெளியீடுகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆனால் தமிழ்பேசும் மக்களும் வாசித்து அறிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு மாதாந்தப்'புலட்டீன்களும்' மற்றைய வெளியீடுகளும் வெளிவரவில்லை என்பதை மிகவும் கவலையுடன் அமைச்சரவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். Monetary Law—சட்டத்தின் 25 ஆவது பிரிவின்படி பொது சனங்களும் அறியக்கூடிய விதத்தில் அவர்கள் அறிக்கைகளை வெளியிட வேண்டும் என்று சட்டம் செல்லுகிறது.

'பொது சனங்கள்' என்று சொல்லும் பொழுது அது இலங்கையிலே வாழுகின்ற சிங்களம் பேசும் மக்களையும், தமிழ் பேசும் மக்களையும் குறிக்கும். இலங்கையில் சிங்களம் பேசும் மக்களும் தமிழ் பேசும் மக்களும் வசிக்கிறார்கள். இலங்கையிலேயிருக்கும் சனத் தொகையில் ஏறக்குறைய மூன்றிலொரு பகுதியினர் ஆங்கிலத்தை அல்லது சிங்களத்தை அறியாதவர்கள். அம்மொழிகளை

வாசித்து விளங்கிக்கொள்ளக்கூடிய சக்தியில்லாதவர்கள், ஏறக்குறைய முப்பது இலட்சம் தமிழ் பேசும் மக்கள் இருக்கும் இந்த நாட்டிலே, அவர்களில் நூற்றுக்கு தொண்ணூற்றெட்டு அல்லது தொண்ணூற்றொன்பது விதத்தினர் தமிழ்மொழியை மாத்திரமே தெரிந்தவர்கள். ஏனையோருக்குத்தான் ஆங்கிலம் தெரியும். ஆகையால் தமிழ் மாத்திரம் தெரிந்த மக்கள் இலங்கையின் நிதி நிலைமை எப்படி இருக்கின்றது? மத்திய வங்கி எப்படிக் கடமையாற்றுகின்றது? எங்களுடைய பொருளாதார நிலைமை எப்படி இருக்கின்றது? அரசாங்கம் பொருளாதார நெருக்கடி நிலவுகின்றது என்று சொல்லுகின்றதே, அதன் கருத்துஎன்ன?' என்பவைகளையெல்லாம் அறியக் கூடிய விதத்தில் மத்திய வங்கியால் வெளியிடப்படும் மாதாந்த அறிக்கைகளும் மற்றைய வெளியீடுகளும் தமிழிலும் வெளிவர வேண்டும். கௌரவ அமைச்சரவர்கள் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை யெடுப்பாரென நான் நம்புகின்றேன்.

தமிழர்களுக்கும் இடமளிக்குக

'இலங்கையின் மத்திய வங்கி தங்களுக்குத் தேவையான ஊழியர்களில் எத்தனை ஊழியர்களைத் தமிழ் பேசும் மக்களிடையேயிருந்து எடுத்திருக்கிறார்கள்? சிங்கள மக்களிலிருந்து எத்தனை பேர்களை எடுத்திருக்கிறார்கள் என்பதைக் கௌரவ அமைச்சர் அறிய வேண்டும். தமிழ் பேசும் பட்டதாரிகள் சிலர் எடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் எத்தனையோ நூற்றுக் கணக்கில் சிங்கள பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சாதாரண தரத்தில் தேறிய சிங்கள ஊழியர்களை எடுத்திருக்கும் இந்த மத்திய வங்கி, இதுவரை அதே சோதனையைத் தமிழ் மொழி மூலம் தேறியவர்களில் ஒருவரையாவது எடுக்கவில்லை என்பதை நான் அறிவேன். தமிழ் பேசும் மக்கள் மீது ஏன் இந்தப் பாரபட்சம் என்பதை அறிய விரும்புகிறேன்.

தமிழிலும் பொறிக்குக

'அமைச்சரவர்கள் இதுவரை காலமாக கடந்த அரசாங்கம் விட்ட பிழைகளைத்

(9-ம் பக்கம் பார்க்க)

"ராமசாமிகளும் மீனாட்சிகளும் வெளியேற்றம்"

மலைநாட்டில் தோட்டங்களில் வசிக்கும் ராமசாமிகளும், சின்னத்தம்பிகளும், அழகன்களும், கருப்பையாக்களும் இப்பொழுது குடும்பம் குடும்பமாக தாய்நாட்டுக்குப் புறப்பட்டுச் செல்கின்றனர். யாருடைய கட்டாயமுமின்றி இந்தியாவுக்குச் செல்லும் இந்த இந்தியர்கள் மீண்டும் இங்கு திரும்பிவரும் நோக்கம் தங்களுக்குக் கிடையாதென்று கூறுகின்றனர். இந்த வெளியேற்றம் வெற்றிகரமாக நடைபெறுமானால் நெடுநாளாக முன்பு இந்தியர்கள் வசித்துவரும் இந்தத் தோட்டங்கள் சிங்களக் கிராமங்களாக மாறிவிடும் என்று கொத்மலே எம். பி. திரு. டி. பி. ரணதுங்கா கூறினர். இவ்வாறு 'சவஸ' பத்திரிகை 14-9.65ந் திகதி ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

சிங்களவர் குடியேற்றம்

சவஸ மேலும் கூறுவதாவது:-

'இதன்படி, பூண்டுலோயாவுக்கு அண்மையிலுள்ள தோட்டங்களில் இதுவரை நிரந்தர வாசிகளாக வசித்து வந்த சரஸ்வதி ராமசாமி, வசாகரன் மூர்த்தி, சின்னதம்பி, மாணிக்கம், அலமேலு, அழகன், முத்து, கருப்பையா ஆகிய இந்தியர்கள் கடந்த மாதத்தில் தத்தம் குடும்பங்களுடன் இந்தியாவுக்குச் சென்றுள்ளனர். இன்னும் பலர் சென்றுள்ளனர்.

இதுதவிர, கொத்மலே தொகுதியிலுள்ள தோட்டங்களிலிருந்து ஐந்து குடும்பங்களும் இந்தியாவுக்குச் சென்று விட்டனர். பூண்டுலோயா நகரில் நிரந்தரவாசிகளாக இருந்த பணக்கார வியாபாரிகள் இருவரும் தங்களின் வர்த்தக நிலையங்களை வேறு ஆட்களிடம் ஒப்படைத்து விட்டு குடும்பத்துடன் ஊருக்குப் போய்விட்டனர்.

இவ்வருடத்தில் எஞ்சிய மாதங்களில் இந்தப் பிரதேசத்திலிருந்து இன்னும் பல குடும்பங்கள் இந்தியாவுக்குத் திரும்புவதற்குத் தயாராகிக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது.

பரம்பரையாக மலைநாட்டுத் தோட்டங்களில் வசித்திருந்து, இப்பொழுது இந்தியாவுக்குத் திரும்பும் குடும்பங்களுக்குப் பதிலாக அந்தந்த வீடுகளிலே சிங்களக் குடும்பங்களை வசிக்கச் செய்யவும், அவர்களுக்குத் தோட்டங்களில் வேலை பெற்றுக் கொடுக்கவும் கொத்மலே எம். பி. திரு. டி. பி. ரணதுங்கா அந்தந்தத் தோட்ட நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி முடிவு செய்துள்ளார்.

இந்த வெளியேற்றம் வெற்றிகரமாக நடைபெறுமானால் விரைவில் இந்தியர்கள் வசிக்கும் தோட்டங்கள் சிங்களக் கிராமங்களாக மாறி விடுமென்றும், அதனால் வேலையில்லாப் பிரச்சினை ஓரளவு தீர்ந்து போவதுடன், இலங்கை இந்தியர் பிரச்சினை தானாகவே தீர்ந்து விடுமென்றும் திரு. ரணதுங்கா மேலும் கூறினர்.'

சிங்கள இதழ்களில்...

30,000 பேர்களுக்கு மந்திரி, எம். பி. கடிதம்

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் அரசியற் தேவைகளுக்கேற்ப உத்தியோகம் வழங்கப்பட்டதாகக் கூச்சலிட்ட யு. என். பி—தமிழரசு அரசாங்கத்தின் மந்திரிகள், எம். பிகள் ஆகியோரிடமிருந்து ஒரு கடிதம் பெற்றுக் கொள்வது இ. போ. ச. யில் உத்தியோகம் பெறுவதற்கு முக்கியமான யோக்கியதாம்சமாகக் கருதப்படுகிறது' என்று ஜனசத்திய (12-9-65) எழுதியுள்ளது.

இச்செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

கடந்த இருமாதங்களில் மட்டும் மந்திரிகளின், எம். பிகளின் கடிதம்பெற்று வேலை தேடி வந்தவர்கள் தொகை 30,000க்கும் அதிகமாகும் என்ற செய்தி வெளியாகியுள்ளது.

1958 முதல் உத்தியோகத்தில் ஊர்ஜிதம் செய்யப்படாமல் வேலை பார்த்து வந்த இ. போ. ச. ஊழியர்கள் பலர் வேலையில்லையென வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். அதே சமயத்தில் மந்திரி, எம். பி. கடிதங்களுடன் வந்த அநேகர் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

தொழிற் சங்கங்களில் சுறுசுறுப்பான உறுப்பினர்களான இ. போ. ச. ஊழியர்கள் பொய்க்குற்றச் சாட்டுகள் மீது வேலை நீக்கம் செய்யப்பட்டு அவர்களுக்குப் பதிலாக மந்திரி, எம். பி. கடிதம் கொண்டுவருகிறவர்களை நியமனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.'

யு. என். பி— எம். ஈ. பி. மோதலாம்

'இன்னும் 3 மாதங்களில் கொழும்பு மாநகர சபைக்கு நடைபெறவிருக்கும் தேர்தலில் சுதந்திரக்கட்சி, கொம்யூனிஸ்ட், சமசமாஜ ஆகிய முக்கூட்டணி போட்டியிடும்.

இதில் யு. என். பியும் எம். ஈ. பியும் சிலவட்டாரங்களில் மோதிக் கொள்ளும் என அறியப்படுகிறது. தெமட்டகொட, மேற்கு குப்பியாவத்த, கிருளப்பனை, கிழக்கு பாமங்கடை, கோட்டை ஆகியவைகளே அந்த வட்டாரங்கள்.

தெமட்டகொடை வட்டாரத்தின் முன்னாள் உறுப்பினரான திரு. எம். எஸ். அபுபக்கரை அதே வட்டாரத்தில் நிறுத்த வேண்டுமென எம். ஈ. பி. பிரமுகர்கள் திரு. பிலிப் குணவர்தனாவிடம் வற்புறுத்தியுள்ளனர்.

யு. என். பியுடன் மோதுவதை திரு. பிலிப் விரும்பவில்லை. ஆனால் சென்ற தடவை எம். ஈ. பி. போட்டியிட்ட எல்லாத் தொகுதிகளிலும் இம்முறையும்போட்டியிட வேண்டுமென திருமதி குசுமா குணவர்தனா வற்புறுத்துகிறார்.

தெமட்டகொட வட்டாரத்தில் தற்போதைய உறுப்பினரான திரு. ஆனந்த கவிரத்னாவை மீண்டும் நிறுத்த வேண்டுமென திரு. டட்லி சேனநாயக்காவின் கோஷ்டி வற்புறுத்துகிறது. அவரால் பயனில்லை என்கிறது திரு. ஜே. ஆர். ஜயவர்தனாவின் கோஷ்டி.

மேற்கு குப்பியாவத்தை வட்டாரத்திற்கு தற்போதைய உறுப்பினர் திரு. கொலின் அபேவர்தனாவையே நிறுத்த வேண்டுமென ஜே. ஆர். கோஷ்டி கூறிவருகிறதெனினும், திரு. ஹென்றி தர்மசேனாவை நிறுத்த வேண்டுமென திரு. டட்லி கோஷ்டி வற்புறுத்துகிறது' —ஜனசத்திய (12-9-65).

ராஜாத்னாவுக்கு மந்திரி சம்பளம்

'உதவி அமைச்சர் திருமதி குசுமா ராஜரத்னாவின் கணவர் திரு. கே. எம் பி. இராஜரத்னாவுக்கு மந்திரி பதவிக்குரிய சம்பளம் பெற்றுக் கொடுப்பதற்கு திரு. ஜே. ஆர். ஜயவர்தன நடவடிக்கை எடுத்து வருகிறார்.

வீரகேசரி பத்திரிகாலயத்திலிருந்து இம்மாதம் 16-ந் திகதி முதல் வெளியாகும் 'ஜனஹித்த' என்னும் பத்திரிகையின் ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டுள்ள திரு. ராஜரத்னாவுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளமும், போக்கு வரத்துச் செலவும் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வீரகேசரி நிறுவனத்தைத் திரு. ஜே. ஆர். ஜயவர்தனாவும், லேக்ஹவுஸ் திரு. எஸ்மன்ட் விக்கிரமசிக்காவும் விலைக்கு வாங்கியுள்ளனர் என்ற செய்தி ஏற்கனவே வெளியாகியுள்ளது'

—ஜனமத்தய (10-9-65)

தோட்டத் தொழிலாளரை....

(4ம்-பக்கத் தொடர்ச்சி)

கட்சி உங்களை எந்த நிலையிலும் கைவிடாதென்பதை உறுதியுடன் கூறமுடியுமென்றார்.

சிறிமாவோ-சாத்திரி ஒப்பந்தத்தின்படி எவரையும் கட்டாயத்தின் பேரில் இந்தியாவிற்கு அனுப்ப முடியாதென்று கூறிய அவர் காரணம் அற்ற அச்சம் கொண்டு இந்தியாவிற்குயாரும் திரும்பிச் செல்லுதல் தற்கொலைக்கு ஒப்பாகுமென்றார். இந்தியாவில் பஞ்சமும் பட்டினியும் தலைதூக்கியுள்ளது. அத்துடன் உங்களை தமிழ்நாட்டில் குடியேற்றாது இந்தியாவின்பல்வேறுபாகங்களிலும், அந்தமானிலும் குடியேற்றி உங்களுடைய தமிழர் என்ற தனித்தன்மையை அழிக்கச் செய்யும் சதிநோக்கு இந்த உடன்பாட்டில் உண்டென்று அவர் வற்புறுத்தினர். அத்துடன் இன்றைய நிலையில் நீங்கள் இந்தியாவிற்குப்போவதால்; நீங்கள் அங்கு இந்தி ஏகாதிபத்தியத்திற்கு அடிமையாவதோடு இங்கு மிஞ்சியிருக்கும் சிறுபான்மையினரை சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு அடிமையாக்குவதாகுமென்றார்.

எல்லாந் தமிழியக்கம்

அத்துடன் மலைநாட்டுத் தமிழ் மக்கள் தேயிலை கொய்வதோடு நில்லாது குடிசைக் கைத்தொழில்களில் கவனம் செலுத்தும்படி வேண்டினர். படிப்படியாக வடகிழக்குமாகாணங்களில் குடியேறி அங்கு வாழும் தமிழ் மக்கள் வாழ்வோடு ஒன்றுபட வேண்டினர்.

சிங்களம் மட்டும் சட்டத்தை மருத்தளவும் இரத்தம் சிந்தாது சிதறடிக்கும் இயக்கம் எல்லாம் தமிழியக்கம் என்று கூறிய அவர் அதற்கு ஆதரவு அளிக்கும்படி வேண்டினர்.

மூவர்ண வேட்டிகள்

அமரர் வன்னியசிங்கம் நினைவாக, அவரின் பிறந்த நாளான அக்டோபர் 13ம் திகதி தமிழரசுக் கட்சியின் மூவர்ணங்களையும் கொண்ட கரையுடான வேட்டிகள் விற்பனைக்கு வரவிருக்கின்றன. இதற்கான ஒழுங்குகளை இ. த. அ. கட்சியின் கொழும்புக்கிளை பொறுப்பேற்றிருக்கிறது.

இவ்வேட்டி ஒன்று பதினாலரை ரூபாவுக்கு விற்பனையாகுமென்று கிளையின் பொருளாளர் திரு. சுப்பிரமணியம் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார். அமரர் வன்னியசிங்கத்தின் நினைவாக அவரின் நோக்கங்களில் ஒன்றான உள்ளூர்ப் பொருட்களை ஆதரிக்க வேண்டுமென்ற கொள்கையை நிறைவேற்றும் பொருட்டே இம்முயற்சியில் கொழும்புக்கிளை ஈடுபட்டதாகவும் அவர் கூறினர். இவ்வேட்டிகளை இ. த. அ. கட்சிக் கொழும்புக் கிளையின் பணிமனையிலிருந்து (16, அல்பிறட் கவுஸ் தோட்டம், கொழும்பு-3) பெற்றுக் கொள்ளலாம் என்றும், முற்பணம் கொடுத்துப் பதிவு செய்து கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இறுதியில் குடியுரிமை, வாக்குரிமை, நிலவுரிமை, மொழியுரிமை, அரசுரிமை ஆகிய அனைத்துரிமைக்கும் போராடும் தமிழ் அரசுக் கட்சியின் மூவர்ணக் கொடியின் கீழ் அனைவரையும் ஒன்றுபட்டு மறைந்தும் மறையாத வன்னியசிங்கத்தின் கனவை நனவாக்கும்படி வேண்டினர்.

திரு. செ. களியபெருமாள், பி. சாமன், கருப்பையா முதலியோரும் பேசினர்.

மங்கையர் விரும்பும் மகோன்னத 'மினேர்வா'

சிறப்பும் வனப்பும் மிக்க சிறந்த

தையல் மெஷின்

இப்பொழுது வெகு சுலபமான மாதாந்த கட்டுப் பணத்திற்கு உங்களுக்குக் கிடைக்கும்



Minerva 126

நுண்ணிய தயாரிப்பு, நாசூக்காக எவ்வித தையலையும் சுலபமாகவும், அழகாகவும் தைத்துக் கொள்ளலாம்.

புதிய வரி விகிதத்தின் பின் எதுவித விலை உயர்வும் சுமத்தப்படவில்லை.

சென்ற். அந்தனீஸ் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,

516, ஸ்கின்னர்ஸ் ரோடு, தெற்கு, கொழும்பு-10.

டெலிபோன் : 4261-2, 3.

எங்கள் கோப்பாய்க் கோமான்

கோமதி வன்னியசிங்கம்

.....மற்றொரு மொழிக்கு கேடு பயக்காது, சிங்கள மொழியுடன் தமிழ் மொழிக்குச் சம உரிமை வேண்டுமெனப் போராடுவது தேசத்துரோகமானால்-

'எமது மரபுவழித் தாயகத்தின் அரசியல், பொருளாதாரம், பண்பாடு முதலியன சிங்களப் படையெடுப்பால் அழிந்தொழியாது இருக்கப் போராடுவது தேசத் துரோகமென்றால்—

'இந்த நாட்டைத் தம்தாயகமாகக் கொண்டு நூற்றுக்கு அறுபது சத விகிதமான நாட்டின் பொருட் செல்வத்தை உற்பத்தி செய்தவர்களது குடியுரிமைக்கும், வாக்குரிமைக்கும் போராடுவது தேசத் துரோகமென்றால்—

'இன்று இலங்கையில் உள்ள அரசியல் அமைப்பைமாற்றி, கூட்டாட்சி அடிப்படையில் அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டு, அதே நேரத்தில் நாட்டைக் கூறு போடாது வேறொரு அரசியல் அமைப்பிற்கு வழிகோல நாம் அறப்போர் தொடுப்பது தேசத் துரோகமென்றால்—

'இக் கோரிக்கைகளைச் செயற்படுத்தும் வண்ணம் ஓர் இயக்கத்தை ஆரம்பித்தல்தேசத்துரோகமென்றால்; இத்தனை தேசத்துரோகங்களையும் மொத்தமாக நிறைவேற்றி அதன் பலாபலன்களை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளுவேனே ஒழிய, எனது இனம், ஒவ்வொரு திருப்பத்திலும் இழித்துப் பழிக்கப்பட்டு, சிதைந்து சீரழிந்து காலப் போக்கில் அழிந்து போவதைச் சகிக்க மாட்டேன். இனத்தின் உரிமைக்காகப் போர் தொடுப்பதால் தேசத் துரோகியெனக் குற்றஞ் சாட்டப்பட்டு தூக்குக் கயிற்றில் தொங்க விடப்படுவதையே நான் வரவேற்கின்றேன்!'

இவ்விதம் சிங்கநாதம் புரிந்த தமிழ்ச் சிங்கம் யாரென்று நினைப்பவர்கள் யாராவது இருந்தால், மறத் தமிழ் வீரன் அமரர் வன்னியசிங்கத்தைத் தவிர்ந்து தமிழ்ப்பேசும் மக்களின் உரிமைகளுக்காக குளூரைத்துக் கொதித்தெழக் கூடிய வீரர் தமிழ் பேசும் மக்கள் மத்தியில்வேறு யார் உண்டு என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஈழத் தமிழ் நாடு தன் தலை மகனை இழந்து ஆறு ஆண்டு காலம் உருண்டோடி விட்டது. இந்த இடைக் காலத்தில் அவர் தம் இலட்சியமூச்சாகக் கொண்டிருந்த உன்னத கருத்துக்கள் நிலைபெற நாம் ஏதாவது சாதித்திருக்கிறோமா?

போர் நிறுத்தம்

கோப்பாய்க் கோமான் அமரர் வன்னியசிங்கம் அவர்களின் அதி உன்னத இலட்சியங்கள் முழுமையாக உடன் நிறைவு பெறாவிட்டாலும், காலப்போக்கிலாவது அவை நிறைவேறும்படி நாம்செயல் புரிய வேண்டாமா? இடைக்கால ஒப்பந்தங்கள் யுத்த நிறுத்தப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கும், யுத்த நிறுத்தப் பேச்சுவார்த்தைகளின் விளைவாக ஏற்பட்ட பொருத்தங்களைச் செயற்படுத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்க உதவுமேயன்றி, எமது போராட்டப் பாதையிலே இளைப்பாறுவதற்கான காலமாக விருக்குமேயன்றி பிரச்சினைகளுக்கு தீர்க்கமான நிரந்தர முடிவாக அமையமாட்டா. 'செல்வா—பண்டா' ஒப்பந்தத்தை 'காந்தி—இர்வின்' ஒப்பந்தத்துடன் ஒப்பிட்டு வன்னியனார் கூறியதையே யானும் இங்கு கூறவிரும்புகிறேன். ஆகவே தமிழ்ப் பேசும் மக்களுக்கு வாழ்வு வந்து விட்டதென்று கருதி, யாரும் குறிப்பாக இளைஞர்கள் தளர்ந்து சோர்ந்திடவேண்டாம். இந்த நாட்டில் கூட்டாட்சியைக் காண்பதற்கான சுதந்திரப் பாதையில் நாம் இன்னும் செல்ல வேண்டிய தூரம் நீண்டு கிடக்கிறது.

இச்சந்தர்ப்பத்தில் 'தமிழினமே தந்தையின் பாதையைப் பின் பற்று' என்று அமரர் தந்து சென்ற இறுதி வேண்டுகோளை நாம் நினைவு கூருவோமாக:

'தந்தை 'செல்வா' காட்டும் வழியைப் பின்பற்றினால் மட்டுமே தமிழினத்தின் விடுதலையைப் பெறலாம் என்பது எனது திடமான நம்பிக்கை. 10 அல்லது 12 வருடங்களுக்கு முன் அவர் எச்சரித்த மொழிப்பிரச்சினை, சிங்கள குடியேற்றப் பிரச்சினை போன்ற விடயங்கள் சிலவற்றைக் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்புதான் தமிழ்ப் பேசும் மக்கள் நன்றாக உணரத் தலைப்பட்டனர்.

தீண்டாமை ஒழிப்பு

அனேக தமிழ்த் தலைவர்கள் ஒத்துழைப்புப் பல்லவி பாடி ஒற்றை ஆட்சியில் தமக்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டெனக் கூறி வந்த காலத்தில் தமிழினத்துக்கு ஒற்றை ஆட்சியில் அடிமைத்தனந்தான் கிட்டும் என்று இடைவிடாது எச்சரித்தவர் செல்வா. அன்று தமிழ் மக்கள் அவர் பேச்சைக்கேட்டு நடந்திருந்தால் இன்று இக் கதிக்கு உள்ளாகியிருப்போமா? என்று நாம் ஊன்றிச் சிந்திக்கவேண்டும்.

நிலைமை ஓரளவு மோசமாகிவிட்ட போதிலும், கூட்டாட்சி அமைப்பின் கீழ் தமிழினத்தின் விடுதலையைப் பெறுவது சாத்தியமாகவே இருக்கிறது. தமிழரசுத் தந்தை வழிகாட்டியாக நின்று அழைத்துச் செல்லும் பாதையில் தமிழ்ப்பேசுமினம் ஏகோபித்து நடந்தால் விடுதலையை நாம் பெற்றே தீருவோம்'

காலங்கடந்த இவ்வேளையிலேனும் அமரரின் இறுதி வேண்டுகோளுக்கு தமிழ்ப் பேசும் மக்கள் செவிகொடுப்பதில் தங்கியுள்ளது தமிழ்ப் பேசுமினத்தின் மீட்சி.

சாதாரண காலத்தில் தானும் சாதியொழிப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட ஏனையோர் தயங்கி நின்ற வேளையில், 'சாதிகள் இல்லையடி பாப்பா, வாழ்வில் உயர்வு தாழ்வு சொல்லல் பாபம்' என்ற பாரதி பாடலை, தமது தேர்தல் பிரச்சார மேடைகளில் தானே பாடி சாதியொழிப்புப் பிரச்சாரம் செய்தவர் அமரர் வன்னியசிங்கம்.

1956 இல் அச்சுவேலியில் நடைபெற்ற ஓர் தேர்தற் கூட்டத்தில் தீண்டாமையைப் பூண்டோடு ஒழிக்க

ஒழிப்பு விடயத்தில் தமிழரசுக்கட்சி அதிகம் சாதித்திருக்கிறது. யாழ்ப்பாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் குறிப்பாக யாழ்ப்பாண 'மாநகரசபையில் உயர்சாதியினர் என்று கூறப்படுவோர் பெரும்பான்மையாக வாழும் பகுதியில் சிறுபான்மைத் தமிழ் மகன் ஒருவர் தேர்தலுக்கு அதுவும் நேரடிப் போட்டிக்கு நின்று வெற்றியடைய முடிந்திருக்கிறதென்றால், அதனைச் சாதித்த பெருமை தமிழரசுக்கட்சி ஒன்றிற்கே உரியது. அவ்விதம் கட்சிக்கே வழிகாட்டியாக விளங்கியவர் அமரர் வன்னியசிங்கம். அன்னாரின் நினைவு தினத்தை அடுத்துவரும் வாரத்தை 'சமூக சீர்திருத்த' வாரமாகக் கொண்டாடுவதென்று தமிழரசுக் கட்சியின் செயற்குழுவினர் செய்த முடிவை யாவரும்பாராட்டவேண்டும்.

தமிழ் இயக்கம்

எல்லாம் தமிழ் இயக்கத்தின்பிதாவாகவிளங்கிய அமரர் தமது கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துரைத்திருக்கிறார். தமிழ்பேசும் மக்கள் கேட்டுப் பயனடைவார்களாக:

'தமிழ்பேசும் மக்கள் சகல உரிமைகளும்பெற்று வாழ்வதற்கு அடிப்படையாக நாம் முதலில் கைக்கொள்ள வேண்டியது

சு. செ. மாதேவா,
மாநகர முதல்வர், யாழ்ப்பாணம்.

வேண்டுமென்றுநீண்டநேரம் பேசினார். தீண்டாமை பற்றிய தலைவரின் தீவிரமான போக்கு தேர்தலில் தலைவருக்கு மாறான பலனைத் தந்து விடுமோவென்று கட்சியின் ஆதரவாளர்களான 'உயர் சாதியினர்' எனப்படுவோர் பீதியடைந்தனர். அது விடயம் ஆதரவாளர் பலரது வேண்டுகோளின் பேரில் அன்பர் ஒருவரால் தலைவர் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. தீண்டாமையைப் பற்றிக் குறைவாகப் பேசும்படியும், தேர்தல் மேடைகளில் வைத்து தீண்டாமை ஒழிப்பைப் பற்றி அதிகம் வற்புறுத்தாதிருக்கும்படியும், அப்படி வற்புறுத்துவதால் கட்சியின்செல்வாக்கு குன்றி விடுமென்றும் கட்சி ஆதரவாளர்களே பயப்படுவதாக தலைவரிடம் எடுத்துச் சொல்லப்பட்டது. அப்பேச்சைக் கேட்ட தலைவர் உரத்துச் சிரித்தாராம். பின் அந்த அன்பரை நோக்கி 'தம்பி! எமது கட்சியின் கொள்கைகளை வெளிப்படையாகச் சொல்லவேண்டுமென்பதே எனது கொள்கை. தேர்தலில் தோல்வி வருமே என்று கொள்கைகளை மறைத்துப் பேசுதல் கூடாது. அதற்காக எனக்குத் தோல்வியேற்படினுங்கூட நான் கவலைப்படமாட்டேன்' என்றுகூறியிருக்கிறார்.

'துன்பமுற வரினும்
செய்து துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை.'

அமரர் வன்னியசிங்கத்தின் முன்மாதிரியைப் பின்பற்றியதால் தீண்டாமை வாழ்க்கையின் எந்தத் துறையிலும் தமிழ்மொழியைக் கையாள வேண்டுமென்பதேயாகும். இன்றைய நிலையில் எல்லாமே தமிழ் மொழி மூலம் நடத்தப்பட வேண்டுமென்பதை மேலும் வற்புறுத்த விரும்புகின்றேன். தமிழன்னையின் உரிமையைக் காப்போம், பெருமையைப் பேணுவோம் என்றெல்லாம் ஒரு புறம் பேசிக் கொண்டு, இன்னொருபுறம் தமிழல்லாத இன்னொரு மொழியைக் கைக்கொள்வோமேயானால் அதைவிடச் சிரிப்புக்கிடமான செயல் பிறிதொன்றில்லை. நாமே நமது மொழியைப் புறக்கணித்தவர்களாவோம். ஆகவேதான் எல்லாம் தமிழ் இயக்கத்தை ஆதரித்து அதனைக் கைக்கொள்ளும்படி வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மொழி உரிமைப் போராட்டத்தில் எல்லாம் தமிழ் இயக்கம் மிக முக்கிய அங்கம் வகிக்கின்றது; நம் தாய்மொழியை ஆட்சியாளர் அலட்சியம் செய்யாமல் விடுவதற்கான நிர்ப்பந்தத்தை அந்த இயக்கம் ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது.'

எனவே வன்னியனார் நினைவு தினக் கொண்டாட்டங்கள் மேற்கண்ட எண்ணங்களை மக்கள் மனதில் தூண்டி விடுவதற்கு வாய்ப்பான முறையில் அமைய வேண்டும். எல்லாம் தமிழ் இயக்கத்தைப் பொறுத்த வரையில் அமரர் வன்னியசிங்கத்தின் கொள்கையைப் பின்பற்றி யாழ்ப்பாண மாநகரசபையும், தமிழ் பேசும் பகுதிகளைச் சேர்ந்த பிற உள்ளூராட்சி மன்றங்கள் பலவும் தம் அலுவல்களைத் தமிழ் மொழியில் மட்டுமே செய்துவருகின்றன. ஆயினும் பொதுமக்கள் இது விடயத்தில் போதுமான ஆர்வம் காட்டாது வாழாவிருப்பது வருத்தம் தருவதாய் உள்ளது. உள்ளூராட்சி அதிகார மன்றங்கள் தமிழில் தயாரித்துத் தரும் படிவங்களையே ஆங்கிலத்தில்நிரப்பி தமிழ் நிர்வாகத்திற்கு முட்டுக்கட்டையாக விளங்கும் தமிழர்களும் நம் மத்தியில் இருக்கிறார்கள். தமிழ்மொழி குறித்து இவர்களது தாழ்வு மனப்பான்மை அகலவேண்டும்,

நமது எதிர்காலம்

இன்று மலேயாவிலும், சிங்கப்பூரிலும் தமிழ் மொழிக்கு உத்தியோக நிலை வழங்கப்பட்டுள்ளது. காலனி ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்காகப் போராடிக்கொண்டிருக்கும் பிஜி, மோறிசியஸ் தீவுகள் சுதந்திரமடைந்ததும் அங்கும் தமிழ்மொழிக்கு உரிய இடம் வழங்கப்படும். தமிழ்பேசும் மக்களே அங்கு பெரும்பான்மையோராக இருக்கிறார்களென்பதை நம்மில் பலர் அறியாதிருக்கலாம். காலப்போக்கில் தமிழ் மொழி அந்த நாடுகளில் ஆட்சி மொழியாக வரக் கூடிய வாய்ப்பு நிரம்ப உள்ளது.

தாய்த் தமிழ் நாட்டில் தமிழ் மொழி ஏற்கனவே அரசாங்க மொழியாக விளங்கி வருகின்றது. பல நாடுகளையும் சேர்ந்த வானொலி நிலையங்கள் தமிழ் மொழியிலும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகின்றன. தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து கிட்டும் வரை அயருவதில்லையென்று நாமும் பிடிவாதமாக இருப்போமானால் இந்து சமுத்திரப் பகுதியிலேயே தமிழ் மொழி ஒரு முக்கிய மொழியாக விளங்கப் போவதும் தமிழ் மொழிக்கு சர்வதேச அந்தஸ்து கிடைப்பதும் உறுதியாகும்.

அமரர் வாக்குப்படி தமிழ் இந்த நாட்டில் ஆட்சிமொழி யாவது ஆட்சியாளர்கையில் இல்லை. தமிழ்பேசுவோர் கையில் தான் தங்கியுள்ளது; நீதும் நன்றும் பிறர் தர வாரா! 'நாம் நமது உரிமைகளுக்காக உரிமைக் குரல் எழுப்புவதைப் பலர் வகுப்புவாதம் என்கிறார்கள். அப்படிக் கூறப்படுவதால் நாம் நமது போராட்டத்தை நிறுத்துவிடத் தயாராயில்லை; உரிமைகளுக்குப் போராடுவது வகுப்புவாதமென்றால் அந்த வகுப்புவாதத்தினை நாம் முழுமனதோடு வரவேற்கிறோம்; ஆதரிக்கிறோம்!' என்ற கோப்பாய்க் கோமானின் கருத்துகளைத் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் தம் சொந்தக் கருத்துக்களாகக் கொள்ள வேண்டும். அந்நிலை ஏற்பட்டபின் கோப்பாய்க் கோமன் இறந்து விட்டாரென்ற கருத்து பொய்த்து

(9-ம் பக்கம் பார்க்க)

ரிஷி லேகியம்
(கருணைக் கிழங்கு)

மூல முளைகள், இரத்தம், சீழ் பௌந்தம், வாய்வுகள், உள் மூலம், வெளி மூலம், தீராத மலச்சிக்கல், மூலச் சூட்டினால் உண்டாகும் எல்லா உபாதைகளுக்கும் கைகண்டது.

ரிஷி மார்க்கைக் கவனித்து வாங்கவும்

டின் 1க்கு ரூ. 3-50

தபால் செலவு 1-10 சதம்

எவ்வித தீராத வியாதிக்கும் எம்மைக் கலந்து ஆலோசியுங்கள்.

அநேக மருந்துகள் அடங்கிய கேட்லாக் இனும்.

ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

கோப்பாய்க்கோமான்பற்றி

கோமதி வன்னியசிங்கம்

பேட்டி கண்டவர் : ஈழவேந்தன்

ஒரு ஞாயிற்றுக்கிழமை (22-8-65) அன்று முற்பகல் 11.10 இருக்கும் யாழ்ப்பாணக் கச்சேரியிலில் உள்ள திரு. வன்னியசிங்கம் அவர்களின் இல்லத்திற்கு சென்று அழைக்கும் மணியை (Calling Bell) அடித்தேன். திரு. வன்னியசிங்கத்தின் கடைசிக் குழந்தை இரஞ்சனி (தன் அன்புத் தந்தையை வாழ்வில் நேரில் காணாத குழந்தை ஆம்! அவர் மறைந்து சில நாட்களிற்தான் இக் குழந்தை இவ் உலகை எட்டிப் பார்த்தது.) கதவைத் திறந்தது. 'அம்மா இருக்கிறாவா?' என்று யான் கேட்ட கேள்விக்கு 'ஓம்' என்று பதில் கூறி அடுக்களையை நோக்கி ஓடியது. அதற்கிடையில் திரு. வன்னியசிங்கம் 'தம்பி வாரும் இரும்' என்று என்னை அழைத்தார். என்னமாறந்த வன்னியசிங்கம் என்னை வரவேற்றாரா என்று வாசக நேயர்கள் கேட்கும் கேள்வி என் காதில் விழத்தான் செய்கிறது. ஆம்! உண்மையில் உயிருள்ள வன்னியசிங்கம் என்னை வரவேற்கவில்லை. மாறாக அவர் வீட்டுத் திண்ணையில் மாட்டப்பட்டிருக்கும் அவரின் உயிர் ஓவியமாய் அமைந்திருந்த புகைப்படம் என்னை வரவேற்றது போன்ற உணர்ச்சி பெற்றேன்.

இப்பெருமகன் உயிர் வாழ்ந்த போது என்னை அன்புடன் வரவேற்றஇன் பக்காட்சிதனை நினைத்து அவர் பற்றிய சிந்தனையிலே மூழ்கியிருந்த போது 'தம்பி என்ன புதினம் கனகாலம் கண்டு' என்ற அன்புக்குரலுடன் திருமதி வன்னியசிங்கம் என்னை வரவேற்றார். திரு. வன்னியசிங்கம் அவர்கள் உயிரோடு இருந்த போது இவரிடம் இருந்த பொலிவு இன்று இல்லாது, விதவைக் கோலத்தில் காட்சி அளித்தார் எனினும் ஒரு தமிழ்ப் பெண்ணுக்கு இருக்க வேண்டிய அருள் ஒளி மட்டும் அவர் முகத்தில் ஒளி விட்டது.

யான் வந்த விடயத்தை தொடங்குவதற்கு முன் பீடிகையாக 'வழக்கம் போல் உங்கள் அனைவரின் நலம் விசாரிக்க இன்று யான் வரவில்லை. ஆனால் ஓர் முக்கிய விடயமாக வந்துள்ளேன்' என்றேன். என்ன அந்த முக்கிய விடயம்என்றார். 'வேறொன்றும் இல்லை 'சுதந்திரன்' சார்பாக மறைந்தும் மறையாத உங்கள்-எங்கள் வன்னியசிங்கம் அவர்களைப் பற்றி உங்களைப் பேட்டி காண வந்துள்ளேன்' என்றேன். முகத்தில் புன்முறுவல்பூக்க சரி அதற்கென்ன தம்பி என்றார். பேட்டி சரியாக 11-15 க்கு தொடங்கி 12-15க்கு முடிவுற்றது. இதோ யான் கேட்ட கேள்விகளும் அம்மையார் அளித்த விடைகளும்.

கே: திரு. வன்னியசிங்கம் அவர்களை உங்களுக்கு சிறு வயதிலேயே தெரியுமா?

ப: ஆம்! தெரியும். அவர் என் சொந்த அத்தான் தானே (இவ்விதம் அவர் கூறிய போது அவர் உள்ளத்தில் ஊற்றெடுத்த அன்பு உணர்ச்சியை அவரின் உதடுகள் உணர்த்திற்று.)

கே: அவர் பிற்காலத்தில் சிறந்த தலைவராய் விளங்குவார் என்பதற்குரிய அறிகுறிகள் அவரின் சிறு வயதிலேயே தென்பட்டதா?

ப: அவருக்கும் எனக்கும் வயது வேறுபாடு ஏறக்குறைய பதின்மூன்று ஆண்டுகள். ஆதலால் அவரைப்பற்றி யான் சிறுவயதில் அவ்வளவு அறிய முடியவில்லை. ஆனால் என் உறவினர்கள் அவர் சிறு வயதிலேயே மகாசனக் கல்லூரியிலும், இந்துக் கல்லூரியிலும் படிக்கும் போது மிகக் கெட்டித்தனமாக விளங்கினார் என்றும், பரிசில்கள் பல பெற்றார் என்றும் கூறக் கேட்டுள்ளேன். இதோ 1930 ல் சீனியர் வகுப்பில் தமிழுக்குப் பெற்ற சிறப்புப் பரிசு என்று கூறி நாவலரால் அச்சிடப்பட்ட திருவிளையாடற் புராண நூலை எடுத்துக் காட்டினார். அத்துடன் இந்தியத் தலைவர்களிடம் குறிப்பாக மகாத்மா காந்தியிடம் அவருக்கு தனி ஈடுபாடு இருந்தது மட்டும் எனக்குத் தெரியும் என்றும் கூறினார்.

கே: அவரின் பள்ளி வாழ்வு, பல்கலைக்கழக வாழ்வு, சட்டக் கல்லூரி வாழ்வு பற்றி ஏதும் சிறப்பான செய்திகள் கூறமுடியுமா?

ப: இவைப்பற்றிய விபரம் எனக்கு நினைவில்லை. ஆனால் சட்டக் கல்லூரியில் ஏதோ பரிசு (Cash Prize) எடுத்ததாக அறிகிறேன்.

கே: எவருக்கும் உங்களுக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது. காதற் கடிமணமா? அல்லது பேசிச்செய்யப்பட்டதா?

ப: 1943 ல் எங்களுக்கு திருமணம் நடைபெற்றது. எம் இருவரிடையும் விருப்பம் இருந்தும் எம் பெற்றோர்தான் இறுதியில் முடிவு செய்து திருமணம் செய்து வைத்தனர்.

கே: உங்கள் மணவாழ்வு எவ்வளவு காலம் நீடித்தது?

ப: 16ஆண்டுகள் சொச்சம்.

கே: உங்கள் மணவாழ்வில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் ஏதாவது உண்டா?

ப: அரசியல் நிகழ்ச்சிகள் தான் எம் வாழ்வில் குறிப்பிடத்தக்கதாக அமைந்திருந்தது. அதைவிட வேறு யாதும் எனக்கு நினைவில்லை.

கே: உங்கள் கணவர்கொஞ்சம் முன்கோபக்காரர் என்று கேள்வி. அவரின் கோபத்திற்கு நீங்கள் கொடுத்த மாற்று மருந்து என்ன?

ப: அவர் வீட்டில் மிகச் சாந்தம். ஆனால் அநியாயத்தைக் கண்டால் ஆத்திரப்படுவார்.

கே: உங்கள் கணவர் எந்த ஆண்டில் அரசியலில் ஈடுபடத்தொடங்கினார்? தொடங்கியதற்கு காரணம்என்ன? அவைபற்றிய விபரத்தைக் கொஞ்சம் கூறமுடியுமா?

ப: 1947 ல் தான் அரசியலில் ஈடுபடத் தொடங்கி திரு. செல்வநாயகம் அவர்களுக்கு ஆதரவுகொடுத்து வந்தார். ஆனால் கோப்பாயில் போட்டியிட இருந்த திரு. தம்பிஅப்பா அவர்கள் சடுதியாக மாரடைப்பினால் மறைந்த போது அவரின் இடத்தை நிரப்ப திரு. செல்வாவின் வற்புறுத்தலின் பேரில் கோப்பாய் தொகுதியில் வேட்பாளராக நின்று ஆமோக வெற்றி ஈட்டினார்.

கே: அவரின் தீவிர அரசியல் ஈடுபாடு உங்களுக்கு துன்பத்தையா இன்பத்தையா அளித்தது?

ப: அவரின் அரசியல் வாழ்வு எமது குடும்பத்திற்கு துன்பங்கள் பலவற்றை தந்தாலும் யாம் பிறந்த இனத்திற்கும், யாம் பேசும் மொழிக்குமாக பாடுபடுகின்றாரே என எண்ணி அமைதியும் மகிழ்ச்சியும் பெற்றேன்.

கே: அவரின் அரசியல் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சிகள் சிலவற்றை குறிப்பிட முடியுமா?

ப: 1956 ல் காலிமுகக் கடற்கரையில் காடையர்களிடம் வாங்கிய அடியும், பயங்கர சூழ்நிலையில் இருந்த கல்லோயா பள்ளத்தாக்குக்குச் சென்று தமிழர் நலம் பேணிய தன்மையும், தமிழர்களுக்கு பாதுகாப்பு அளித்த தன்மையும், 1957 டிசம்பரில் பெருவெள்ளத்தையும் எதிர்த்து தோணியில் மன்னார், மட்டக்களப்பு முதலிய இடங்களுக்கு உணவு, உடை முதலியவற்றை கொண்டு சென்ற நிகழ்ச்சியும், 1958ல் அநுராதபுரத்தில் இருந்து ஓடிவந்த இந்திய வம்சாவழியினருக்கு வாழ்வு கொடுத்த நிகழ்ச்சியும் குறிப்பிடத்தக்கவையென யான் கருதுகின்றேன்.

கே: அவரோடு நெருங்கி உழைத்த தலைவர்களைப் பற்றி உங்களுக்கு அவர் ஏதும் கூறியிருப்பாரே? அவற்றைக் கூறமுடியுமா?

ப: அவர் சொல்லிய அனைத்தையும் யான் எப்படி இப்போ கூறமுடியும். திரு. செல்வநாயகம் அவர்களை எப்பொழுதும் தன்னுடைய குரு என்று கூறுவார்.

கே: அவருக்கு ஓய்வு குறைவு என்பது எமக்குத் தெரியும். ஆனால் கிடைத்த ஓய்வை எப்படிப் பயன்படுத்தினர் என்பதை அறிய விரும்புகின்றேன்.

ப: பயிர்ச்செய்கை முதலிய கமத்தொழில் விடயங்களில் தனி ஆர்வம் காட்டியதோடு அவற்றின் முக்கியத்துவத்தை எனக்கு எடுத்துக் கூறுவார். அத்துடன் வீட்டில் இருக்கும் போது புத்தகங்கள் படிப்பதுதான் அவரின்பொழுது போக்கு. படிக்கின்ற நூல்கள் வெறும் கதைப் புத்தகங்களாய் இராது. ஏனைய நாடுகளின் அரசியல் பொருளியல் பற்றியே அடிக்கடிவாசிப்பார். கதைகளில் அவருக்கு விருப்பமில்லை. படிக்கின்ற ஒவ்வொரு நூலுக்குள்ளும் சிறுசிறு குறிப்புத் துண்டுகளை சேர்த்து வைப்பார்.

கே: அவரின் பேச்சுக்கள் ஆழந்த நூல் அறிவை எடுத்துக் காட்டியதே. அது பற்றிய விபரம் ஏதும் தர முடியுமா?

ப: முன்னே குறிப்பிட்டது போல் நூல்களில் அவர் உள்ளம் தோய்ந்திருந்ததினால் அவற்றின் கருத்துக்கள் அவரின் பேச்சுக்களில் இடம் பெற்றன. சிறுவயதில் இலக்கிய சமய நூல்களைப்படித்த அவர் பிற்காலத்தில் அரசியல் பொருளாதார நூல்களைப் படிப்பதில்மிகஈடுபட்டார். இந்த நூல் அறிவு அவர்கள் தந்தையிடம் இருந்து பெற்ற பரம்பரைப்பண்பு. இதை அவரின் உடன் பிறந்தார்களிடமும்காணலாம்.

கே: அவரின் உள்ளத்தைப் பெரிதும் ஆட்கொண்ட நூல்கள் பற்றி ஏதும் குறிப்பிட முடியுமா?

ப: பொதுவாக எல்லாத் தமிழ் இலக்கிய நூல்களிலும் அவருக்கு ஈடுபாடு இருந்தது. சிலப்பதிகாரம், மணிமேகலை, மணியம் முதலிய நூல்கள் அவரைப் பெரிதும் கவர்ந்தவை. எனக்குக்கூட இவற்றை அவர் படிப்பித்தார். அரசியலில் ஈடுபடாவிட்டால் இலக்கியத் துறையில் ஓர் அறிஞராய் விளங்கியிருப்பார்.

கே: அவர் எத்தனை நூல்களை சேர்த்து வைத்திருந்தார். அவை யாவற்றையும் யாழ்ப்பாண நூலகத்திற்கு கொடுத்து விட்டீர்களா?

ப: ஏறக்குறைய தெரிந்தெடுத்த நூல்கள் என்ற வகையில் 850 நூல்கள் வைத்திருந்தார் என்று கூறலாம். அண்மையில் அவர் நினைவாக யாழ்ப்பாண நூல் நிலையத்திற்கு 101 ஆராய்ச்சி நூல்களை என் இளையமகளின் பெயரில் வழங்கினோம்.

கே: உயர் சாதியென்று கணிக்கப்பட்ட வேளாண் மரபிற் தோன்றியவர், சாதிகளை ஒழித்துக்கட்ட தீவிரமாகஉழைத்தபோது உங்கள் ஆதரவு அவருக்கு இருந்ததா. உங்கள் மனநிலை எப்படி இருந்தது.

ப: எனது மனப்பூர்வமான ஆதரவு அவருக்கு இருந்தது. சிறு வயதிலேயே இச் சமூக சீர்திருத்தங்களில் எனக்கும் ஈடுபாடு இருந்தது.'

கே: உங்களுக்கு எல்லாம் பெண்பிள்ளைகள் என்பது தெரியுமெனினும், அவர்களில் யாருக்காவது தந்தையின் வழியில் அரசியலில் ஈடுபடும் நோக்கம் உண்டா?

ப: எல்லாக் குழந்தைகளிடமும் தமிழ் உணர்ச்சி நிறைய உண்டு. அவர்கள் படிக்கும் சுண்டிக்குழி மகளிர் பள்ளிக்கூடத்திற் கூட தமிழ் இனத்தை வழிநடாத்தும் தமிழ் அரசுக் கட்சிக்கு மாறாக ஏனைய மாணவிகள் கூறினால் அவர்களை வாதிட்டு வெல்லும் வல்லமை ஏன் குழந்தைகள் எல்லோர்க்கும் உண்டு. ஆனால் இவர்களில் யார் பிற்காலத்தில் அரசியலில் ஈடுபடுவார்கள் என்பது இப்பொழுது கூறமுடியாது.

கே: அவரின் சிறை அனுபவம் பற்றி ஏதும் கூறமுடியுமா?

ப: 1958 ல் சிறையில் இரத்த அமுக்கத்தாலும் சுதந்திரமாக நடமாட முடியாத நிலையிலும் கஷ்டப்பட்டார்.

கே: அவரின் வெளிநாட்டுப் பயணம்பற்றி குறிப்பாக தென் இந்தியாப் பயணம் பற்றி ஏதும் கூறமுடியுமா?

ப: பொதுவாக—உண்மையாகத் தமிழர்களுக்காக உழைக்கும் உலகத் தமிழ்த் தலைவர்களிடம் நல்ல நம்பிக்கை வைத்திருந்தார்.

(114-ம் பக்கம் பார்க்க)

இலக்கிய உலகு

வேதாளம்

"கனகசெந்தி"

ஒரு தமிழ்ச் சட்டம் பியாருக்குரிய எளிய தோற்றம்; மெல்லிய உடம்பு; பத்துநாள் பட்டினி கிடந்தவர் போன்ற ஒரு வறட்சி. கையிலே ஒரு பை; அதற்குள் சில புத்தகங்கள்.

—இவரை நீங்கள் அடிக்கடி சந்தித்திருப்பீர்கள். இருவிடங்களில் இவரை அடிக்கடி சந்திக்கலாம். ஒன்று யாழ்ப்பாணப் பட்டினத்திலுள்ள புத்தகக் கடைகளில். மற்றது 'நீகல் தியேட்டரில். ஆங்கிலப் படங்கள் ஒன்றையுந்தவறவிடமாட்டார், இந்த மனிசர்.

நல்ல பேச்சுகளை, நிகழ்ச்சிகளைத் தலையை ஆட்டியாட்டி ரசிப்பதில் மகிழ்பவர். பனங்கொட்டையைப் பழம்பாணைக்குள் போட்டுக் குலுக்குவது போல வஞ்சகமில்லாத சிரிப்பு இவருக்குரியது:

ஈழத்தின் நடமாடும் வாசிகசாலை; இரசிகமணி. 'ஈழத்தில் இலக்கிய வளர்ச்சி' என்ற ஈழத்திலக்கிய வரலாற்றைக் கூறும் முழுமையான நூலின் ஆசிரியர்; விமரிசகர்; சிறுகதை எழுத்தாளர்.

—ஈழத்துத் தமிழ் உலகம் அவரை நன்கு புரிந்து கொள்ளவுமில்லை; போற்றவுமில்லை என்றேகூறவேண்டும். ஈழத்தில் பிறவாது வேறொரு நாட்டிற் பிறந்திருந்தால், அவருக்குரிய தக்கதோர் கௌரவ பீடத்தை அவர் பெற்றிருப்பார்.

ரசிகமணி கனகசெந்தி நாதனைப்பற்றி இன்று புதிய விதமான சில கதைகள் உலாவுகின்றன.

'கனகசெந்திநாதன் விமர்சனனுக்குரிய நடுநிலைமையினின்றும் விலகிவிட்டார்' என ஒரு குழுவினர் கூறுகின்றனர்.

'ஒருசிலரால் அவர் விலைக்கு வாங்கப்பட்டுவிட்டார்' என அதே குழுவினர் கூக்குரலிடுகின்றனர்.

ஆரம்ப வாசகர் ஒருவருக்குக் 'குமுதம்' போன்ற பத்திரிகைகளில் வரும் மூன்றுந்தரக் கதைகள் பிடித்திருக்கலாம். பலவற்றைப் படித்த பிறகு, 'குமுதம் தரமில்லை' என்று அவர் கூறினால் காரணம் அவருடைய இலக்கிய ரசனையின் வளர்ச்சியே.

—கனகசெந்திநாதனும் அத்தகையர்தான்.

சுதந்திரன்
SUTANTHIRAN

1965 செப்டம்பர் மாதம் 19-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1183

சிந்தனைப் புரட்சி வேண்டும்

ஈழத்தின் தவப்புதல்வர் கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கம் அவர்கள் அமரராகி ஆறு ஆண்டுகள் ஓடிமறைந்து விட்டன. ஆயினும் தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் அவரது நினைவு இன்னும் பசுமையாகவே இருக்கிறது. அவர் இறந்தும் இறவாதவர். மக்களைப் பொறுத்தவரையில் அவர் என்றும் சிரஞ்சீவித் தன்மை பெற்றவரே.

தமிழ் பேசும் இனத்தின் விமோசனத்துக்கான வழி அமரர் காட்டியவழியே. அந்த வழியிலேதான் இன்றும்முன்னேறிக் கொண்டிருக்கின்றனர் தமிழ் பேசும் மக்கள். அவ்வழி ஒன்றே தங்களுக்குப் பூரண விடுதலையை அளிக்க வல்லது என்ற அவர்களின் திடமான நம்பிக்கையே அதற்குக் காரணம். இந்த ஆண்டில் அமரரின் நினைவு தினத்தைச்சமூக சீர்திருத்த வாரமாகக்கொண்டாடுவதென தமிழரசுக்கட்சி முடிவு செய்துள்ளது.

சமூகத்தில் வேரூன்றியுள்ள உயர்வு தாழ்வுகளை அகற்ற சாதிக் கொடுமைகளிலிருந்து மக்களை விடுவிக்க, தீண்டாமைப் பிசாசை விரட்டியடிக்க இறுதி மூச்சுவரை தளராது போராடியவரே நமது கோப்பாய்க் கோமான். இந்தப் போராட்டம் இன்னும் ஓயவில்லை. சாதிப் பாகுபாடுகள் அடியோடு ஒழிந்து சமத்துவ நிலை ஏற்படும் வரை இந்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும். இச்சமூகச் சீர்திருத்தப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவதற்காகஅமரரின்நினைவு நாளைத் தெரிவுசெய்தது மிகமிகப்பொருத்தமே. அது அவரது நினைவு நாளை "ஆக்க பூர்வமாகக்" கொண்டாடுவதாகும்.

தீண்டாமை தமிழினத்தின் ஐக்கியத்தைக் குலைக்க வந்த ஒரு சாபத்தீடு. இச்சாபத்தீடு அகற்றப்படும்வரை இனம்இருகூறாகப் பிளவுபட்டுத்தான் நிற்கும். இனத்தின் பலவீனம் இந்தப் பிளவே. இனம் வலிமை குன்றும் போது அதன் உரிமைக் கிளர்ச்சியும் பலவீனமடையும். ஆகவே சாதிப்பாகுபாடு தமிழினம் ஜீவாதாரமான உரிமைகளைப் பெறுவதற்கே பெருமுட்டுக்கட்டையாக இருக்கிறது. தமிழினம் மென்மேலும் முன்னேறிச் செல்ல இந்த முட்டுக்கட்டை அகற்றப்படவேண்டும்.

காந்திமகான் தீண்டாமையை எதிர்த்து பெரும் போர் நடத்தியதற்கு ஒரு முக்கிய காரணம் அது இந்திய சுதந்திரப் போராட்டத்துக்குத் தடையாக இருந்ததே. பாரதத்தில் சாதிக் கொடுமையின் மீது பல்வேறு மூலைகளிலிருந்து தொடுக்கப்பட்ட தீவிரத் தாக்குதல் இன்று பெருமளவு பயனளித்துள்ளது. தாழ்த்தப்பட்டவர்கள் என்போர் இன்று பெருமளவு கைதூக்கி விடப்பட்டுள்ளனர். கல்வி, உத்தியோகம் முதலிய பல்வேறு துறைகளில் அவர்களின் சமூக அந்தஸ்து உயர்த்தப்பட்டுள்ளது. தீண்டாமை அடியோடு ஒழிக்கும் பாதையிற்தான் இன்று பாரதம் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

எந்த நாட்டிலும் காணப்படாத அளவுக்கு வடஇலங்கையில் சாதிப் பேய் தாண்டவமாடுவதால், பிறர் முன்னிலையில் நாம் தலைகுனிந்து நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஒரே மொழிபேசும் ஒரே இன மக்களில் ஒருசாரார்தீண்டத்காதவர்களென சமுதாயத்திலிருந்து ஒதுக்கிவைத்துவிட்டு, நாம் எப்படி பிறர் முன்னிலையில் தலைநிமிர்ந்து நடக்க முடியும்? நமது இன சகோதரர்களுக்கு நாம் எந்த உரிமையை வழங்கமறுக்கிறோமோ, அந்த உரிமையை பிறரிடம் கோருவதற்கு நமக்கு என்ன தகுதி இருக்கிறது?

சாதிக் கொடுமைகளையும், சாதியின் அடிப்படையில் மக்களைக் கூறுபோடுவதையும் நாகரிகஉலகம் வெறுக்கிறது. அறிவுலகம் கண்டிக்கிறது.

தீண்டாமை நாம் வாழும் சமுதாயத்துக்கு உரியதன்று. அது நிலப் பிரபுத்துவ சமுதாயத்தின் ஓர் அம்சம். பிரபுத்துவ சமுதாயஅமைப்புமாறி, தற்போதையசமுதாயம்தோன்றிய போது இறந்து பட்ட அந்தச் சமூதாய அமைப்பின் தீமைகளிற் சில எஞ்சி நின்றன. அவற்றில் ஒன்றுதான் சாதிப் பாகுபாடும் தீண்டாமையும். பத்தாம் பசலி சமுதாய அமைப்பில் குடிகொண்டிருந்த ஒரு துருப்பிடித்த பழக்கத்தை நவீன சமுதாயம் ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும்?

அஃது எவ்வகையிலும் நம் சமுதாயத்துக்குஒவ்வாதது. இன்று கல்வியிலும் இதர துறைகளிலும் நாம் எவ்வளவோ முன்னேறியுள்ளோம். எனவே தீண்டாமை என்பது தீய பழக்கம் என்பதை நாம் எளிதில் உணர முடிகிறது. அதனை உணரக்கூடியதாக நம் அறிவும் வளர்ந்துள்ளது. தீமை என அறிந்தபின்னரும் அதனையே விடாப்பிடியாக கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பது நமது அறிவை நாமே கிண்டல் செய்வதாகும்.

இத்தீமையை மக்களிடமிருந்து அகற்றுவதற்குச் சமூகச் சீர்திருத்தச் சட்டங்கள் ஓரளவு பயன்படுமென்பது உண்மையே. ஆயினும் இதற்கு முதலில் தேவைப்படுவது மக்களின் மனமாற்றமே.

ஒரு தீய பழக்கத்துக்கு அடிமையாகியுள்ள மக்களை அதினின்று விடுதலை செய்ய ஒரு புரட்சி தேவை. அது உளப்போக்கில் மாறுதலை செயற்படுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும். ஆம், ஒரு சிந்தனைப் புரட்சி வேண்டும். இப்புரட்சி நம் மக்களிடையே தீவிரமாக நடத்தப்பட வேண்டும். பாடசாலைச் சிறுர் முதல் வயோதிகர்வரை இச்சிந்தனைப் புரட்சி பரவவேண்டும்.

அமரர் வன்னியசிங்கம் அவர்களின் நினைவுதினத்தை முன்னிட்டு நடைபெறும் சமூகசீர்திருத்தப்பிரசாரமும் நடவடிக்கைகளும் இத்தகைய சிந்தனைப் புரட்சியைத் தூண்டுவதற்கு உதவவேண்டும். இம்முறை சமூக ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்கும் நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்தின் ஆதரவும் கிடைத்துள்ளது. இவ்வாரத்துடன் சமூக சீர்திருத்த நடவடிக்கைகளைக் கைவிடாது தொடர்ந்து நடத்த வேண்டியது அவசியமாகும்.

தமிழரசுக் கட்சி ஆரம்பம் முதல் சமூக ஏற்றத்தாழ்வை எதிர்த்து வந்துள்ளது. தீண்டாமையை எதிர்த்துப் பிரசாரம் செய்து வந்துள்ளது சம பந்திபோசனம் போன்ற செயல்முறைத் திட்டங்களில் மக்களிடையே மனமாற்றத்தைத் தோற்றுவிக்க நடவடிக்கை எடுத்துவந்துள்ளது. ஆயினும் அத்துறையில் இன்னும் போதிய முன்னேற்றம் ஏற்படவில்லையெனத் தமிழரசுத் தந்தை தமது செய்தியில் குறிப்பிட்டிருப்பதை நாம் ஆதரிக்கின்றோம்.

அமரர் கோப்பாய்க் கோமானின் பெயரால் இத்தீமையை அடியோடு நம் மக்களிடமிருந்து அகற்றிவிட இந்த வாரத்தில் தமிழ் மக்கள் அனைவரும் உறுதிபூண்டு, நடவடிக்கையில் இறங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

உலக யுத்தம் ஏற்படுமா?

ஐ. நா. வை அழிக்கும் முயற்சி

சமரசம் ஏற்பட இரு வழிகள்

ஐ. நா. காரியதரிசியின் தூது தோல்வி அடைந்ததை யொட்டி இந்திய-பாகிஸ்தான் யுத்தம் உலக யுத்தமாக மாறுமா என்று கேட்கப்படுகிறது. 1000 ஆண்டுகள் யுத்தம் செய்வோமென்று பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி கூறினாலும், இது நீண்டகாலம் இம்மாதிரி நீடிக்க முடியாது. எனெனில் பாகிஸ்தானைக் கைப்பற்றும் நோக்கமோ, இந்தியாவைக் கைப்பற்றும் நோக்கமோ இந்த யுத்தத்தில் கிடையாது. யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்— இல்லையேல் உலக யுத்தமாக மாறவேண்டும். சீனாவின் போக்கு இவ்விரண்டிலொன்றை நிர்ணயிக்கும். இதுதான் இன்றைய நிலை.

ஐ. நா. காரியதரிசி யூதாண்டிடம் பாகிஸ்தான் சமர்ப்பித்த நிபந்தனைகளைப் பார்த்த போதே, அவரது தூது நிச்சயம் தோல்விதான் என்று யுத்தநிலையை அவதானிப்பவர்கள் முடிவு செய்து விட்டனர்.

சீனா ஐ. நா.வைத் துச்சமாக மதிக்கிறது. அதைச் செல்லாக்காசாக்க அனைத்தும் செய்கிறது. அந்தப் பாதையில் பாகிஸ்தானும் செல்லுகிறதா என்று கேட்கப்படுகிறது. ஐ. நா. மூலம் சமரசம் ஏற்படுவதை சீனா விரும்பவில்லை. பாகிஸ்தானின் கருத்தும்அதுதானா?

இந்தியா என்றுமே ஏற்றுக் கொள்ள முடியாத நிபந்தனைகளை ஐ. நா. காரியதரிசியிடம் விதிப்பது, ஐ. நா. முயற்சியைத் தோல்வி அடையச் செய்ய வேண்டுமென்ற சீனாவின் திட்டமே தவிரவேறென்ன?

ஐ. நா. சமரச முயற்சியிலீடுபட்டிருக்கும் போது, அதனை அலட்சியம் செய்து ஐ. நா. வைப் பக்கவாட்டில் தாண்டிச் சென்று, சமரசம் செய்யும்படி அமெரிக்காவை ஜனாதிபதி அயூப்கான் அழைத்திருப்பது ஐ. நா. வின் செல்வாக்கை அழிக்க வேண்டுமென்ற சீனாவின் திட்டமே தவிரவேறென்ன?

ஆனால் அயூப்கான் மூலமாக சீனா விரித்த வலையில் அமெரிக்கா விழவில்லை. 'நாங்கள் தனியாக வந்து சமரசம் செய்யத் தயாரில்லை. ஐ. நா. மூலமாகவே சமரசத்துக்கு முயற்சி செய்வோம்' என்று கூறிவிட்டது அமெரிக்கா.

ஐ. நா. முடிவை நிராகரிக்கலாம்

அடுத்து சீனா என்ன உபாயத்தைக் கையாளும் என்று தெளிவாகத் தெரிவில்லை. ஆயினும் ஐ. நா. பாதுகாப்பு சபை யுத்தம் பற்றி செய்யும் எந்தத்தீர்மானத்தையும் பாகிஸ்தான் நிராகரிப்பதற்கான நிர்ப்பந்தங்களைப் பாகிஸ்தான் மீது சீனா பிரயோகிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

சுருங்கக் கூறின், ஐ. நா. சமரசயோசனைகள் பாகிஸ்தானைப் பொறுத்தவரையில் பயன்படாதென்றும், ஐ. நா. தனது முடிவுகளை ஏற்றுக் கொள்ளுமாறு பாகிஸ்தானை வற்புறுத்தினால் பாகிஸ்தான் ஐ. நா. விலிருந்தே, இந்தோனேஷியாவைப்போல, வெளியேறிவிடக்கூடுமென்றும் யுத்த நிலைமையை அவதானிப்பவர்கள் கூறுகின்றனர்.

சுதந்திரன் அரசியல் நிலையம்

இன்றைய நிலையில் ஐ. நா. விலிருந்து வெளியேறுவதால் பாகிஸ்தானுக்கு அதிக நஷ்டமெதுவும் ஏற்படப் போவதில்லை.

அடுத்து என்ன?

இந்த நிலையில் ஐ. நா முயற்சி வெற்றி பெறுவது சந்தேகமே. அடுத்து என்ன?

சமரச முயற்சிக்கு இன்னும் இரு வழிகளுண்டு. ஒன்று சாம்ராஜ்யக் குடும்பம் தலையிடுவது — மற்றொன்று 'பெல்கிரேட்' பாணியிலே மண்டல சார்பற்ற நாடுகளின் மாநாடொன்றினைக் கூட்டி அதன் மூலம் இந்தியாவையும் பாகிஸ்தானையும் சமரசம் செய்து வைக்க முயற்சி செய்வது.

அவசர மாநாடு

சாம்ராஜ்ய நாடுகளின் அவசர மாநாடொன்றைக் கூட்டி சாம்ராஜ்யத் தலைவர்கள் அனைவரும் ஒன்றுகூடி சேர்ந்து சென்று ஒரு சமரச அடிப்படையில் யுத்தத்தை நிறுத்துமாறு, பாகிஸ்தான் இந்தியத் தலைவர்களை நேரடியாக வற்புறுத்த வேண்டுமென சென்ற வாரம் 'சுதந்திரன்' எழுதியுள்ள தலையங்கத்தில் யோசனை கூறப்பட்டிருந்தது.

இது சமரச முயற்சிக்குத் தகுந்த வழியாகும். இத்துறையில் மலேயா பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் போன்றோர் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்திருப்பது போற்றத்தக்கதாகும்.

சாம்ராஜ்யக் குடும்பத்தின் அவசர மாநாடொன்றினை இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் அண்மையிலுள்ள கொழும்பில் (லண்டனில் அல்ல) அவசரமாகக் கூட்டவேண்டும். பிரதமர் சாத்திரியையும் ஜனாதிபதி ஐயூப்கானையும் இம்மாநாட்டில் கலந்துகொள்ளும்படி வற்புறுத்தவேண்டும். அவர்கள் நாடுகளில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தாலும் அண்மையிலுள்ள கொழும்புக்கு ஓரிரு தினங்கள் வந்து செல்லுவது அவர்களுக்கு கடினமாக இருக்க முடியாது,

இவ்வாறு செய்வதின் மூலம் யுத்தத்தை நிறுத்தவும், காஷ்மீர் பிரச்சினை பற்றி விவாதித்து முடிவு செய்யவும் வழி பிறக்கும்.

இதற்கு முன் வந்து துரித நடவடிக்கை எடுக்க வேண்டியது பிரிட்டனின் கடமையாகும். ஆனால் பிரிட்டனோ ஓர் அசமந்தப் போக்கைக் கையாளுகிறது. இந்தப் போக்கு சாம்ராஜ்யக் குடும்பத்தைச் சிதறடித்து விடுமென்று விஷயம் தெரிந்தவர்கள் கூறுகின்றனர்.

நடுநிலைமை நாடுகள் முயற்சி

சாம்ராஜ்ய மாநாடும் பயனளிக்காத பட்சத்தில் நடுநிலைமை நாடுகள் அனைத்தும் ஒன்று திரள வேண்டும். ஓர் சமரச அடிப்படையிலே யுத்தத்தை நிறுத்துமாறு அவ்விரு நாடுகளையும் வற்புறுத்த வேண்டும். சாம்ராஜ்யக் குடும்பத்தின் முயற்சி பயனளிக்காவிட்டாலும், நடுநிலைமை நாடுகளின் கூட்டு முயற்சி நிச்சயம் பயனளிக்கலாம்.

நடுநிலைமை நாடுகளை ஒன்று திரட்டும் முயற்சியை இலங்கை மேற்கொள்ளலாம். நாஸர், டிட்டோ போன்றோர்களின் ஆலோசனையைப் பெற்று இலங்கை இத்துறையிற் துரித நடவடிக்கை எடுக்கலாம்.

சீனா என்ன செய்யும்?

சீனா இந்தியா மீது பாய்வதை அமெரிக்காவும், ரஷியாவும் செய்த எச்சரிக்கை ஓரளவு தடுத்துள்ளது என்பது உண்மையே. ஆயினும் ஒரு கட்டத்தில் இந்தியா மீது படையெடுக்க சீனா தயாராகவே இருக்கிறது. இந்தியாமீது சீனா விடுத்த கண்டனக் கணையும், இந்தோனேஷியா தீவிரமாக யுத்தத்தில் தலையிடத் தயாராவதும் உலக யுத்தத்தை நோக்கியேயாக் — இந்தியப் போரை இழுத்துச் செல்கிறது.

இது சமய, இன யுத்தமா?

இலங்கையில் இரு நாடுகளுக்கும் ஆதரவாளர்கள் இருக்கின்றனர். அவர்கள் இங்கு ஆர்ப்பாட்டம் செய்ய அனுமதிப்பதால், நாட்டின் நடுநிலைமைக்குப் பங்கம் ஏற்படுவதோடு, உள் நாட்டில் கொந்தளிப்பும் ஏற்பட

(9-ம் பக்கம் பார்க்க)

நிறுத்தப்பட்ட பதவி உயர்வுகள் மீண்டும் வழங்கப்படும்

நிதி, நிர்வாகச் சட்டங்கள் தமிழில் மொழிபெயர்ப்பு

எழுதுவினைஞர் முயற்சி வெற்றி

தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு 1-10-63 முதல் மறுக்கப்பட்டிருந்த பதவி உயர்வுகள் மீண்டும் வழங்கப்படவிருக்கின்றன. கடந்த வாரம் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தூது குழு ஒன்று மேலதிக திறைசேரித் துணைச் செயலாளருடன் நடத்திய பேச்சு வார்த்தையின் பயனாகவே இப் பதவி உயர்வுகள் வழங்கப்படவிருக்கின்றன.

தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு 1-10-63 முதல் சிங்களத் தகைமையின்மை காரணமாக தரம் ஒன்றுக்கான பதவி உயர்வுகள் மறுக்கப்பட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே. அண்மையில் அமைச்சரவை அரசாங்க ஊழியர் விடயமாகச்செய்து கொண்ட முடிவைத் தொடர்ந்து ஏற்பட்ட மாற்றங்களைச் சாதகமாகக்கொண்டு அரசாங்க எழுது வினைஞர் சங்கம் மேலதிக திறைசேரிச் செயளாளரைப் பேட்டி காண ஒழுங்குகளை மேற்கொண்டது.

மேலதிக திறைசேரிச்செயலாளருடனான பேட்டி கடந்த 19-8-65, 9-9-65 ஆகிய நாட்களில் நடைபெற்றன. இப்பேட்டியின் போது அ. எ. வினைஞர் சங்கத்தின் சார்பில் தலைவர் திரு. கோடீசுவரன், பொதுச்செயலாளர் திரு. தங்கவேலு ஆகியோர் கலந்து கொண்டனர். இப்பேட்டியில் தமிழ் அரசாங்க எழுது வினைஞர்கள் சம்பந்தப்பட்ட பல விடயங்கள் ஆராயப்பட்டன.

சிங்களத்தகைமையின்மை காரணமாக 1-10-63 முதல் நிர்வாக வகுப்பு தரம் ஒன்றுக்கு பதவி உயர்வு பெறுத தமிழ் ஊழியர்களுக்குஉடன் பதவி உயர்வு வழங்கப்படவேண்டும் என்றும், இப்பதவி உயர்வுகளுக்கான திகதி 1-10-63ல் இருந்து கணிக்கப்பட வேண்டுமென்றும் எழுது வினைஞர் சங்கத் தூது குழு வற்புறுத்தியது. இது பற்றி இருபகுதியினருக்கு மிடையில் நீண்ட நேர விவாதம் நடைபெற்ற பின்னர் பதவி உயர்வுக்கான திகதியை 1-10-63ல் இருந்து கணிப்பதாக இருபகுதியினரும் ஏற்றுக் கொண்டார்களாம்.

இதனால் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் ஊழியர்கள் உடன் பயனடைவார்கள் என்று தெரிகிறது.

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடைபெற விருக்கும் கணக்காளர், கணக்காய்வாளர் பரீட்சைக்கு இருந்த சிங்களநிபந்தனையும் நீக்கப்பட்டுவிட்டதாக இக் குழுவினர் தெரிவித்துள்ளார்கள். கணக்காளர் பரீட்சைக்குத் தோற்றும் எவரும் சிங்களத் தகைமை பெற்றிருக்க வேண்டுமென்று முன்னர் நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. இதனால் பல தமிழ் ஊழியர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலையில் இருந்தார்கள். கணக்காளர் பரீட்சை அடுத்த ஆண்டு சனவரித் திங்களில் நடைபெறும்என்று தெரிகிறது.

தமிழ்மொழி மூலம் எழுது வினைஞர் சேவையில் சேர்ந்த புதிய ஊழியர்கள் தங்கள் தரம்இரண்டு பதவிஉயர்வுக்கான பரீட்சையைத் தமிழில் எழுதுவதற்கும் ஒழுங்குகள் நடைபெறுவதாக மேலதிக திறைசேரிச் செயலாளர் எ. வி. சங்க தூது குழுவிடம் தெரிவித்துள்ளாராம்.

இப்பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கு அவசியமாகத் தேவைப்படும் நிதி, நிர்வாகச் சட்டங்களின் (A. R, F. R., P. S R.) மொழிபெயர்ப்பு வேலைகள் வேகமாக நடைபெற்று வருவதாகவும் இப்பேட்டியின் போது தெரியவந்ததாக எழுது வினைஞர் சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இப்பதவி உயர்வுப் பரீட்சையும் அடுத்த ஆண்டு சனவரித் திங்களில் நடைபெறும் என்று தெரிகிறது.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் இத்திங்கள் 19ம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்பில் உள்ள சங்கப்பணிமனையில் நடைபெறவிருப்பதாக சங்கச் செயலாளர் திரு. வே. தங்கவேலு அறிவித்துள்ளார். இக் கூட்டத்தில் தமிழ் அரசாங்க எழுதுவினைஞர்களின் பதவி உயர்வு பற்றியும், ஏனைய விடயங்கள் பற்றியும் சங்கத்தூதுகுழு மேலதிக திறைசேரிச் செயலாளருடன் நடாத்திய பேட்டி பற்றி விளக்கப்படும் என்று அறியப்படுகிறது.

பாரதி விழா

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வைப்போம் என்று கூறி பாரதியார் கவிகளை மிகச் சிறந்த முறையில் ஆசிரியர் சுந்தையா எடுத்துக் கூறினார்.

விழா ஆரம்பத்தில் கொட்டக்கலைத் தோட்டப்பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. சிற்றம்பலம் பாரதி படத்தைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

திருவாளர்கள் க. கருப்பையா, த. பொன்னுசாமி, பழனியாண்டி, அந்தோனி முத்து, ஆ. பொன்னுசாமி, பொன்னையா, சுந்தரராஜ், சுப்ரமணியம், ஆசிரியர் வாமதேவன், செல்வி. ராசலெட்சுமி ஆகியோரும் உரை நிகழ்த்தினர். விழாவின் இறுதியில் நடனமும், இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

எங்கள்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

விடும். அவர் வாழ்ந்து கொண்டே இருப்பார். ஈழத் தமிழகத்தின் விடுதலையை—அதன் சுதந்திரத்தை, மனதார விசுவாசித்து வாஞ்சிக்கும் அத்தனை பேர் உள்ளங்களிலும் அவர் வாழ்ந்து கொண்டே இருப்பார்! அந்தப் புனித இலட்சியம் வாழமட்டும் அவரை நம்மிடையே இருந்து பிரிக்க உலகின் எந்தச் சக்தியாலும் முடியாது. இது சத்தியம்! இது உண்மை!

உலக யுத்தம்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

லாம். அது தவிர்க்கப்பட வேண்டும்.

இந்திய—பாக் போர் ஓர் இன யுத்தமோ, மதப் போரோ அல்ல. பாகிஸ்தானில் இந்து சமயத்தைப் பரப்பவோ, இந்தியாவில் இஸ்லாத்தைப் பரப்பவோ இந்த யுத்தம் நடைபெறவில்லை. இந்தியாவைக்கைப் பற்றி அதன் மீது முஸ்லிம் மக்களின் ஆதிக்கத்தை ஏற்படுத்தவோ, பாகிஸ்தானைக் கைப்பற்றி, அதன் மீது இந்தியாவின் ஆதிக்கத்தை நிலை நிறுத்தவோ இந்த யுத்தம் நடைபெறவில்லை.

இது காஷ்மீர் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு நடைபெறும் ஒரு யுத்தமாகும். இதற்கு மத, இன வர்ணம் பூச முயற்சி செய்வது மடமையாகும். இந்தியாவையும், பாகிஸ்தானையையும் ஆதரிப்பவர்கள் இந்த உண்மையை உணர வேண்டும்.

இ. த. அ. க. பொதுச்சபைக் கூட்டம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காரியக்குழுக் கூட்டமும், பொதுச் சபைக் கூட்டமும் இவ்வார முடிவில் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக் கட்சித் தலைமைப் பணிமனையில் நடைபெறவிருக்கிறது.

கணிதத்தில்

உங்கள் பிள்ளைகள்—மாணவ, மாணவிகள் கடந்த பரீட்சைகளில் குறைவாகக் காணப்பட்டால் எமது கணிதங்கள்—மனக் கணிதங்கள்—அக்ஷர கேத்திர கணிதங்களை அவ்வவ் வகுப்புகட்கு வாங்கி வீட்டுப் பாடங்களாகப் படிக்கச் செய்யுங்கள். தேர்ச்சிக்கு உத்தரவாதம். ஆலோசனைகட்கெழுதுங்கள்.

வே. சிவக்கொழுந்து,
(நூலாசிரியன்)
கலாபவனம்,
பருத்தித்துறை.

ஜீ. சீ. ஈ. (சா. த.)

பரீட்சையில் தேற உதவி புரியும்.
பட்டதாரி ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட வினாவிடை பயிற்சிக் கோவைகள்.

தமிழ் பாஷை	5-00
எண் கணிதம்	5-00
குடியியல்	5-00
உடனலவியல்	5-00
சரித்திரம்	5-00
இஸ்லாம்	5-00
பொது அறிவும் விவேகமும்	5-00

101 கட்டுரைகள் ரூ. 7-50

சர்வகலாசாலை போதனா கழகம்
(U T I)
540, மருதானை வீதி,
த. பெ. 1079,
கொழும்பு.

மத்திய வங்கியில் தமிழ்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும்விடாமலிருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். இன்று தேசிய அரசாங்கமென்று நாங்கள் அன்பாக ஆதரிக்கும் அரசாங்கம் இந்த விதமான பிழைகளைத் தொடர்ந்தும் விட்டுக் கொண்டிருக்கக் கூடாது. இப்படியாகவிட்டுக் கொண்டிருந்தால் இலங்கையிலுள்ள எல்லா மக்களுடைய நம்பிக்கையையும் அவர்கள் பெறமுடியாது. இந்தக் குறையை நீக்கி தமிழில் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களையும் மத்திய வங்கி சேவைக்கு எடுத்துக் கொள்ள வேணடும்.

'இன்று தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து கொழும்பிற்கு வருபவர்களால் மத்திய வங்கி எங்கே இருக்கிறதென்று கலபமாகக் கண்டுபிடிக்க முடியாது. இந்த மத்திய வங்கிக் கட்டடம் மிக அழகானது. அதன் பெயரும் மிக அழகாகச் சிங்களத்தில் மட்டுமே 'ஸ்ரீ லங்கா மத்திய மகாபாங்குவ' என்று பொறிக்கப்பட்டுள்ளது. இதன் பெயர் தமிழிலோ ஆங்கிலத்திலோ பொறிக்கப்படவில்லை. சிங்களம் அறியாத ஒருவர் இந்த வங்கியை அறிவது மிகவும் சிரமமான காரியமேயாகும். எனவே இவ்விடயத்தைக் கௌரவ அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.'

இரத்தினம் பேச்சு

நிதி அமைச்சின் மானியம் மீது கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. கா. பொ. இரத்தினம் பேசுகையில் மத்திய வங்கி பற்றிக் குறிப்பிட்டதாவது:-

'மத்திய வங்கியிலே நடைபெறும் சிலசெயல்களைப் பற்றிக் கூறவேண்டும். அரசாங்க மொழித் திணைக்களத்திலே நானிருந்த காலத்தில், ஏறக்குறைய 25,000 ஆட்சிச் சொற்களை ஆங்கிலத்திலிருந்து தமிழிலே ஆக்கியிருக்கிறேன் என்று சிங்கள நண்பர்களுக்கு இத் தருணத்திலே சொல்லி வைக்க வேண்டியவனாக இருக்கின்றேன். எந்த நாட்டிலும் இல்லாத விதத்தில், இந்த நாட்டிலேதான் தமிழ் மொழியை நியாயமான அளவுக்கு உபயோகிப்பதற்கெனச் சட்டம் வகுக்கப்பட்டிருக்கின்றது.

புதுமையான சட்டம்

'உத்தியோகஅலுவல்களில் தமிழை நியாயமான அளவுக்கு உபயோகப்படுத்த முடியும் என்ற பங்கிட்டுக் கருத்து உண்டானது இந்த நாட்டிலேதான். நல்ல உள்ளங்கள் புண்படும் விதத்தில், நியாய உணர்ச்சியுள்ளவர்கள் துக்கப்படும் அளவுக்கு அரசாங்கம் ஒரு மொழியை 'ரேசன்' பண்ணுகிறதென்றால்—அதை நியாயமான ஒரு அரசாங்கமென எவருமே ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

'ஆங்கிலச் சொல்லொன்றுக்குரிய, சரியான தமிழ்ச் சொல்லைக் கண்டு உரைப்பதைத் தமிழ் அறிஞர்களிடம்—தமிழ் தெரிந்தவர்களிடம்—தமிழ் படித்தவர்களிடம் விட்டுவிட வேண்டும். அதுதான் நியாயமான முறை.

'இப்பொழுது "Central Bank of Ceylon" என்பதற்கு சரியான தமிழ்ச் சொல் என்ன என்பது பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. நான் அரசாங்க மொழித் திணைக்களத்தில் இருந்த காலத்தில் வெளியிட்ட 'Glossary of Official Terms and Phrases in Tamil' என்ற வெளியீட்டில் 'Central Bank' என்பதற்கு 'மத்திய வங்கி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் அச் சொல்லைக் கையாள விரும்பாமல், 'ஸ்ரீ லங்கா மகா வங்கி' என்ற சொல்லைக் கையாண்டிருக்கிறார்கள். எப்படியாவது தமிழ்ப் பெயரில் ஸ்ரீ என்பதைப் புகுத்தி விடவேண்டுமென்ற நோக்கத்துடனேயே இப்படியான அலுவல்கள் அங்கு நடைபெறுகின்றன.

'தமிழ்ச் சொல்லாக்கப் பணியினை உண்மையிலேயே தமிழ் மொழியிற் புலமை பெற்றவர்களிடம் தமிழ் மொழி தெரிந்தவர்களிடம் விட்டு விடாமல், அவர்கள் கூற்றுக்கு மதிப்பளிக்காமல், தமிழ் மொழி அமைப்பில் அரசியலைப் புகுத்துவது மனிதப் பண்புள்ள எந்த மகனும் வெறுக்கத்தக்க ஒரு செயலாகும். இதனால் எத்தனையோ மொழி பெயர்ப்புக்களை உபயோகப்படுத்த முடியாத நிலை பல திணைக்களங்களில் ஏற்பட்டுள்ளது.

'சிங்கள மக்கள், ஒரு ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான சிங்களச் சொல் ஒன்றை ஆக்கவேண்டுமென்றால், சிங்கள மொழியிலே பாண்டித்தியம் பெற்றவர்களினாலேயே அதனைச் செய்ய இயலுமே அன்றி, அம்மொழி தெரியாதவர்களால் செய்ய இயலாது. சிங்கள மொழியில் பாண்டித்தியம் பெற்றவர்கள்தான் அதனை ஆக்க அதிகாரம் பெற்றவர்கள் எங்களைப் போன்ற சிங்கள அறிவற்றவர்கள் அதில் ஈடுபடுவது வெறும் கேலிக் கூத்தாகவே முடியும் என்று கூற விரும்புகின்றேன்.'

'மாய ஜோதி' ஊது பத்திகள்

"பாட்டாளி தொடக்கம் பணக்காரர் வரை"
விரும்புவது "மாய ஜோதி" ஊது பத்திகளே!
ஏன்?

★ அதன் சுகந்த நறுமணம்
★ அதன் நிலைத்து எரியும் தன்மை
★ நவீன தயாரிப்பு
★ அதன் நியாய விலை.

நீங்கள் மட்டும் ஏன் தயக்கம்?
வாங்குங்கள் ஒரு முறை, நிலைத்து விடும் 'மாய ஜோதி'

ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்ரீஸ்.
128/3, வாட்பிளேஸ், கொழும்பு-7.

கொம்புத்தேன்

எமது சிறுகதை

தொழிலாளர் பலர் வேலை செய்யும் ஒரு ஆலையின் சொந்தக் காரரான ஆறுமுகம்; தன்னுடைய வீட்டின் முன்றலில் நின்று நிழல் பரப்பிய வேப்பமரத்தின்கீழ் ஒரு நாற்காலியில் உல்லாசமாகவீற்றிருந்தபடி தென்றற் காற்றை நுகர்ந்து கொண்டிருந்தார். அவருடைய கண்கள், அவருடைய கைகள் விரித்து வைத்துக் கொண்டிருந்த 'பாரதியாரின்கவிதைகள்' எனும் நூலிலுள்ள 'முரசு' என்னும் பகுதியைக் கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தது. அவருடைய வாய் மெல்ல மெல்ல அப்பகுதியிலுள்ள பாடல்களை முணுமுணுத்துக்கொண்டிருந்தது. கால்தரைதனிலே தாளமிட்டுக் கொண்டிருந்தது. அவர் பாட்டுகளின் பொருளை இரசித்தாரா, அல்லது பாடல்களின் இசையை ரசித்தாரா என்பது தெரியவில்லை.

'ஐயா, வணங்குறேனுங்க...' என்ற குரல் அவருடைய 'ரசிகத்'தன்மைக்கு இடையூறாக வந்து குதித்தது. புத்தகத்தைத் தனது தொப்பை விழுந்த தருவயிற்றின்மீது வைத்து விடுக்கண்களை நிமிர்த்தி வந்தவனை நோக்கினார்.

'வணக்கமுங்க'...என்றான் கந்தசாமி. அவன் அவருடைய நெல்குத்தும் 'மில்'லில் ஒரு வேலையாள். ஏறக்குறைய ஐம்பது வயதிருக்கும். ஒல்லியான சரீரம்; ஒட்டி உலர்ந்தவயிறு. ஆறுமுகத்தாரையும், கந்தசாமியையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கந்தசாமியின்உணவையும்ஆறுமுகத்தார் பறித்து உண்டு பருத்துவிட்டாரோ என்று எண்ணத் தோன்றும். சில சமயம் உண்மையும் அதுதானோ?

'வணக்கம்...சாமி' என்றான் கந்தசாமி மூன்றாவது தடவையாக. அவனது கை, பிரடியைச்சொறிந்து கொண்டிருந்தது.

ஆறுமுகத்தார் வயிற்றைச் சொறிந்து கொண்டே, இருக்கையினின்றும் சற்றும் எழுந்திராமல், 'நவீன தமிழினின் பண்பாட்டுக்கு' இணக்கமானது என்று எண்ணியோ என்னவோ, இருந்தபடியே 'வணக்கம் இருக்கட்டும், வந்த விசயம் என்ன புளிமூட்டை?' என்று கந்தசாமியை நோக்கிக் கேட்டார். 'புளிமூட்டை' என்று 'ஐயா' வால் ஏற்கனவே திருப்பட்டம் சூட்டப்பெற்ற கந்தசாமியின் கை மீண்டும் பிரடியில் 'வயலின்' வாசிக்க ஆரம்பித்தது.

'இல்லே, ஐயா! வந்து... ...வந்து...எனரை பொடியன் சண்முகத்துக்கு' ஒரு பத்து ரூவா சம்பளம் கூட்டினாநல்லாயிருக்குமெண்டு பாக்குறன்...சாப்பாட்டுக்கே முந்தின அறுபது ரூபா காணாது...அதுதான் கேக்குலாமெண்டு வந்தனான்...' என்றான் கந்தசாமி. உண்மையான காரணம் அவர் மகளின் திருமணமே. அதைச் செய்ய முன்னேற்பாடு செய்ய அவர் ஆரம்பித்திருந்தார்.

'பத்து ரூவா சம்பளம் கூட்டினா நல்லாத்தானிருக்கும்—உங்களுக்கு!' என்ற ஆறுமுகத்தாரின் வாய் அடைச்சொல்லை மிக அழுத்தமாக உச்சரித்தது. அதன் கடுமையை உணர்ந்த கந்தசாமி 'வயலின்' வாசிப்பதை விட்டுக் கையைத் தொங்கவிட்டான். அவனுக்குத்தெரியும், ஆறுமுகத்தாரின்பேச்சிற்கிடையில் எவரும் குறுக்கிடக் கூடாதென்பது. எனவே பேசி முடிக்கட்டும் என முடிவு செய்தான்.

'இஞ்சை காசு முளைக்கிதெண்டு நினைச்சியே, புளிமூட்டை?...உன்னரமோனுக்குப் பத்து ரூபா கூட்டினால், மிச்சமாயிருக்கிற வேலைகாரர் வெறும் வால்வெட்டியளே?... அவங்களும் ஒரு சுவத்தக் கொடியையும் தூக்கிக் கொண்டு...'முதலாளியே! சம்பள உயர்வு கொடு', அந்தா இந்தா எண்டு கொண்டு வருவாங்கள்... பேந்து வேலைநிறுத்தம்... பிறகு வேலை செய்யாத நாளுக்கும் சம்பளம் தாவெண்டு நிப்பாங்கள்... குடுத்துப்பாரன்!...இந்தா பாரு, சம்பளம் கட்டுப்படியாகாட்டிக் கலியாணமே செய்துகப்படாது... என்ன நானே கலியாணம் செய்யச் சொன்னனான்? கலியாணத்தைச் செய்து போட்டு என்னெட்டைக் காசுக்கு வந்து நிக்கிறாய்? வேணுமெண்டால் அந்தப் பொம்பிளையையும் அனுப்பன்...அங்கை தவிடு அரிக்கிற வேலை கிடக்குது... மாதம் பத்துப் பதினைஞ்சு போட்டுத்தாறன்' என்று பொழிந்தார் ஆறுமுகத்தார்.

கந்தசாமிக்கு நாடி இறங்கிவிட்டது. 'நாங்க பொம்ஞட்டியளே வேலைக்கு அனுப்பறதில்லேங்க, ஐயா!' என்றான் கெஞ்சலாக.

'அட, மாராசானும்! அப்பிடீன்னு இரேன்...சம்பளத்திலேஒரு தம்பிடியும் கூட்டிக் கொடுக்கேலாது...விருப்பமெண்டால் வேலை செய்யுங்கோ, இல்லாட்டி வேறையிடத்தைப் பாருங்க...நீங்க இல்லாட்டா இன்னொரு கழுதை வருகுது...போ... போ...'என்றார், ஆறுமுகத்தார். அவருடைய கண்கள் ஆத்திரத்தால் சிவந்து போய்விட்டன. தொழிலாளியின் நெடி பிடிக்காததுபோலமூக்கைச் சால்வையாற் பொத்தித் துடைத்துக்கொண்டார்.

இனி விஷயம் நடக்காது என உணர்ந்துகொண்ட கந்தசாமி, 'சரிங்க, அவளேயே அனுப்பறேன்' என்று கூறிவிட்டான். அவன்சென்றபின்மீண்டும்

'தொண்டரென்றோர் வகுப்பில்லை-தொழில் சோம்பலைப் போல்இழி வில்லை' என்ற பாரதியின் பாடலை இசைக்க ஆரம்பித்தார்.

அழகான பெண். குணத்திலே தங்கம். பெயரும் அதுதான். சுமார் இருபது வயதிருக்கலாம். உழைப்பினாலே கருநிறமடைந்திருந்த உடல், ஆனால் அந்த ஏழைமையிலும், போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து என்று மகிழ்ச்சியுடன் வாழ்ந்ததினாலோ என்னவோ, முகம் சற்று வெளுப்பாக-ஆனால் பேயடித்தது போலல்லாமல்-அழகாக இருந்தது. காதிலே துவாரத்தை சுர்க்குக் குச்சி கொண்டு அடைத்திருந்தாள். மாவடு போன்று லாகவமாக வளைந்து நெளிந்த கண்கள். முற்றிய மாங்காயின் மீது சாம்பல் நிறம் படர்ந்திருப்பது போன்ற இமைகள், பள்ளமில்லாத சம்தரை போன்ற நெற்றி, அலையலையாகப் படரும் கேசத்தை ஒரேயடியாக அணைத்துப் பின்னிய ஒன்றைப் பின்னல்; இளந்தென்னம் பாளை போன்ற கழுத்து; இன்னும் வர்ணிக்க முடியாத எத்தனையெத்தனையோ சிறப்புகளெல்லாம் அவளிடம் குடிகொண்டிருந்தன.

பவுடரும், ஸ்னோவும் இல்லாமலேயே அழகாக விளங்கினாள். அழகென்றால், ரதி, ஊர்வசி போன்றவர்களின் அழகென்று

அரியாலையூர்
த. இந்திரலிங்கம்

எழுத்தாளர்கள் கூறும் அழகல்ல. ரதி, ஊர்வசி ஆகியோரின் அழகிலே ஒரு மயக்கும் கவர்ச்சி-அதாவது, கொல்லும் அமிலதை நிகர்த்திடும் கள்ளொன்று-தங்கியிருக்கும். ஆனால் தங்கத்தின் அழகு அப்படிப்பட்டதல்ல. சாதாரண அழகு. கௌரவமான குடும்பப் பெண்ணின் முகத்தில் ஒளிரும் அழகுதான் அது. ஆனால் இந்தக் காலத்தில் 'கௌரவமான' என்ற சொல்லுக்குப் 'பணமுள்ள' என்றொரு கருத்தும் சிலர் கற்பித்துக் கொள்கிறார்களே, அதற்கென்ன-செய்யலாம்?

இத்தனை வர்ணிப்பிற்கும் உட்பட்ட அந்தப் பெண் தங்கம் இப்பொழுது ஆறுமுகரிய தத்தின் மில்லில் தவிடரிக்கும் வேலையில் மாதம் பத்துப் பதினைந்து - முதலாளியின் கிருபைக்கேற்பப் பெற்றுக் கொண்டிருந்தாள். ஆறுமுகத்தார் தொழில் விசயத்தில் 'அப்பிடி இப்பிடி' என்றாலும், வாழ்வில் ஒழுக்கசீலர். அவருடைய ஏகபுத்திரனின் திருவிளையாடல் தான் ஒரு மாதிரி இருந்தது. மில்லிலே வேலையாட்களை மிரட்டி வேலை-வாங்குவது தான் அவனது வேலை. செல்வம்தான் திருநாமம். ஆனால் தங்கம் வேலைக்கு வந்த பின்னர் அவனுடலில் ஒரு 'சுறுசுறுப்பு' உண்டாகி வேலையை மிக்க ஐரூராகக் கவனிக்கத் தொடங்கி விட்டான். முன்பெல்லாம் 'மெசினை நிறுத்தும்' என்று சொன்னவன், இப்பொழுது 'ஏய், மெசினை நிறுத்து!' என்று சொல்லத் தொடங்கினான்.

தவிடரிக்கும் வேலையை மிக ஐரூராகக் கவனித்தான்-ஏன் தங்கத்தையும் தான். நாலு மணிக்குப் பெண்களெல்லாரும்வேலை முடிந்து வீடு சென்று விடுவார்கள். ஆனால் தங்கத்துக்கு மட்டும் தவிடரிக்கும் வேலை • ஐந்துமணி வரைக்கும் இருக்கும் தங்கம், தானும் நேரத்துக்குப்போக வேண்டுமென்று கேட்டுப் பார்த்தாள். ஆனால் செல்வம், வேண்டுமானாற் சம்பளம் ஐந்து ரூபா கூட்டித்தரலாம்! வேலை நடக்க வேண்டும்' என்றான் அப்புறம் அவளால் மறுக்க முடியவில்லை. சிலநாட்கள், தனியாகத் தவிடரிப்பது தங்கத்து அவத்தையாக இருந்தது. ஆனால்செல்வமும் சேர்ந்து கதைத்து மேற்பார்வை செய்யவே சில நாட்களில் அவளுக்கு அது பழகி விட்டது. சில வாரங்களின் பின் அவர்களிடையே 'நட்பும்' உண்டாகி விட்டது. ஏதோ காதல் என்கிறார்களே, அதுவாகத்தான் இருக்க வேண்டும்.

வாக்குறுதிகள் பரிமாறப்பட்டன. நம்பிக்கைகள் வளர்ந்தன. ஆனால் நடைமுறையில் அமுலுக்கு எதுவும் வரவில்லை. தவிடரிக்கும் வேலை தொடர்ந்தது. தினம்தினம் வாக்குறுதிகளும் தொடர்ந்தன.

தங்கத்துக்கு அவளது தகப்பனால் மாப்பிள்ளை பார்க்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. தங்கத்தின் அழகு ஊர்ப்பிரசித்தி பெற்ற தாயிற்றே. பல மாப்பிள்ளைகள் 'கொத்திச்' செல்ல முன் வந்தனர். ஆனால் தங்கமோ, 'ஒருவருடம் போகட்டும், இரண்டு வருடம் போகட்டும்' என்று நாட்களைப் பின் தள்ளிக் கொண்டே வந்தாள். ஆனாற் தந்தையினதும், தமையனதும் தூண்டுதலால் இறுதியில் உண்மையைச்சொன்னாள். தந்தை-கந்தசாமி-இடியெனச்சிரித்தார். அது கேலிச்சிரிப்பல்ல ஆத்திரச் சிரிப்பு.

'அடி பொண்ணே! அற்பனுக்குப் பிறந்த உனக்கும் இந்தஎண்ணம் வரவா வேண்டும்? அவையடை சொத்துப் பத்து எல்லாத்தும், வரதட்சினையாகக் கொடுக்கிறதுக்கு என்னையும் இந்த வீட்டையும் ஏலம் போட்டாலும் போதாதே! வேணுண்டி உண்ரை ஆசை' என்று கூறிப்பார்த்தார்.

அசையவேணுமே, ஊகும். விடாப்பிடியாக நின்றாள், தங்கம். முடித்தால் அவரை முடிப்பேன்! இல்லாவிடில் கன்னியாகவே காலம் கழிப்பேன் என்ற அவளது பிடியை யாராலும் மாற்ற முடியாமற்போய்விட்டது.

'செல்வமும் என்னை மணப்பார். இல்லாவிடில் அவரும் பிரமச்சாரியாகவே காலம்கழிப்பார்! இது அவரது வாக்குறுதி' என்று தங்கம் தமது ஒப்பந்தத்தையும் அவையின் கண் வைத்தாள்.

அதுதான் கந்தசாமியின் உள்ளத்திற் சிறிது மாற்றத்தையுண்டாக்கியது. 'சரி கேட்டுப் பார்க்கிறேன்' என்று புறப்பட்டார்.

வேப்பமரத்தின் காற்றிலே இன்சுகம் அனுபவித்துக் கொண்டிருந்தார் ஆறுமுகம். இந்த முறை தலையைச் சொறியாமல் சற்று 'உஷாரா'கச் சென்றார். கந்தசாமி என்ன இருந்தாலும் வருங்காலச் சம்பந்தியல்லவா! அதே பாரதியின் புத்தகத்தை வயிற்றின்மீது வைத்துவிட்டு நிமிர்ந்தார் ஆறுமுகம்.

'என்ன புளிமூட்டை, சம்பளம்தாலே பொம்பிளையும் சம்பாதிக்குது! பேந்தென்னத்துக்கு வாறாய்?' என்று கேட்டார்.

'ஐயா' என்பதைத் தற்காலிகமாக நீக்கிவிட்டு, 'இல்லே, இது வேறு விசயம் பாருங்கோ! ஒரு நல்ல விசயமாப் பேச வந்திருக்கிறன்' என்றார், கந்தசாமி.

'என்ன அப்படிச் சுத்தி வளைக்கிறாய்? ஏதாவது உன்ரை பொம்பிளை விசயம் போலிருக்கு' என்றார், ஆறுமுகம்; சிரித்துக் கொண்டே, உண்மையாகக் கேட்கவில்லை; கேலியாகத்தான் கேட்டார். ஆனால் கந்தசாமிக்கு அது எப்படித் தெரியும்? பாவம் அப்பாவி அப்படியே நம்பி விட்டார்!

'அடடா! உங்களுக்கும் தெரிஞ்சுட்டுதுபோல கிடக்கு, எனக்கு இவி அரைவேலை குறைஞ்சுதுபோலத்தான்! உங்ககடை தம்பிக்குச் சம்மதம்; உங்களுக்கும் சம்மதம்தானே! நானும் இண்டைக்கு வரைக்கும்—வயித்தைக் கட்டி வாயைக் கட்டிக் கொஞ்சக் காசுவைச்சிருக்கிறன். நகைதான் போடேலும்! உங்களுக்கும் எங்களைத் தெரியும் தானே' என்றார் கந்தசாமி.

[14-ம் பக்கம் பார்க்க]

தங்கம் சாதாரண அழகி. கௌரவமான குடும்பப் பெண்ணின் முகத்தில் ஒளிரும் அழகு தான் அது. ஆனால், இந்தக் காலத்தில் 'கௌரவமான' என்ற சொல்லுக்குப் 'பணமுள்ள' என்றொரு கருத்தும் சிலர் கற்பித்துக் கொள்கிறார்களே?—தேவாரத்தைப் பாடிக் கொண்டு சிவன் கோவிலை இடிக்கும் ஆறுமுகம்.....

மங்கையர் சங்கம்

கருக்கமேடை

எதிர்கால உயர்ச்சிக்கு கூட்டுக் கல்வியே சிறந்த வழி

கூட்டுக் கல்வி நாட்டுக்கு நல்லதா? [10]

'பெண்களை வீட்டுக்குள் பூட்டிவைப் போம்' என்ற பழைய சமுதாய நிலை மாறி ஆண்களுக்குச் சமனாக பெண்களும் சம அந்தஸ்து வகித்து வரும் இக்காலத்தில் கூட்டுக்கல்வியே நாட்டுக்கு நன்மை பயக்கும் என்றே கூறவேண்டும்.

பல்கலைக்கழக கல்வி முறை கூட்டுக் கல்வி முறையாகும். அங்கு கல்வி பயிலும் ஆண்கள் பெண்கள் இருபாலாரிடையேயும் கருத்து ரீதியில், சமூக ரீதியில், பண்பாட்டு ரீதியில் பல வேறுபாடுகள் இருப்பதைக் காணமுடியும். இதற்கு காரணம், அவர்களுள் சிலர் இளம் பிராயத்திலிருந்தே கலவன் பாடசாலைகளில் கல்வி கற்று வந்ததும், வேறு சிலர் தனி மகளிர் கல்லூரிகளிலோ அல்லது தனி ஆண்கள் கல்லூரிகளிலோ கல்வி கற்று வந்ததுமேயாகும்.

கலவன் பாடசாலைகளில் கல்வி பயின்று வந்தவர்களிடையே காணப்படும் அச்சமின்மை, துணிவு, வெருட்சித்தன்மை, பரந்த கண்ணோட்டத்துடன்கூடியமனப்பான்மை, என்பனவற்றை தனி மகளிர் கல்லூரிகளிலே கல்வி பயின்று வந்தவர்களிடையே காணபது அரிதாகவேயிருக்கின்றன. அதுமட்டுமல்ல ஆண்களுடன் சேர்ந்து பழகுவதில் கூச்சப்படுவார்கள்—பின்தங்குவார்கள்.

இளம் ஆண், பெண் இருபாலாரின் கையிலேயே நாட்டின் எதிர்கால முன்னேற்றம் தங்கியிருக்கும் நிலையில். ஆண் பெண்களிடையே சாதாரண—விகற்பமற்ற கலந்துரையாடல் இல்லாத நிலையில் ஒரு நாட்டுக்கு எந்த வகையான நன்மையும் உண்டாகப் போவதில்லை.

கூட்டுக் கல்வி முறையினால் ஆண்களும் பெண்களும் ஒருவர்க்கொருவர் கலந்துரையாடுவதன் மூலமும், கருத்துக்களைப் பரிமாறுவதன் மூலமும், பேச்சுப் போட்டிகள், விவாதங்கள் என்பனவற்றில் ஆண்களும் பெண்களும் சரிசமத்துவ ரீதியில் பங்கு பற்றுவதன் மூலமும் பரந்த மனப்பான்மை, துணிவு, அச்சமின்மை, பேச்சுவன்மை முதலியனவற்றைப் பெறவும், கிணற்றுத் தவளைகளாக, புத்தகப் பூச்சிகளாக இருக்காது, உலக நோக்கில் பரந்த அறிவைப் பெறமுடிகின்றது. இத்தகைய நிலை ஒரு நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்கு பல வழிகளிலும் நன்மை பயக்கும் என்று கூறலாம்.

அடுத்து இல்வாழ்க்கை சிறப்புற கூட்டுக் கல்வி அத்திவாரமாக அமைகின்றது. கூட்டுக்கல்வி முறையின் கீழ் ஆண்களும் பெண்களும் சேர்ந்து பழகிவருவதால் அவர்களிடையே கூச்சம் தெளிந்து அச்சம் நீங்குகின்றது. சகிப்புத்தன்மை ஏற்படுகின்றது. ஆனால் ஆண்களுடன் பழகியறியாத பெண்கள் திருமணமான பொழுது அவர்களிடையே அச்சம், கூச்சம் ஏற்படக்கூடும். இந்நிலையில் பல குடும்பப் பிரச்சினைகள் ஏற்படலாம். இன்பமான எதிர்கால இல்லற வாழ்வே பாதிக்கப்படலாம். இதனால் ஒரு நாடே பாதிக்கப்படலாம். கூட்டுக் கல்வி முறை இத்தகைய பிரச்சினைகளை ஓரளவு தீர்க்கலாம்.

கூட்டுக்கல்வியால் ஏற்படும் தீமையைப் பொறுத்வரை அவை ஆண் பெண் இருபாலரின் மனோநிலையிலேயே தங்கியுள்ளது. பெரும்பாலான பெண்கள் தங்கள் மனத்தைக் கட்டுப்படுத்த முடியாது தவறான முறையில் ஆண்களுடன் பழகுவதால், அவர்களைப் பற்றி வேறு சிலரின் வாயிலாகச் சமுதாயத்தில் தவறான கருத்துக்கள் பரப்பப்படுகின்றன. இதனால் பெண்ணின் எதிர்கால வாழ்க்கையே பாதிக்கப்படுகின்றது. பெண்கள் தங்கள் கற்பையே விற்று விடுகிறார்கள்.

இவையாவும் பெண்ணின் மனக்கட்டுப்பாட்டுள் தங்கியுள்ளது. ஆண்களும் பெண்களும் மனக்கட்டுப் பாட்டுடன் சகோதரத்துவ ரீதியில் பழகிவந்தால் எவ்வித தீமைகளும் ஏற்பட இடமிருக்காது. எனவே கூட்டுக் கல்வி முறையினால் ஏற்படக் கூடிய தீமைகளிலும் பார்க்க நன்மைகளே அதிகமிருக்கின்றன.

செல்வி யோகலெட்சுமி வேலுப்பிள்ளை

முகத்தின் அழகும் அகத்தின் அழகும்

[3] கவலை என்றால் என்ன?

கூற்பனைதான் கவலைக்கு வித்து. மனக்குரங்கை தன் இஷ்டப்படி ஆடவிட்டால், அதன் ஆட்டம் கவலை அலைகளை எழுப்பிவிடுவதில் தான் போய் முடிகிறது. கற்பனையின் விளைவால் ஆசைகளே அதிகரிக்கின்றன. கற்பனையில் உண்டாகும் ஆசைகள் நிறைவேறுவதற்கு வழி கிடைக்காவிட்டால் கவலை தான் உண்டாகிறது.

ஆகவே கவலையை ஊட்டும் ஆசைக்குக் கடிவாளம் இடுவதுதான் இன்றியமையாதது. கட்டுப்பாடற்ற எண்ண ஓட்டத்துக்கு கட்டுப்பாட்டை விதித்து விடுவோமானால் கற்பனை குறைந்து கவலைப்பட வேண்டிய நிலையும் தானாகக் குறைந்துவிடுகிறது.

கவலை உள்ளத்தைத் தாக்க ஆரம்பித்ததும் உடலும் பாதிக்கப்படுகிறது உள்ளமும் நோவடைகிறது. உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடியான முகமும் சோபை இழந்து விடுகிறது. ஆகவே கவலை என்ற கொடிய வியாதியை உடனடியாக உள்ளத்தை விட்டு அகற்ற ஆவன செய்ய வேண்டும்.

கவலைகளிலும் பலதரப்பட்ட கவலைகளை அறிஞர்கள் தரம் பிரித்துத் தந்துள்ளனர். பொருளாதாரத்தைப் பற்றிய கவலையே பெரும்பாலும் அனேகருக்கு ஏற்படுகிறது. ஆனாலும் பொருளாதார வளம் பெற்றவர்களுக்கும் கவலை இல்லாமற் போய் விடுவதில்லை.

உடலை வருத்தும் நோய்களினால் கவலைப்படுபவர்களின் தொகையினை அடுத்துக் கணிக்கலாம். உடலில் ஏற்படும் நோய் நிச்சயமாக உள்ளத்தையும் பாதிக்கவே செய்கிறது. உள்ளத்துக்கும் உடலுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதனால் தான் உடல் நோய் உள்ளத்தைப் பாதித்து நோயின் வேதனையை முகத்தின் மூலம் பிரதிபலிக்க வைத்துவிடுகிறது.

ஒரு உடல் நோயாளியை அவனுடைய உடல் காண்பிப்பதற்கு முன்னர் முகம் காட்டி விடுகிறது. தனது உள்ளக் கிடக்கையை ஒருவன் எவ்வளவு தான் மறைத்துவிட முனைந்தாலும் முகம் பளிச்சென எடுத்துக் காட்டிவிடுகிறது. உடல் வருத்தத்தையும் உள்ளத்தின் நோயையும் முகம் காட்டிக் கொடுப்பதைத் தவிர்க்க முடியாது என்பதனைக் கண்ட பண்டைய அறிஞர்கள் 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்று கூறி வைத்தனர்.

மனிதன் கவலையே படாமல் இருக்க முடியுமா? நிச்சயமாக முடியும். இவற்றை அடுத்த இதழில் ஆராய்வோம்.

குணமணி

பாராட்டு விழா

மட்டக்களப்புத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பிலில், சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற மட்டக்களப்பு தமிழக ஆசிரியர் வித்துவான் பண்டிதர் வி. சி. கந்தையா அவர்களுக்கு, பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரை அவர்கள் தலைமையில் மத்திய கல்லூரி மண்டபத்தில் கடந்த ஞாயிறு மாலை ஒரு பாராட்டு விழா நடாத்தப்பட்டது.

அன்னை தந்த அருமணியே!

—"பரஞ்சோதி"—

குலப்பெருமை தனையுணரா தடிமையாகிக்
குற்றேவல் புரிந்துண்டு கொள்கைபேசிப்
பலப்பலவாய் இனம்மாறி நின்றனைப்
பச்சோந்திக் கும்பலதலை குனியச்செய்து
கலக்கமுறும் தமிழினத்தின் இன்னல்போக்கக்
காலமெலாம் பாடுபட்ட தியாகன்செல்வர்
வலக்கரமாய் நின்றுவலு ஊட்டிவாழ்வை
வண்டமிழர்க் கர்ப்பணித்த வன்யசிங்கன்

கிண்டலுரை, நையாண்டி, கிழ்மைப்பேச்சு
கேவலப்புன வாதமதி காரஆட்டம்
கொண்டுரிமை வேட்கையினைக் குலைக்கஎண்ணிக்
கொக்கரித்த குறுமதியோர் குனியஆட்சி
மன்றமதில் மதிநுட்ப வாதஞ்செய்து
மறத்தமிழன் தன்மான நிலைமைகாட்டி
எண்டிசையும் எதிரொலிக்கச் செய்தவீர
இன்தமிழன் கோப்பாயின் றளித்தகோமான்

சிறையென்ன சித்ரவதை செய்தாலென்ன
செக்கிழுக்கச் செய்துடலைச் சிதைத்தாலென்ன
குறையாது அனுவளவும் உரிமைவேட்கை
கொண்டநிலை மாறாது கொடுமையி ரெம்
நிறைநிலையை யெய்துவது நிசமேயென்று
நிமிர்ந்துரைத்துக் குலவீரம் நிலைக்கச்செய்து
அறவாழ்வு பிறழாது வாழ்ந்தகோப்பாய்
அன்னைதந்த அருமணியெம் வன்யசிங்கன்

உங்கள்

கணவர் குடிகாரரா...?

செல்வி அக்காவிடம் 5 கேள்விகள்

கேள்வி 1.

வயதுக்கு அதிகமாகவே எனது உடல் வளர்ந்து விட்டது. சினேகிதிகள் யாவரும் எனது பருமனைக்கண்டு கேலி செய்கின்றனர். பருமனைக் குறைக்க வழியில்லையா?

—'வனிதா'

.....

உடல் பருக்க பலகாரணங்கள் உள. அதேபோல் மெலிவடையவும் பல வழிகள் உள. உடலில் உள்ள சுரபிகளின் மிதமிஞ்சிய செயற்பாடுகளினால்தான் பெரும் பாலும் உடல் பருக்கிறது. இவற்றை ஒரு தகுந்த வைத்தியரே பரிசீலனைசெய்து பரிகாரம் கூறமுடியும். பொதுவாக தேகப்பயிற்சி மூலம்உடலை மெலிவடையச் செய்யவும் முடியும்.

கேள்வி 2.

எனது கணவர் மிதமிஞ்சிய குடிகாரர். இதனால் ஏற்படும் தொல்லைகள் கணக்கிலடங்காதவை. அவரை நல்வழிப்படுத்த மார்க்கம் ஒன்றினைக் கூற முடியுமா அக்கா?

—'பரஞ்சோதி'

உங்கள் கணவருக்கு நண்பரான ஒருவரின் துணை கொண்டு, உங்கள் கணவர் குடித்துவெறித்து அவலட்சணமாகவிருக்கும் போது சில புகைப் படங்களை எடுக்கச் செய்யுங்கள். பின்னர் அப்படங்களை உங்கள் நண்பர் மூலமாகவே உங்கள் கணவரிடம் காண்பித்து விடுங்கள். ஆனால் நீங்கள் படம் எடுக்கும் முயற்சியில் நண்பருடன் ஒத்துழைத்ததாக எக்காலத்திலும் வெளியிட வேண்டாம். இம்முறையில் பல கணவர்கள் மனமாற்ற மடைந்து குடியை நிறுத்தியுள்ளனர்.

கேள்வி 3.

செல்வி அக்கா! எனக்கு இப்பொழுது வயது 16. பள்ளியில் படிக்கிறேன். எங்கள் வீட்டின் எதிரில் குடியிருக்கும் 30 வயதான வாலிபரைக்காதலிக்கிறேன். அவருக்கும் பூரண சம்மதம். ஆனால் என் பெற்றோரிடம் கூறமுடியாது தவிக்கிறேன்.

செல்வி.....
சுண்டிக்குளி

ஆசையை அடக்கிவிட்டு கல்வியில் நாட்டத்தைச் செலுத்துங்கள். இன்னும் இரண்டு மூன்று வருடங்களுக்கு எண்ணங்களுக்கு தடைவிதியுங்கள் மனதை அடக்க முடியாவிட்டால் உங்கள் தாயாரிடம் உங்கள் 'காதலை'யிட்டு நயமாகக்கூறிப்பாருங்கள்.

கேள்வி 4.

எனது கணவருக்கு நான் இரண்டாம் தாரம். அவருக்கு முன்னர் மணமாகி ஒரு வருடத்திலேயே மனைவி இறந்து விட்டார். குழந்தைகளே இல்லை; எனக்கு 2 குழந்தைகள் உள்ளனர். குறைவின்றி வாழ்கிறோம். ஆனால் எனது சினேகிதிகள் எங்கள் இருவருடைய 20 வயது வித்தியாசத்தைச் சுட்டிக்காட்டி கேவலமாகக் கதைக்கின்றனர். இதனால் தான் எனக்கு துக்கம் ஏற்படுகிறது;

திருமதி.....சிவம்
திருகோணமலை

தாம்பத்திய உறவுக்கு வயது ஒரு பொருட்டல்ல. இருவரும் சந்தோசமாக வாழ்ந்தால் பிறர் கதையை ஏன் கவனிக்க வேண்டும்? சினேகிதிகள் கதைக்குக் காதுகொடுத்து வீண் கவலை கொள்ள வேண்டாம்.

கேள்வி 5.

நான் கடந்த ஒரு வருடமாக ஒருவரைக் காதலித்து வருகிறேன். ஆனால் நான் அவரிலும் இரண்டு வயது மூத்தவள் இதனால் ஏதும் கஷ்டங்கள் ஏற்பட வழியுண்டா?

'ஜூலியட்'
மன்னார்

வயதினால் கஷ்டம் உண்டாக வழியில்லை. உங்கள் இருவருடைய மனமும் சம்மதப்பட்டால் திருமணத்துக்கு ஆயத்தம் செய்யுங்கள்.

5 கேள்விகள்
செல்வி அக்கா,
சுதந்திரன்
த. பெ. எண் 1183
கொழும்பு.

பத்து வருடக் கோபம் பறந்தோடிய விந்தை

'சிவகங்கைச்சீமை' துவக்க விழா

எழுதுவது:
'ஈழத்தரசன்'

"இலங்கையிலிருந்து வந்துள்ள சில நண்பர்கள் நமது முதல் அமைச்சர் காமராஜ் அவர்களைக் கண்டு, இலங்கைத் தமிழர் பிரச்சினையையிட்டுக் கதைத்த போது, தமது கதர்ச் சொக்காயைக் கழற்றிவிட்டுத்தான் அபிப்பிராயம் கூற முடியும் என்று கூறினராம்." என்ற கருத்துப்பட அடுத்த வாரம் வெளியாகிய ஆங்கில வார ஏடான 'ஹோம் லண்ட்'பத்திரிகையில் அண்ணா எழுதியிருந்தார்.

காமராஜர் ஆட்சியின் கையாலாகாத் தனத்தைக் கிண்டல் செய்து அண்ணா அவர்கள் எழுதியிருந்தமையினால் நாம் மீண்டும் காமராஜரை அணுகமுடியவில்லை.

கவிஞரின் படத்தை

திரு. டி. எஸ். சொக்கலிங்கம் அவர்களே முதன் முதலில் இப்பத்திரிகையை எம்மிடம் காண்பித்தார். ஆகவே காங்கிரஸ் வட்டாரத்தில் எவரையும் நாம் போய்ப்பார்க்கச் செல்வதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிடவேண்டியதாயிற்று.

'காங்கிரஸ் தவிர்ந்த வேறு பல எதிர்க்கட்சிகளையும் இணைத்து இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தமிழ் நாட்டிலிருந்து ஏக குரல் எழுப்ப உத்தேசித்துள்ளோம்' என்று அண்ணா அவர்கள் பிறிதொரு முறை கூறினர். ராஜாஜி முதற்கொண்டு பல அரசியற் தலைவர்களுடைய அபிப்பிராயத்தையும் ஆராய்ந்தறியும்படி அண்ணா அவர்கள் எமக்குக் கூறினர்கள். அதன்படி அரசியற் தலைவர்களை அணுக நாம் சித்தமானோம்.

கவிஞர் கண்ணதாசன் தம்முடைய மோட்டார் வண்டியை நமக்கு இப்பணிக்கு உதவத் தந்திருந்தார். அத்துடன் சென்னையில் வாழும் காயல் பட்டண வாசிகளும் நமக்குப் பெரிதும் உதவி புரிந்தனர். காயல்பட்டணத்தைச் சேர்ந்தவரும், காமராஜ் அவர்களின் பால்யநண்பருமான ஜனாப் முகையதீன் விபரிக்க முடியாத பேருதவிகளைச் செய்தார்.

பாடலுக்காக ஓடிய படம்

'மாலையிட்ட மங்கை' திரைப்படத்தை அப்பொழுது கண்ணதாசன் தயாரித்து வெற்றிப் பவனி வரவிட்டிருந்தார். 'திராவிடப் பொன்னாடே' என்ற ஆரம்ப கீதத்துடன் தொடங்கும் இப் படத்தில் டி. ஆர். மகாலிங்கம் மீண்டும் தோன்றினர். மேற்படி பாடலுக்காகவே இப்படம் தொடர்ந்து ஓடியது எனலாம்.

இப்படத்திலே கவிஞர் கண்ட வெற்றி "ஊமையன் கோட்டை" என்ற படத்தை எடுக்க கண்ணதாசனைத் தூண்டியது. இதற்காக இரண்டாயிரம் அடிகளை கண்ணதாசன் தயாரித்து விட்டார். ஆனால் இடையில் கை விட்டுவிட்டு 'சிவகங்கைச் சீமை' யைத் தயாரிக்க ஆயத்தமானர்.

தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞான கிராமணி அவர்களுக்கும் கவிஞர் கண்ணதாசன் அவர்களுக்கும் பத்துவருடங்களாக பலத்த மோதல் இருந்து வந்தது. இருவரும் ஒருவருடன் ஒருவர் பேசுவதே கிடையாது. அரசியலில் ஏற்பட்ட பகை குடும்பப் பகையாகவே மாறியிருந்தது.

'தென்றல்' பத்திரிகை அலுவலகத்தில் கவிஞரை ஒருமுறை கண்டு உரையாடிக்கொண்டிருந்த வேளையில் தமிழக அரசியற் தலைவர்களை இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக ஒன்று சேர்க்கும் பணியையிட்டு பேசினோம். இப்பேச்சு வார்த்தைகளின் பலனால் கவிஞரும் ம. பொ. சியும் தங்கள் நெடுநாளையப் பகையை மறந்தனர்.

சிவகங்கைச் சீமை திரைப்படப்பிடிப்புத் துவக்க விழாவுக்கு நாள் குறிப்பிட்டாகி விட்டது. அண்ணாவின் தலைமையில், ம. பொ. சி. விழாவைத் தொடக்கி வைக்க ஏற்பாடானது. ஆனால் ம. பொ. சியின் இணக்கத்தை இன்னும் பெறவில்லை.

அண்ணா விருப்பும் கவிஞர் மறுப்பும்

சிறு குழந்தைகள் ஒருவருடன் ஒருவர் பிணங்கிவிட்டு,

அண்ணா தலைமையில்

சில நண்பர்களின் தூண்டுதலின் பேரில் உறவு கொள்ள முனையும் போது பிகு பண்ணுவது போன்று கவிஞர் பிகு பண்ண ஆரம்பித்தார். இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தலைவர்கள் அனைவரும் எப்படியாவது ஒன்று சேரவேண்டும்—அதற்கு இது முதற்படியாக அமையட்டும் என்று கூறினோம். கவிஞர் புறப்பட்டார். திருவல்லிக் கேணியில் வாழ்ந்த ம. பொ. சி. அவர்களை கவிஞர் கண்டு திரும்பினர்.

படத்திலே உள்ள பாத்திரங்களுக் கேற்ற நடிகர்களையிட்டும், அடுத்த நாள் நடைபெறவிருக்கும் படத்துவக்க விழா குறித்தும் அண்ணாவுடன் கலந்துரையாட அன்றிரவு பதினொரு மணிக்கு கவிஞருடன் நாமும் சென்றோம். பலதரப்பட்ட விடயங்களிலும் தொட்டு எங்கள் பேச்சுக்கள் தொடர்ந்தன. நடிகர்கள் தேர்வில் அண்ணா சில மாறுதல்களைச் செய்ய முயன்றார். ஆனால் கவிஞர் விட்டுக் கொடுக்கவில்லை.

குறிப்பாக, குமாரி கமலாவுக்கு அளிக்கப்பட்ட பாகத்தை வேறோர் நடிகைக்கு அளிக்கும்படி அண்ணா கோரினர். ஊழிக் கூத்துப் போன்ற நடனங்களை ஆட வல்லமை உடைய வேறு நடிகைகள் எவருமே யில்லை என்று கவிஞர் கூறி, மறுத்தார்.

அதிகாலை மூன்று மணிவரை பேச்சுத் தொடர்ந்தது. அறிவுச் சுரங்கமான அண்ணாவின் கருத்துக்களை, அவருடனேயே இருந்து பருகிப் பரிமாறும் பாக்கியத்தை அன்று நாம் பெற்றோம். ஆனால் தூக்க வெறியனை ஓட்டத்தான் பெரும் பாடு பட்டோம். அண்ணியார் 'தேர்மஸ் பிளாஸ்'கில் வைத்திருந்த காப்பி அடிக்கடி எமது தூக்க வெறியனை விரட்டியடித்தது.

அடுத்த நாள் பகல் பரணி ஸ்டுடியோவில் 'சிவகங்கைச் சீமை' திரைப்பட துவக்க விழா ஆரம்பமாகியது. அண்ணா தலைமை தாங்கினர். படத்தை ம. பொ. சி. துவக்கி வைத்தார். 'ஊமையன் கோட்டை'க்காக தயாரான இரண்டாயிரம் அடிகளையும் 'சிவகங்கைச்சீமை'யோடு இணைப்பதற்கு அறிகுறியாக அன்று அக்காட்சிகள் திரையிடப்பட்டன.

'சாந்துப் பொட்டு தள தளங்க சந்தனப் பொட்டு கமகமங்க' என்ற பாடலையும் அதற்கான நடனத்தையும் சிவகங்கைச் சீமை படத்

ம. பொ. சி. துவக்கினர்

தில் பார்த்திருப்பீர்கள். அக்கட்டம் 'ஊமையன் கோட்டை'க்காக எடுக்கப்பட்ட கட்டமாகும்.

ஒன்று சேரா இரு துருவங்கள்

யாவருக்கும் நன்றி கூறிய கவிஞர் கண்ணதாசன், நடிகர் நடிகையர்கள், அரசியற் பிரமுகர்கள், கலை உலகவிற் பந்தர்கள் முதலானோர் சூழ்ந்த அச் சபையில் நம்மை அறிமுகம் செய்து வைத்தார்.

'தமிழனின் பண்டையப் பெருமையையிட்டு எடுத்துக் கூறும்

ஆட்லாய் ஸ்டீவன்சன் — வாழ்க்கைச் சித்திரம் 2 — வெறன்

6. 1922ல் பட்டதாரியான ஸ்டீவன்சன் தமது குடும்பத்தினர்க்குச் சொந்தமான 'டெயிலி பென்ராகிருப்' என்ற ஆங்கிலத் தினசரியில் புகுந்து எழுத்துத் துறையில் பயிற்சி பெற்றார். அக்கால உலகப்புதினங்களுடன் தொடர்புறவும் இப்பணி அவருக்கு வாய்ப்பை அளித்தது.

7. பத்திரிகைத் தொழிலுடன் சட்டப்படிப்பையும் மேற்கொண்டார். 1926 ம் ஆண்டு சட்டத் துறையில் பட்டதாரியாகி, இல்லியானிஸ் நீதிமன்றத்தில் வக்கீலானார். பின்னர் சிக்காக்கோ நகரத்தில் தமது இல்லத்தை அமைத்து சட்டத்துறையில் ஈடுபடலானார்.

8. 1933 ம் ஆண்டிலே ஸ்டீவன்சன் பிரசித்திபெற்ற வக்கீலாகத் திகழ்ந்தார். இக்காலத்தில்தான் அரசாங்க விவசாயத் துறையில் உதவி புரிய ரூஸ்வல்ட் ஆட்சி இவரை அழைத்தது. இத்துறையில் இவர் காட்டிய திறமை மேலும் பல அரசியல் துறையில் இவருடைய சேவைக்கு வழி சமைத்தது.

9. 1941 ல் யுத்தமேகங்கள் சூழத்தொடங்கிய போது ஸ்டீவன்சன் கப்பற் படையின் விசேட உதவியாளராக நியமிக்கப்பட்டார். இத்தாலியில் யுத்த சேதங்களை மதிப்பிடவும் அந்நாட்டு மக்களுக்கு உதவக்கூடிய வழிவகைகளை ஆராயவும் இவர் 1943ல் அனுப்பி வைக்கப்பட்டார்.

(வளரும்)

வரலாற்றை திரைப்படமாக்க முனைந்துள்ள நாம், சில நூறு மைல்களுக்கு அப்பால் இன்னலுறும் நமது சகோதரர்களின் கண்ணீரைத் துடைக்கவும் சபதம் ஏற்றுள்ளோம். இதோ இங்கிருக்கும் நமது இலங்கை நண்பரின் தூதினால் இன்னலுறும் இலங்கைத் தமிழர்களுக்கு இந்நாட்டுத் தமிழர்களின் மானசீக அனுதாபத்தை எடுத்துக்கூற, இங்குள்ள தலைவர்களை ஒன்று சேர்க்க முனைகிறோம். இங்கே, ஒன்று சேர முடியாத இரு தலைவர்கள் ஒன்று சேர்ந்துள்ளனர்.

'அறிஞர் அண்ணாவும், ம. பொ. சி. யும் இன்று ஒன்றாக ஒரே மேடையில் காட்சி அளிப்பது சிவகங்கைச் சீமைக்காக மட்டுமல்ல. இலங்கைத் தமிழர்களின் இன்னல் துடைக்கவும்தான் இவர்கள் இணைந்துள்ளனர்' என்று கவிஞர் கூறிமுடித்தார்.

விழா முடிவடைந்ததும் அண்ணாவையும் ம. பொ. சி. யையும் தனியாக அழைத்து கவிஞர் இலங்கைப் பிரச்சினை பற்றி அவச

(13ம் பக்கம் பார்க்க)

சிங்கள சினிமாத்துறையின் எதிர்காலம்

தயாரிப்பாளர் கூடிவிட்டால் தரம் குறைந்து போய்விடும்

திரை உலகப் பிரமுகர் தரும் விபரம்

'இலங்கையில் திரைப்படத் தொழில் இன்று ஓர ளவு வளர்ந்துள்ளதே தவிர உண்மையான அபிவிருத்தியைப் பெறவேயில்லை. எதிர் காலத்தில் இத்துறை அபிவிருத்தியடையும் என்பதற்கு எந்தவிதமான சாத்தியக் கூறு களும் இருப்பதாகத் தெரியவுமில்லை.' இவ் வாறு ஒரு பிரபல சினிமாத்துறை பிரமுகர் நமது நிருபரிடம் கூறினர்.

அவர் தெரிவித்த கருத் தின் சாரம் வருவாறு:—

அண்டை நாடான இந் தியா தரமான படங்களைத் தயாரித்து, உலகத்திலேயே சினிமாத் தொழிலில் மூன்று வது இடத்தை வகிக்கிறது. பல்லாண்டுகளாக இந்தியா விலேயே சிங்களப்படங்கள் தயாராக்கப்பட்டு இலங்கை யில் திரையிடப்பட்டு அமோக வெற்றியைக் கண் டன. நாணயக்கட்டுப் பாட் டினால் இந்தியாவில் படம் தயாரிக்கும் வசதிகளை இழந் தது இந்நாடு.

இலங்கையில் படப்பிடிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டன. பல படங்களும் தயாராகின. ஏறத்தாழ ஒரு வருடத்துக்கு இருபடங்கள் வீதம் வெளி யாயின. வெற்றியையும் அளித்தன. ஆனால் இப்போ ழுது மாதத்துக்கு இருபடங் களாவது வெளிவரத் தொடங்கிவிட்டன. கருத் துக்களில் புதுமையோ கதை யில் நல்ல திருப்பங்களோ இல்லாமல், பெரும் பாலும் முன்பு வெளியாகி வெற்றி கரமாக ஓடிய தமிழ்ப்படங் களின் தழுவல்களாக விருப் பதனால் இவை வெற்றியை அளிப்பதாயில்லை.

இருள் சூழ்ந்த எதிர்காலம்

தயாரிப்பாளர்களின் தொகையும் அதிகரித்து விட் டது. ஆனால் படம் பார்ப் போர் தொகையோ ஒரே சீராகவேயிருக்கிறது. இத னால் இன்னும் சில வருடங் களில் இங்கு தயாராகும் படங்களில் பெரும் பாலான வற்றை எவரும் பார்க்க முன்வரமாட்டார்கள்.

விட்டிற்பூச்சி போன்று பல புதுத் தயாரிப்பாளர் கள் இன்று இத்துறையில் தங்கள் பொருளை விரைய மாக்க முன்வந்துள்ளனர். ஏதோ திரைப்படம் ஒன் றைத் தயாரித்து விட்டால் போதும் என்று கருதுகிறார் களே யன்றி, அவற்றின் தரத்தையிட்டு எவரும் கவ லைப்படுவதாயில்லை.

அதிகமான பொருட் செலவு செய்து தரமுயர்ந்த படங்களை சிங்களத்தில் தயாரிக்க நினைக்கவே முடி யாது. சிங்களப் படம்பார்ப் போர் தொகை மிகவும் குறைவாக விருப்பதனால், படத்தயாரிப்புக்கு அதிக மான பணத்தைச் செலவிட வும் முடியாது. ஆகவே குறைந்த செலவில் தர முடைய படத்தைத் தயா ரிக்கவே படமுதலாளிகள் முன்வர வேண்டும். இன் றுள்ள நிலையில் சிங்களப் படங்கள் வருடம் ஒன்றுக்கு ஆறுபடங்கள் வீதம் வெளிவந் தால் மட்டும் போதுமானது இத்தொகைக்குக் கூடு மானால் சினிமாத் தொழில் நிச்சயமாக வீழ்ச்சியடைந்து விடும் என்பதில் ஐயமில்லை.

பத்து வருடக் கோபம்....

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

அரம்பித்தார். ஏற்கனவே ம. பொ. சி அவர்களுக்கும் எமக்கும் அறிமுகம் உண்டு. அடிக்கடி அவரை அவரில் லத்தில் கண்டிருக்கிறோம். ஆகவே அவரும் குறிப் பறிந்துகொண்டு எம்மை தமது உருட்டு விழியால் ஒரு முறை பார்த்தார்.

ஆறுதலாக இப்பிரச்சி னையைவிட்டுப் பேசலாம் என்று கூறிவிட்டு இருவரும் புறப்பட்டனர். ம. பொ. சி அவர்கள் எம்மிடம் ஒரு நாளைக் குறிப்பிட்டு அன்று தம்மை வந்து பார்க்கும்படி கூறினர்.

'கட்டபொம்மன்' 'சிவகங்கைச் சீமை' மோதல்

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமு மாக 'சிவகங்கைச் சீமை' வளர ஆரம்பித்தது. சென் னையிலுள்ள சகல ஸ்டூடி யோக்களிலும் படப்பிடிப்பு நிகழ்ந்தது. சரித்திரக்கதை —மிகுந்த காட்சி அமைப்பு களுடன் கூடியது—பிர மாண்டமான தயாரிப்புத் தான்! எனினும் இப்படம் ஆறுமாதங்களுள் முடிவா னது.

பத்மினி பிக்சர்ஸ் தயா ரித்து வந்த 'வீரபாண்டியக் கட்டபொம்ம'னும் முடி வடைந்து விட்டது. இரு படங்களும் ஒரே காலத்தில் முடிவடைந்துவிட்டமை யினால் ஒரே நாளில் திரை யிடப்படவும் தயாராயின.

கட்டபொம்மனையும், சிவகங்கைச்சீமையையும் போட்டியில் இறக்கத் தயா ரிப்பாளர்கள் கனவிலும் கருதியிருப்பார்களோ என் னமோ தெரியாது. ஆனால் இரு கட்சிகள் கச்சை கட்டிக் கொண்டு இரு திரைப் படங் களையும் மோதவிட ஆரம் பித்துவிட்டன.

நாம் சிவகங்கைச்சீமை படத்தயாரிப்பின் போது கவிஞரின் தயாரிப்புக் குழு வில் நெருங்கி உறவாடி வந் தோம். டைரக்டர் சங்கர், ஒளிப்பதிவாளர் தம்பு ஆகி யோரின் நட்பு நமக்குக் கிடைத்தது. எஸ். எஸ். ராஜேந்திரன், டி. கே. பக வதி முதலான நடிகர்களு டன் கலந்து பழகும் வாய்ப் பும் கிட்டியது.

படப்பிடிப்புத் தொடங்கி மூன்று மாதங்கள் சென்று விட்டன. ஒருநாள் ம. பொ சியுடன் பேசிக்கொண் டிருக்கும்போது பத்மினி பிக்சர்ஸ் உரிமையாளரும் டைரக்டருமான பி. ஆர். பந்துலு அவர்களிடமிருந்து தொலைபேசி அழைப்புக் கிடைத்தது. இதன் பின்னர் ம. பொ. சி. எம்மை பத் மினி பிக்சர்ஸ் அலுவலகத் துக்குப் போகும்படி கேட் டுக் கொண்டார்.

சென்னை ராயப்பேட்டை யிலுள்ள பால கிருஷ்ண தெருவிலிருக்கும் பத்மினி பிக்சர்ஸ் அலுவலகத்தை அடைந்தோம். திரு. பந்துலு ரூபா 400/-க்கு ஒரு காசோலையை எடுத்து எமமி டம் நீட்டினர். காசோலை எமது பெயருக்கே எழுதப் பட்டிருந்தது.

(வளரும்)

தலைவிரிகோலமாக நிற்கும் இத்தையலுக்கு தக்கதுணை யாக இந்த இளைஞன் தயாராகி விட்டானாம்போல் தெரி கிறது. விரைவில் என்டர்டெயின்மெண்ட்ஸ் திரைக் களுக்கு வரவிருக்கும் பாலு புரொடக்ஷன்ஸ் 'விளக்கேற் றியவள்' படத்தில் புதுமுகம் ஆதித்தனும் வசந்தாவும் தோன்றும் காட்சி.

இலங்கை வானொலி தமிழ் கலை மன்றம்

கடந்த சில ஆண்டுகளாக செயற்படாதிருக்கும் இலங்கை வானொலி தமிழ்க் கலை மன்றத்தை மீண்டும் இயக்க செயலாளரான திரு. நா. ப. பாலச்சந்திரன் முயன்றுவருவதாகத் தெரி கிறது. கொழும்பு, யாழ்ப் பாணம், திருகோணமலை முதலிய இடங்களில் உள்ள கலைஞர்களை இவர் நேரில் அணுகிய பின்னர் பொதுக் கூட்டமொன்றை ஏற்பாடு செய்ய விருப்பதாக அறிவித் திருக்கிறார்.

'மாஸ்ட'ருக்கு மலையகத்தில் பாராட்டு

இலங்கையின் பல பாகங் களிலும் வில்லுப் பாட்டுக் கலையைப் பரப்பி வரும் மட்டுநகர் மாஸ்டர் சிவலிங்கத்திற்கு நுவரெ லியா மாவட்டத்தைச் சேர்ந்த இராகலை கதிர்வே லாயுத சுவாமி ஆலய வரு டாந்த மகோற்சவத்தை யொட்டி 10-9-65ல் நடை பெற்ற கலை விழாவில் 'வில் லிசைச் செல்வன்' என்ற கௌரவப்பட்டம் அளிக்கப் பட்டதுடன் பொன்னாடை யும் போர்த்தப்பட்டது.

விழாவிற்குத் தலைமை தாங்கிய இராகலை மகாவித் தியாலய முன்னாள் அதிபர் திரு. செல்லத்துரை அவர் கள் இராகலைத் தமிழ்மக்கள் சார்பில் பட்டமளித்துப் பொன்னாடையையும் போர்த்தினர்.

வில்லுப்பாட்டுக் கலையை ஈழமெங்கும் பரப்பிவரும் மாஸ்டர்சிவலிங்கத்தை தலை வர் வெகுவாகப் பாராட்டி னர். மாஸ்டர் இறுதியில் தம க்களிக்கப்பட்ட பாராட் டுக்கு நன்றி கூறினர்.

'பட்டணத்தில் பூதம்'

சாரதா புரொடக்ஷன் சார் 'பட்டணத்தில் பூதம்' என்ற வர்ணப் படத்தை வாஹினியில் தயாரிக்கின் றனர். ஜெய்சங்கர், விஜயா தோன்றும் இப்படத்தை எம். வி. ராமன் டைரக்ட் செய்கிறார்.

'ஐயே.....என்ன இப்பிடி முறைக்கிறீங்க? நான் என்ன எதுவுமே தெரியாத பிள்ளையாட்டமா இருக்கிறேன்' என்று கேட்கிறார் போலும் சாவித்திரி. சினிமாஸ் திரைகளில் ஓடிக்கொண்டிருக்கும் "கை கொடுத்த தெய்வ"த்தில் நடிப்புக் கலைக்கே சிகரமாகத் துலங்குகிறார் இவர்.

அவளின் பட்டான உடலுக்கு முட்டுக் கொடுத்து விளையாடுகிறான் அவன். "நானும் மனிதன் தான்" படத்தில் ஆனந்தன், சந்திரகாந்தா.

தென்னகத்து அண்ணாவுக்கு ஈழத்துத் தந்தை அனுப்பிய பிறந்த நாட் செய்தி

'தமிழ் இன எழுச்சிக்கு, தமிழ்மொழி உணர்ச்சிக்கு வழிகோலி நாம் ஒரு தனி இனம் எமக்கென்று ஒரு மொழி—ஒரு பண்பாடு—ஒரு வாழ்வியல் முறை உண்டென்று உலகிற்கு எடுத்துக்காட்டிய அறிஞர் அண்ணாவின் 57 வது பிறந்த நாளை யொட்டி அவரை வாழ்த்துவதில் யானும் எனது தமிழ் அரசுக்கட்சியினரும் பெருமைப் படுகிறோம்'

இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்களின் 57-வது பிறந்த நாளை யொட்டி தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அச்செய்தியில் திரு. செல்வநாயகம் அவர்கள் குறிப்பிட்டிருப்பதாவது:

'தமிழ் இனத்திற்கு இன உணர்வை ஊட்டி திராவிடப் பெருங்குடி மக்களை ஒன்று படுத்திய அண்ணா; வேண்டாத-காலத்திற்கு ஒவ்வாத மூடப்பழக்க வழக்கங்களை முறியடித்து சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பி மக்களை பகுத்தறிவு நெறியில் வாழ்வை நடாத்த வழிகாட்டிய அண்ணா பாராட்டுதற்குரியவர்.

'இந்தி இந்தியத் துணைக் கண்டத்தின் பொது மொழி யாவதையிட்டு இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் எதிர்புணர்ச்சியிருந்தும் அந்த எதிர்ப்புணர்ச்சிக்கு வடிவமும் உருவமும் கொடுத்து; காரணங்கள் காட்டி நடைமுறையில் இந்தியை எதிர்த்து வெற்றி கண்டுவருபவர் அண்ணா. அண்ணாவும் அன்னாரின் திராவிட முன்னேற்றக் கழகமும் தமிழ் நாட்டில் இல்லாவிடின் தமிழ் தமிழாக, தமிழன் தமிழனாக வாழமுடியுமோ என்பது பெரும் கேள்விதான்.

'அண்ணா அவர்களின் பேச்சு, எழுத்து சிந்தனை, செயல் தமிழ் இனத்தின் விழிப்புணர்ச்சிக்குவழிவகுத்ததோடு அன்னவரின் புகழ் தமிழ் நாட்டின் எல்லையைக் கடந்து தென்னகம் எங்கும் பரவி இந்தியத் துணைக்கண்டத்தைத் தழுவி உலகில் எங்கெங்கெல்லாம் தமிழர் வாழ்கின்றார்களோ அவர்களின் உள்ளங்களிலெல்லாம் அன்னாரின் பேர் நிலைத்துவிட்டது. ஈழம் வாழ் தமிழ்பேசும் மக்களாகிய நாம் எமது நெருக்கடியான காலங்களில் எம்விடுதலை இயக்கத்திற்கு அண்ணா காட்டிய தார்மீக ஆதரவை யாம் என்றும் மறக்க முடியாது. அண்ணாவின் புகழ் வாழ்க! அவர் பணிவெல்கவென உளம் குழைந்து வாழ்த்துகிறேன்'

அழகு சுடும்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

தாமரகுமாரி இருந்த தோற்றம்!

அவள் நின்றிருந்த அலங்கோல நிலையினால் தாக்குண்ட என் கணவருடைகரத்தின் பிடி மேலும் சற்று அழுத்தம் பெற்றது. அந்த அழுத்தமான பிடியின் இறுக்கத்தின் மூலம் 'ஸ்பரிசமொழி'யில் அவளுக்கு ஆறுதல் மொழிந்தார் என் கணவர். அந்த 'ஸ்பரிசமொழி'யைப் புரிந்து கொண்டவள் போல் விம்மி வெடித்து அழலானாள் தாமரகுமாரி. கொந்தளித்துப் பீறிட்ட அந்த அழுகை தடைப்பட்டு உள்ளுக்குள் அடங்கிவிடாமல் முற்றாக வெளிப்பட்டு விடவேண்டும் என்ற கவலையில், அவளை அப்படியே மார்போடு அணைத்து அந்த அழுகைக்கு ஒரு தூண்டுதல் செய்தார் என் கணவர்! அவர் கையாண்ட அந்த அகவியற் சிகிச்சை எதிர்பார்த்தபலனை நல்கியது. அவர் தந்த ஆதரவில் குலுங்கக் குலுங்க அழலானாள் தாமரகுமாரி.

'தாமரா!'—என் கணவருடைய கரம் மிக மிருதுவாக அவளுடைய கற்றைக் குழலை வருடிச் சுகம் கொடுத்துச் சுகம் கண்டது!

நீர் சொரிந்த தன் சிவந்த நயன மலர்களினால் என் கணவரை நோக்கிய தாமரகுமாரி கரகரத்த குரலில், 'மாத்தயா!' என்றாள்.

'இதெல்லாம் என்ன குமாரி!'

'என்னுடைய கர்மம்'

'கர்மம் அகன் பாட்டில் இருந்து விட்டுப்போகட்டும். இந்தக் கடுங்குளிரையும் உதாசீனம் செய்துவிட்டு நான் ஏன் இத்தனை அவசரமாக உன்னைப்பார்க்கவேண்டும் என்று ஓடோடி வந்தேன் தெரியுமா?'

'சொல்லுங்கள்' என்ற பாவத்தில் அவளுடைய அழகிய விழிகள் என் கணவரை நோக்கி நிலவொளியில் மின்னின.

'உன்னுடைய மோகனப் புன்னகையைப் பார்க்க வேண்டும் என்று என் அந்தராத்மா மிகுந்த ஆவேசத்துடன் ஆணைப்பிறப்பித்தது. அந்த மாயப் புன்னகையை உண்ணவேண்டுமென்று நான் இங்குவந்தால்.....

உலகத்திலுள்ள அத்தனை காற்றையும் சிவந்த தன் மூக்கினால் உள்ளுக்கு இழுத்து இதயத்தை நிரப்பி ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு கேவிக்கேவி அவள் சொன்னாள்.

'சிரிப்பதற்குப் பிறந்தவளல்ல நான்'

'குமாரி! இங்குவந்த நாட்தொடக்கம் நானும்தான் பார்க்கின்றேன்; உன்னிடத்தில் ஏதோ துயர் குடிபுகுந்து உன்னைச் சதாவாட்டி வருவதை. அன்று கூட பௌத்த விகாரத்தில் பகவான் புத்தரின் திரு உருவத்தின் முன்பும், முருகன் முன்னிலையிலும் நீ நெஞ்சுருக நின்று விம்மினாய் இன்றும் விம்முகிறாய். இந்த மன நோவுக்குரிய காரணத்தை நான் தெரிந்து கொள்வதால் உன் மனச்சுமை குறையவழியுண்டு என நம்புகின்றேன் நான்'

கரைகட்டியிருந்த பனிநீர் மீண்டும் கரையை உடைத்துக் கொண்டது. விம்மி விம்மி அழலானாள் தாமரகுமாரி,

அவள் கண்களிலிருந்து வழிந்த நீரைக் தன்னுடைய கன்னங்களாலேயே ஒற்றித் துடைத்து அவளுக்கு ஓர் அணைதந்தார் என் கணவர். அவள் சொன்னாள்.

'முருகப் பெருமான் என்னை வஞ்சித்தார்; மோனத் தவமியற்றும் போதிசத்துவர் என்னை அரவணைத்தார்!

'முருகன் வஞ்சித்தார்' என்று தாமரகுமாரி சொன்னதும், என் கணவர் ஒரு கணம் துணுக்குற்று விட்டார். 'தன்னுடைய வாள் வையும் இரக்கமற்று வஞ்சித்துச் சிறகொடிந்த பறவையாகத் தன்னை ஆக்கிய 'கருணைக்கடல்' அல்லவா இந்தக் கலியுகவரதன்?' என்ற எண்ணம் பிறந்ததும், தாமரகுமாரி சொல்வதைக் கேட்பதில்மிகுந்த ஆர்வம்கொண்டார் என் கணவர்.

'முருகப் பெருமானுக்கு அப்படி என்ன கோபம் உங்களை வஞ்சிப்பதில்?'

'நான் என் அன்னையின் அரவணைப்பில் இருப்பதும், எல்லாவற்றிற்கும் மேலாக நான் ஒரு தமிழிச்சியாக இருப்பதும் அந்தத் தமிழ்க் கடவுளுக்குப் பிடிக்கவில்லை!'

என் கணவருக்கு பொறி கலங்கியது.

முதன் முதலாகக் குமரன் அந்த மலைப் பிரதேசத்தில் கலடி எடுத்து வைத்ததும்,

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கே: மலைநாட்டுத் தமிழ்மக்கள் பற்றி அவர்கொண்ட கருத்துக்கள் என்ன?

ப: மலைநாட்டுத் தமிழ்மக்களின் கல்விநிலைஉயரவேண்டும் என்றும் அவர்கள் வாழ்வு வடகிழக்குத்தமிழ் மக்கள் வாழ்வோடு கலக்க வேண்டும் என்றும் விரும்பினார். அப்பொழுதுதான் எம் அனைவர்க்கும் வாழ்வு உண்டென்று கூறுவார். அந்தஅடிப்படையிற்தான் மலைநாட்டுத் தமிழ்க் குழந்தைகள் சிலரை யாழ்ப்பாணக் கல்லூரிகளில் பயில்விக்க முயற்சி எடுத்தார்.

கே: மரபுவழித் தாயகம் பற்றி அவர் கருத்துஎன்ன?

ப: தமிழர் தம் நிலத்தை எந்த நிலையிலும் பறிகொடுக்கக்கூடாதென்றும் பறிகொடுத்தால் யாம் எமது உரிமைக்காக என்றும் போராட முடியாதென்றும் எம் வாழ்வே அழிந்துவிடும் என்றும் அடிக்கடி கூறுவார்.

கே: தமிழ் பேசும் மக்கள் விடுதலைபெற்ற இனமாக

கோப்பாய்க் கோமான் பற்றி...

விளங்குவதற்கு என்னென்ன அடிப்படைப்பண்புகள் வேண்டும் என்று உங்களிடம் கூறியுள்ளாரா?

ப: சாதிக் கட்டுப்பாடு, பொறாமை, புகைச்சல் முதலிய வேண்டாத பண்புகள் தமிழ் இனத்தைக் கூறு செய்கின்றதென்று கூறிய அவர் தமிழ் இனம் பல நூற்றாண்டுகாலமாக அடிமைப்பட்டுப்பழகிவிட்டதுஎன்றுவருத்தத்தோடு கூறுவார். இந்த அடிமை உணர்ச்சி முற்றாக மாற வேண்டும் என்றும் அடிக்கடி கூறுவார். அத்தோடு எம்மினத்திடை தியாகஉணர்ச்சி போதாதென்றும் எளிதில் எதையும் பெற விரும்பும்பண்பு தமிழ் இனத்திடம் இருந்து நீங்கினாற்தான் தமிழ் இனம் விடுதலைபெற முடியும் என்று பல தடவை கூறியுள்ளார்.

கே: அவர் இறப்பதற்கு முன்தான் விரைவில் இறந்துவிடுவார் என்று பொருள்பட ஏதும் உங்களிடம் கூறினாரா?

ப: அவர் விரைவில் மறைவார் என்று யான் கனவிலும்எதிர்பார்க்கவில்லை.

கே: இந்தக்கால இடைவெளியில் அவரின் எத்தகைய பண்பு உங்கள் உள்ளத்தில் தலைதூக்கி நிற்கின்றது?

ப: அவர் உயிருடன் இருந்திருந்தால் உரிமைப் போராட்டம் இன்னும் வலிவுபெற்று எம் நிலை உயர்ந்திருக்கக் கூடும் என்ற என் உள்மனது எப்பொழுதும் நம்புகிறது.

யான்:- சென்று வருகிறேன் வணக்கம்.

திருமதி. வ:- வணக்கம்.

கொப்புத்தேவி

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆறுமுகம் நிமிர்ந்தார். 'என்ன.....என்ன புளி மூட்டை சொல்லுறாய்?... உன்னரை மோனை என்னரை பொடியனுக்கா? ஆறுமுகத்தின் உதடு ஆத்திரத்தாற்துடித்தது.

உள்ளே நோக்கி மகனைக் கூப்பிட்டார். செல்வம் வந்தான். ஆறுமுகம் கேட்டார்: 'எடேய்,இவன் சொல்லிறது உண்மை தானோ? நீ இவன்ரை பொம்பிளையைக் கலியாணம் கட்டச் சம்மதமா?'

தந்தையின் ஆத்திரத்தைக் கண்டு மைத்தன் பேசாமல் நின்றான்.

ஆறுமுகம் அலறினார். 'எடே புளி மூட்டை, பார்த்தியா! என்ன பேச்சுப் பேசிக்கொண்டு வந்தாய்! முதலியார் மாணிக்கவாசகர்றைமூத்த மோனை நான் செல்வத்துக்குப் பேச நினைச்சிருக்கிறன்! போ வெளியே. உப்பிடிப்பட்ட எண்ணமும் இருக்குதோ! உனக்கும் உன்ரை குடும்பத்துக்கும். இனி என்ரை மில்லில அலுவல் இல்லை! இண்டையோடை வேலை முடிஞ்சுது! நாளைக்கு வந்து காசை வாங்கிக் கொண்டு போ' என்ற ஆறுமுகம் செல்வத்தை நோக்கி, 'டேய்.....மாணிக்கவாற்றை மோனை உனக்குச் செய்ய விருப்பம் தானே...இவனுக்கு முன்னாலேயே சொல்லிவிடு' என்றார்.

'ஆம்' என்பது போலச் செல்வத்தின் தலையாடியது.

'பாத்தியா, இண்டையோடை எல்லாத் தொடர்பும் முடிஞ்சுது. முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படக் கூடாது...ஆசைப் பட்டாலும் கிடைக்காது..... உன்ரை மோனை என்ரை மோனுக்குக் செய்தால் நல்லாத்தானிருக்கும்—உங்களுக்கு' என்று ஆத்திரத்தால் அலறிய ஆறுமுகம் கடைசி வார்த்தையைப் பல்லைக் கடித்தபடி கூறிவிட்டு நாற்காலியில் வீழ்ந்தார். அவரது சிவப்பேறிய கண்கள் பாரதியின் 'தொழில் சோம்பலைப் போல் இழிவில்லை' என்ற பாடலை நோக்கின.

'ஆறுமுகம்!' - கந்தசாமி வெறிகொண்டு வீரிட்டார். 'ஐயா' என்று குழைந்த குரல் ஆத்திரத்தோடு வீரிட்டபோது முதலாளி ஆறுமுகம் உண்மையில் திகைத்து விட்டார்.

'நீயொரு மனிசனா?'—வெறுப்பு, ஆத்திரம், ஏமாற்றம் எல்லாவற்றையும் ஒருங்கே சேர்த்து ஆறுமுகத்தின் மீது காறித் துப்பினார், கந்தசாமி.

ஏழையால் வேறென்ன செய்ய முடியும்?

(யாவும் கற்பனை)

வளர்மதி

சுதந்திரன் மாணவர் மன்றம்

வகுப்பில் நடந்தது

—[3]—

பாடசாலை முடிவுறும் நேரம். கடைசிப் பாடம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தமிழ் ஆசிரியர் கம்பராமாயணத்திலே இராமன் சீதையின் சுயம்வரத்தில் வில்லவளைத்து முறிக்கும் கட்டத்தைச் சுவை சொட்டச் சொட்ட விளக்கிக் கொண்டிருந்தார். இலக்கியத்தில் எம்மையே மறந்து ஈடு பட்டிருந்தோம். 'கண கண' வென மணி ஒலித்தது. பாடம் முடிந்து ஆசிரியர் வெளியேறினார். ஏன் வெளியேறினார்? ஏன் பாடம் முடிந்தது? மேலும் சிறிது நேரம் இராமாயணத்தைச் சுவைக்க விட்டிருக்கக் கூடாதா? என்று எல்லோருமே எண்ணினோம்.

பாடசாலை விட்டுவிட்டது. பின் என்ன? நம் எண்ணம் போல் கும்மாளமிட வேண்டியதுதானே. "இன்று நாடகம் நடிப்போமா?" என்று ஆரம்பித்தாள் கலைச்செல்வி. "என்ன நாடகம்?" என்று கேட்டாள் அருள்மொழி. "சீதை சுயம்வரம்" என்றாள் கலைச்செல்வி. 'நன்றாக இருக்கும், என்றாள் அன்பரசி. கலைச்செல்வி இராமனாகவும் அன்பரசி விசுவாமித்திரராகவும் அருள்மொழி சீதையாகவும் வேடம் எதுவுமணியாமலே நாடகம் ஆரம்பமாயகிது.

விசுவாமித்திரர் சனகனிடம் இராமனைப் பற்றிப் புகழ்ந்தார். பின்னர் வில்லையும் அவன் வளைக்க விரும்புவதாகக் கூறி இராமனை நோக்கித் திரும்பினார். இராமராக அங்கு வீற்றிருந்த கலைச்செல்வி நம் வகுப்பிலேயே குறும்பிற்குப் பெயர் போனவள்.

இராமர் எழுந்தார். ஏறு நடை போடவில்லை அந்த இராமர். குடுகுடென்று ஓடினார். எந்த வில்லை வளைக்கப் போகிறார் இந்த இராமர் என்றெல்லோரும் ஆவலுடன் நோக்கினோம். எதையோ இராமர் எடுத்தார். மறுகணம் அது கீழே விழுந்தது. எதை எடுத்தார் என்ன நடந்ததென்று எண்ணு முன்னரே எதுவோ பொடிப்பொடியாகக் கீழே கிடந்தது.

இராமாயண இராமனே கணப் பொழுதில், வில்லை வளைத்ததைக்கூட மற்றவர் காணாது அதை இரண்டாக முறித்தார். இந்த இராமரோ கணப்பொழுதில் வில்லைச் சுக்கல் சுக்கலாகவல்லவா உடைத்துவிட்டார். என்ன வில்லை உடைத்தாரென நம் சீதை யுட்பட அனைவரும் ஆவலுடன் நோக்கினோம். அந்தோ பரிதாபம்! நம் தமிழாசிரியர் மறந்து போய் வைத்து விட்டுச் சென்ற மூக்குக் கண்ணாடி துகள் துகளாகக் கிடந்தது. நாமனைவரும் பயத்துடன் கலைச்செல்வியை நோக்கினோம். அவளோ 'என்றுமே பிரியாத இலக்குமணன் என்னைப் பிரிந்ததால் இப்படிச் சுக்கல் சுக்கலாக வில்லை முறித்துவிட்டேன்' என்றாள். அப்பொழுதுதான் அனைவரும் அங்கு இலக்குமணனில்லாததைக் கவனித்தோம். கலைச்செல்வி கலகலவென நகைத்தாள்.

எழுதியவர்: ஈஸ்வரி.

அதிசயம் கேளீர்

மெழுகுத் திமிங்கிலம்

திமிங்கிலங்களிடமிருந்து பெறப்படும்எண்ணெய், கொழுப்பு முதலியவைகளை விட, அவற்றின் தலைகளிலிருந்து ஒருவகை உயர்ந்த மெழுகு ஏராளமாகப் பெறப்படுகின்றது. சிலவற்றின் குடலில் 'அம்பர் கிரிசு' என்னும் வாசனை மிக்க மெழுகும் எடுக்கப்படுகின்றது. இவ்வித மெழுகுகள் தென் சமுத்திரக்கரைகளில் கட்டியாக வந்து ஒதுங்குகின்றன. இக்கட்டி இருநூறு பவுணுக்கு அதிகமாக விலையாகிறதாம். இதனால் இவற்றை வேட்டையாடுவோர் தொகையதிகம்.

நெய்த்திமிங்கிலம்

தென் அமெரிக்காவிலுள்ள தென் சமுத்திரத்தில் காணப்படும் திமிங்கிலங்களிலிருந்து சுமார் ஐம்பது தொன் நெய் பெறப்படுகின்றது. இவற்றின் நெய்யைச் சாப்பாட்டுக்கு உபயோகிக்கிறார்கள். இவற்றின் கொழுப்பை மெழுகுவர்த்தி செய்வதற்கும், இவற்றின் தோல்களை கூடாரங்கள் அமைப்பதற்கும், இவற்றின் எலும்புகளை தந்த வேலைகளுக்கும் உபயோகப்படுத்துகின்றார்கள். இவ்விதமாக பல வேலைகளுக்கும் பயன்படும் ஒரு திமிங்கிலத்தின் விலை ஆயிரம் பவுணுக்கு அதிகமானதாகும்.

பசி ஆறாத் திமிங்கிலம்

'குறம்பசு' ஒருவகைத் திமிங்கிலம், தன்னினத்தையே கொன்று வாழ்கிறது. இதன் பற்கள் வாள் போன்றவை. இவற்றைக் கண்டால் மிகப்பெரிய சுறுக்களும், திமிங்கிலங்களும் அஞ்சி ஓடுகின்றன. இவை நான்கு ஐந்தாகச் சேர்ந்து பெரிய திமிங்கிலங்களைத் தாக்கி கொன்று சாப்பிடுகின்றன. எவ்வளவுதான் சாப்பிட்டாலும் இவற்றின் பசி ஆறுவதில்லையாம். இவை தென் சமுத்திரத்தின் நடுவே காணப்படுகின்றன.

ஈட்டி மூக்குத் திமிங்கிலம்

ஒரு சாதித் திமிங்கிலங்களுக்கு மூக்கு ஈட்டி போன்று நீண்டு கூராயிருக்கின்றன. தென்சமுத்திரத்தின் ஆழமான பகுதியில் வாழும் இத்திமிங்கிலங்கள் கூட்டமாகவே வாழுகின்றன. இவை மூர்க்கக்குணமுடையவையாயிருப்பதால் கப்பல்களின் அடித்தளத்தில் பதித்திருக்கும் கனதியான உலோகத்தகடுகளை தம் ஈட்டி மூக்கு மூலம் கிழித்து விடும். தம் எதிர்ப்பைப் பொருட்படுத்தாத வேட்டைக்காரரைக் கண்டால் ஆயிரத்து ஐநூறு அடிக்குக்கீழ் பதுங்கி விடும் தன்மையுடைய இவற்றின் மூக்கு அதிக விலையுள்ளது.

—சி. சண்முகலிங்கம்—

அமரர் நினைவு

— நோ. மணிவாசகன் —

கொள்கைவீரன் கண்ணியமிக்க
கடமைவீரன் தமிழினத்தின்
சிறந்ததலைவன் வன்னியசிங்கம்
சாந்திபெற்ற நினைவுதினம்!

தந்தைசெல்வா தவித்திடவே
தமிழினம்சிந்தை கலங்கிடவே
நாடேசோக நிலைபெறவே
மறைந்தஅமரர் நினைவுதினம்.

மேடையெங்கும் கர்ச்சித்த
மக்களுணர்வைத் தட்டிவிட்ட
அஞ்சாநெஞ்சன் கோப்பாயின்
கோமகன்போன நினைவுதினம்.

'அடிமைவாழ்வை நீக்குங்கள்;சம
உரிமைகோரி நில்லுங்கள்!'
என்றேமுழங்கிய தமிழரசுத்
தனயன்வன்னியன் நினைவுதினம்.

சாதிவேற்றுமை நீங்கிடவே
நம்மில்ஒற்றுமை ஓங்கிடவே
அயராதுழைத்த உயர்தொண்டன்
வன்னியசிங்கம் நினைவுதினம்.

வாழ்கவாழ்க என்றென்றும்
வன்னியசிங்கம் நினைவுதினம்!
சூழ்கதமிழர் இந்நாளில்...
தமிழ்த்தாய்கண்டு பெருமைகொள!

விநோத சொல் வேட்டைப் போட்டி

1 — ரி	வ	ள	தி	மா	ஆ	ஸ்	ம
ன்	ன	ர்	ம	மா	று	கா	ட
சு	வீ	டு	ன்	மா	ர்	ம	ம்
த	ந்	தி	ர	ண	வ	ன்	ற
து	மா	மா	மி	க	ல்	னி	ம்
ம	க	ள்	ரி	னி	வி	த	ன
ந	மை	யா	யா	லே	யே	ந்	ம்
५	து	ரீ	ர்	லே	க	ரு	ம்

1. சின்னவீடு
2. .....
3. .....
4. .....
5. .....
6. .....
7. .....
8. .....

பெயர்.....

முகவரி.....

.....

வளர்மதி உறுப்பினர் எண்.....
(உறுப்பினராயின்)

இங்கே கத்தரிக்கவும்

இது மிகவும் சுலபமான போட்டி. இங்குள்ள சதுரத்தில் காணப்படும் எழுத்துக்களில் பல சொற்கள் மறைந்திருக்கின்றன. தொடங்கும் எழுத்தில் இருந்து மேல் நோக்கியோ, கீழ் நோக்கியோ அல்லது வலது பக்கமாகவோ மாறி மாறிச் செல்லும் அடுத்தடுத்துள்ள எழுத்துக்களால் ஆன இந்தச் சொற்கள் வளர்மதி வாசகர்களுக்கு மிகவும் பழக்கமானவையாகும்.

நீங்கள் இந்தச் சொற்களைக் கண்டு பிடித்து ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய எழுத்துக்களை பேனாவினால் கோடிட்டு இணைத்துவிட வேண்டும். இவ்வாறு இணைக்கப்பட்ட ஒரு சொல்லை அடுத்து, அதோடு தொடர்புடைய மற்றொரு சொல்லும் வந்தால் அதே கோட்டினால் அந்தச் சொல்லையும் இணைத்து விடுங்கள்

[உதாரணமாக 'சின்ன வீடு' (சின்ன + வீடு) என்ற சொற்களுக்குரிய எழுத்துக்கள் கோடிட்டு இணைக்கப்பட்டு 1 என இலக்கமிடப் பட்டிருப்பதைப் பாருங்கள்]

நீங்கள் கண்டு பிடித்து இணைத்த சொற்றொடர்களையும் இவ்வாறு 2, 3, 4...என இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் படிவத்தில் வரிசைப்படி இலக்கமிட்டு அவற்றை எழுதி அனுப்பவும். ஒரு முறை பேனாவினால் கோடிட்ட எழுத்துக்களை மறுமுறை உபயோகிக்கக் கூடாது.

எல்லா எழுத்துக்களையும் உபயோகிக்க வேண்டுமென்ற அவசியமுமில்லை.

ஆகக் கூடுதலான எழுத்துக்களைக் கொண்ட சொற்றொடரை எழுதி அனுப்புபவரே பரிசுக்கு உரியவர்.

★ இப்போட்டி அமரர் வன்னியசிங்கம் நினைவாக நடாத்தப்படுகிறது.

போட்டி விதிகள்:

★ இங்கு பிரசுரிக்கப்பட்டிருக்கும் படிவத்திலேயே விடைகளை எழுதி அனுப்பப்படவேண்டும்.

★ விடைகள் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

★ ஆகக் கூடுதலான தொகை எழுத்துக்களாலான நீண்ட சொற்றொடரை எழுதி அனுப்புபவரே பரிசைப் பெற உரித்துடையவர்.

★ ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஆகக் கூடுதலான ஒரே தொகை அளவு எழுத்துக்களைக் கொண்ட சொற்றொடர்களை எழுதியனுப்பி யிருந்தால் பரிசு அதிர்ட்டச் சீட்டு முறையில் தேர்ந்தெடுக்கப்படும்.

★ இந்தப் போட்டியில் வளர்மதி உறுப்பினர்கள் மட்டுமன்றி உறுப்பினரல்லாத வாசகர்களும் பங்குபற்றலாம். பரிசு பெறுபவர் வளர்மதி உறுப்பினராக இருந்தால் அவருக்கு வளர்மதி சிறப்புப் பரிசாக மேலும் 5-00 ரூபா கொடுக்கப்படும். வளர்மதி உறுப்பினர் அல்லாதவராக இருந்தால் அவருக்கு 5-00 ரூபா பரிசாக வழங்கப்படும்.

★ இப் போட்டியின் முடிவுத் திகதி 13-10-65.

★ கீழேயுள்ள முகவரியைக் கத்தரித்து கடித உறையில் ஒட்டி அனுப்பப்படும் விடைகள் மட்டுமே பரிசிலனைக்கு எடுக்கப்படும்.

★ இது வெறும் விநோதப் போட்டியே. பிரவேசக் கட்டணம் கிடையாது.

அமரர் வன்னியசிங்கம்
நினைவுப் போட்டி,
மேற்பா வளர்மதி,
த. பெ. எண் 1183,
கொழும்பு-12.

இன்பமுட்டும் 2வது வாரம்!

கிங்ஸ்லி பிளாஸா
நவா
விஜயா
[மட்டக்களப்பு]
ஸ்ரீகிருஷ்ணா
[திருகோணமலை]
மொடேர்ன்
[பதுளை]
மொடேர்ன்
[பண்டாரவளை]
லட்சுமி விஜிதா
[இரத்தினபுரி] [அட்டன்]
தீவொளி
[நுவரெலியா]

4வது வாரம்!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)

ஊர் அவளை ஏசுகிறது
உற்றார் அவளை ஒதுக்குகின்றனர்
அண்ணன் அவளை துறக்கிறான்
தங்கை அவளை வதைக்கிறாள்—இறுதியில்
தந்தையும் அவளை நோகிறார்

வேதனையால் வெதும்பும் அவளைக் காப்பாற்ற ஓடிவருகிறது ஒரு தெய்வம்

நல்ல கதை—உயர்ந்த நடிப்பு—சிறந்த தயாரிப்பு

ஸ்ரீ பொன்னி
புரொடக்ஷன்ஸ்

கைகொடுத்த தெய்வம்

சிவாஜி கணேசன், சாவித்திரி, ராஜேந்திரன், கே. ஆர். விஜயா, புஷ்பலதா,
எம். ஆர். ராதா, ரங்கராவ், சகஸ்ரநாமம், நாகையா நடித்தது

இப்பொழுது
காண்பிக்கப்படுகிறது!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)
வின்ஸர் [யாழ்ப்பாணம்] இம்பீரியல் [மட்டக்களப்பு] நெல்சன் [திருகோணமலை]
தாஜ்மஹால் [மாத்தளை]
ஆகிய திரைகளில்!

முத்துராமன், சந்திரகாந்தா,
சௌகார் ஜானகி, மனோரமா,
வி. கே. ராமசாமி, எஸ். ராமராவ்
டி. கே. ராமச்சந்திரன்
மற்றும் பலர் நடித்த

தித்திப்பான தமிழ்த் திரை விருந்து

விரைவில்
எதிர்பாருங்கள்!

சிவாஜி கணேசன்,
சரோஜாதேவி
சௌகார் ஜானகி,
நாகேஷ்
தோன்றும்

புதிய பறவை
[ஈஸ்ட்மென் கலர்]

ஆயிரக்கணக்கான மக்களை அனுதினமும் கவர்ந்து வரும்

7-வது வெற்றி வாரம்!

பார்த்தவர் பாராட்டுகின்றனர்! பார்க்காதோர் பார்க்கத் துடிக்கின்றனர்!

நீங்கள் இன்னும் பார்க்கவில்லையா? அப்படியானால்—இன்றே குடும்பத்துடன் சென்று பாருங்கள்!

தயாரிப்பு:
ஏ. எல். எஸ்
டைரக்ஷன்:
பீம்சிங்

சாந்தி

பாடல்கள்:
கண்ணதாசன்
இசை:
இரட்டையர்

சென்ட்ரல் (மருதானை) | ராணி (யாழ்ப்பாணம்) | சென்ட்ரல் (மன்னார்) | ஈஸ்வரன் (கிளிநொச்சி) | மீபுர (நீர்கொழும்பு) | சீகிரி (பண்டாரவளை)

உணர்ச்சி மிக்க நடிப்பு! உன்னத டைரக்ஷன்! உள்ளமுருக்கும் ஓவியம்!

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1965-ம் வருடம் செப்டெம்பர் மாதம் 19-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.